
மறை
ஞானப்பேழை
சத்தியம் வந்துவிட்டது !
அசத்தியம் அழிந்து விட்டது !
நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும் !
June 2024 ஜுன் 2024
Retail Selling Price 25
Page 1
Volume - 16, Issue - 04


# வெளிவந்துவிட்டது!

நாம் மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்த

**அல் – இக்துத் தராரீ ஃபீ ஷரஹிஸ்**

# ஸஹீஹி லில் இமாமில் புகாரீ

(முதல் பாகம்)



சங்கைமிகு குத்புல் ஃபரீத்,

**ஜமாலிய்யா அஸ்ஸையித்**

**யாஸீன் மௌலானா (ரலி)**

அவர்கள் அறபு மொழியில் ஆக்கியது.

**விலை ரூ. 1000/ – மட்டும் – (கொரியர் செலவு தனி.)**

**தொடர்புக்கு : 99437 86269 - 99445 76165**

---

## மறைஞானப் பேழை சந்தா விபரம்

| | |
|---|---|
| உள்நாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 300/- |
| வெளிநாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 3000 /- |

---

**சந்தாத் தொகை அனுப்ப, முகவரி மாற்றம், மற்ற விபரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய கை பேசி எண்கள்.**

**Cell : 9597912410 - 9944576165**

---

## விளம்பரக்கட்டணம்

| | ரூபாய் |
|---|---|
| முழுப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 1000 |
| முழுப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 10000 |
| அரைப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 600 |
| அரைப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 5000 |
| கால் பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 500 |
| கால் பக்கம் (ஆண்டு முழுவதும்) | 4000 |

மறை ஞானப் பேழை

Be in all and get the power of God

**ஆன்மிக மாத இதழ்**

**வெளியிடுவோர்**
**அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை**
பாகிரா காம்ப்ளக்ஸ்74, பழனிரோடு.
திண்டுக்கல் - 624 001.

**நிறுவனர்**
குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜுத், ஜமாலிய்யா
அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா
நாயகம் அவர்கள்.

**ஆசிரியர்**
கலீஃபா. S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ

**சிறப்பாசிரியர்**
கலீஃபா. A.N.M. லியாகத் அலி, B.Sc., B.L.,

**வெளியீட்டாளர்**
J. முஹம்மது ரஹ்மத்துல்லாஹ், B.A.,B.Com.,

**அச்சிட்டோர்**
R. விஜயலட்சுமி
ஸ்ரீ அக்னி அம்மன் அச்சகம்,
52, பழனிரோடு, திண்டுக்கல்.

**கணினி அச்சுக் கோவை**
ரிப்தா கம்ப்யூட்டர்ஸ் செல்: 99445 76165

செய்திகள் அனுப்பவேண்டிய முகவரி
**S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ**
**(கலீல் கம்ப்யூட்டர் கல்வி மையம்)**
13. எம்.ஆர்.ஆர். நகர்
திண்டுக்கல் - 624 002.
CELL : 99445 76165
Website:www.emsabai.org
email: aalimpulavar07@ gmail.com
email: j.mdrahmathulla@yahoo.com
https:www.emsmedia.net
https:www.awniyyabookstore.com
https:www.yaseenrali.com

# மறை ஞானப் பேழை

**ஷவ்வால்– துல்கஃதா**

**ஜூன் 2024**

**Volume - 16 Issue -4**

## பேழைக்குள்......

*ஜமாலிய்யா தோட்டத்தில் கொய்த மலர்*
*திருமறைப் பக்கம்.*
*அமுத மொழிகள்.*
*உமர் (ரலி) புராணம் – நயம்.*
*அறபு இலக்கிய வளர்ச்சி*
*திருமுல்லைவாசல் கந்தூரி.*
*அவ்ன் நாதர் பிரிவாலே!*
*காலத்தை வென்ற வலிமார்கள்!*
*குர்பானி – ஹஜ் – ஒரு பார்வை!*
*சற்குரு சரித்திரம்!*
*அருள் நபியின் திருக்கரம்!*
*ஷரீஅத் முதலா? முடிவா?*
*முத்தான மூன்று நாட்கள்!*
*ஷைகு படே ஸாஹிப் ஹள்ரத் (ரஹ்)*
*சிங்கப்பூரில் உதய நாள் விழாத் தொகுப்பு!*
*மற்றும் தொடர்கள்....*

# பதில் கூறும் காலமிது!

நாடே எதிர்பார்த்திருந்த 2024 தேர்தல் முவுகள்வெளிவந்துவிட்டன.

தமிழகத்தைப் பொறுத்தவரை தி.மு.க. கூட்டணி நாற்பதுக்கும் நாற்பது என்ற இலக்கை எட்டிவிட்டது.

இந்தியாவைப் பொறுத்தவரை இந்தியா கூட்டணி 235 இடங்களையும் பா.ஜ.க.290 இடங்களையும் பிடித்திருக்கின்றன.

யாரும் அசைக்கமுடியாத சக்தி  என மார்தட்டிக் கொண்டிருந்த பா.ஜ.க. கோட்டை கலகலத்துப் போயிருக்கிறது.

இப்போது அமைந்த இந்தியா கூட்டணி 2019 தேர்தலிலேயே அமைந்திருந் தால் நாட்டில் இத்தனை அராஜகம் அரங்கேறி இருக்காது.

காஷ்மீர் காப்பாற்றப்பட்டிருக்கும். சி.ஏ.ஏ. அமுல்படுத்தப்பட்டிருக்காது. பொதுசிவில் சட்டம், ஒரே நாடு ஒரே தேர்தல் கோஷமெல்லாம் எழுந்திருக்காது.

அதானி அம்பானிகள் வளர்ந்திருக்க மாட்டார்கள். ஏழைகளின் வாழ்க்கை மேலும் மேலும் நலிந்திருக்காது.

என்ன செய்ய? எதிர்க்கட்சிகளுக்கு இப்போதுதான் ஒற்றுமையின் பலம் புரிந்திருக்கிறது.

சரி..இப்போதும் பரவாயில்லை. பா.ஜ.க.வை ஆட்சியில் அமர விடக்கூடாது.

பா.ஜ.க. பெற்ற எண்ணிக்கையை இந்தியா கூட்டணியும், இந்தியா கூட்டணி பெற்ற எண்ணிக்கையை பா.ஜ.க.வும் பெற்றிருந்தால் இந்நேரம் அவர்கள் ஆட்சியில் அமர எல்லா தகிடுதத்தங்களையும் அனாயாசமாகச் செய்து ஆட்சியில் அமர ஆயத்தமாயிருப்பார்கள்.

அவர்கள் சென்ற அதே வழியில் இந்தியா கூட்டணி சென்று ஆட்சியில் அமர வேண்டும்.

நியாயம் தர்மம் என்பதெல்லாம் அநியாயவாதிகளிடம் பார்க்கக் கூடாது.

காங்கிரஸ் அமர வேண்டிய எத்தனை வாய்ப்புகளை அவர்கள் தட்டிப் பறித்திருப்பார்கள். அதற்கெல்லாம் பதில் சொல்லவேண்டிய சந்தர்ப்பம் இது.

இந்தியா கூட்டணி  செய்யுமா ? பொறுத்திருந்து பார்ப்போம்!

மறைஞானப் பேழை நிறுவனர்

**அஷ்ஷைகுல் காமில்**
**குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத்**
**ஜமாலிய்யா**
**அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மௌலானா**
**அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள்**



## மறைந்தோர்கள் தாமாய் மலர்ந்தெழும்நாமே!

**அஹ்மதிய மூலாதாரங் கொண்டு நான் இப்றாஹீமாகவும் இஸ்மாயீலாகவும் மூஸாவாகவும் துல்கிஃப்லாகவும் யூசுஃபாகவும் இஸ்ஹாகாகவும் யஉகூபாகவும் ஆனேன்.**

**அனைத்தைக் கொண்டும் அனைத்தானேன். சர்வத்தைக் கொண்டும் நிறைந்தேன். யான் அஹ்மதிய்ய தனித்துவத்தைக் கொண்டு விரிந்து தனித்த (ஒப்பற்ற)வனானேன்.**

*– கஸீதத்துல் அவ்னிய்யா நூலில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –*

# ஜமாலிய்யா தோட்டத்தில்

**வலிமார்கள் என்றால் யார் ?**

வலிமார்கள் என்றால் வித்தை செய்பவர்கள் என (த்தவறாக) விளங்கி வைத்துள்ளனர்! தம்மை அல்லாஹ்வுக்காக தியாகம் செய்தவர்கள் தாம் வலிமார்கள் !

**மனோசக்தி அவசியமா ?**

உலகத்தில் மிக்க சக்தி மனிதனுக்கே ஹக்கு கொடுத்துள்ளது. தானே தன் பயத்தால் சக்தி இழந்தவனாய் மாறிக் கொள்கிறான் மனிதன். மனதில் பூரண சக்தியைக் கொள்ளுங்கள், எதுவும் உங்களுக்கு நிகராகாது ! தன்னை இயலாதவன் எனக் கருதுவது தௌஹீதுக்கு மிகவும் முரணானது. திடச் சித்தம் மிகவும் அவசியமாகும்... முடியாதது ஒன்றுமில்லை, மனிதன் நாடினால் மலையையும் புரட்டலாம் !

**மனச்சாந்தி பெற வழி என்ன?**

எந்தச் செயல்கள் ஏற்பட்டாலும் எல்லாம் ஹக்கே செய்கிறது. நடக்கிறது நடக்கும், நடக்க வேண்டியது நடந்து விட்டது எனும் முடிவுக்கு வந்து சாந்தியடைய வேண்டும். இதுவே இதற்கு வழியாகும்.

**பாபவிமோச்சனம் பெற வழி என்ன ?**

மனிதனாகப் பிறந்த எவனும் குற்றத்துக்கு உரித்தானவனே. உணர்ந்தபின் அதைத் தொடர்ந்தும் செய்யாதிருப்பது மனிதபண்பு. ஆதலால் குற்றங்குறைகளை நாம் அறிந்து உண்மைப் பிரகாரம் நாம் நடந்து கொள்வது ஹக்கின் பொருத்தத்திற்கு இடமாகும். அதே பிழைபொறுப்பும் மன்னிப்புமாகும்.

**ஹஜ் செய்வது எல்லோர்மீதும் கடமையா ?**

பணவசதியுள்ளவர்கள் அவசியம் ஹஜ்ஜுக்குப் போக வேண்டும். அங்கு போனால் முக்கியமானது எம்பெருமானார் ரஸூல்நாயகம் அவர்களைச் சந்திப்பதாகும். அவ்வாறு செய்பவர்கள் எம் மனதை குளிர வைப்பவர்கள். எம் பாட்டனார் பரிபூரணமானவர்கள். அவர்கள் ஹயாத்துடனிருக்கிறார்கள். அனைத்து புகழும் எம்பெருமானாருக்கே!

*– சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –*



**கொய்த மலர்**

# தாஜுத் தர்ஜுமா

# மொழி பெயர்ப்புகளின் மகுடம்

**(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் மொழி பெயர்ப்பு.)**

فَوَيْلٌ لِّلَّذِينَ يَكْتُبُونَ الْكِتٰبَ بِأَيْدِيهِمْ ثُمَّ يَقُولُونَ هٰذَا مِنْ عِنْدِ اللّٰهِ لِيَشْتَرُوا بِهٖ
ثَمَنًا قَلِيلًا

அவர்கள் தங்கள் கைகளைக் கொண்டே நூலை எழுதிப் பின்னர் அதனைக் கொஞ்சவிலைக்கு விற்பதற்காக, இந்நூல் அல்லாஹுவிடமிருந்து, (வந்து)ள்ளது எனக் கூறும் அவர்களுக்கே கேடு.

فَوَيْلٌ لَّهُمْ مِّمَّا كَتَبَتْ أَيْدِيهِمْ

(மாற்றமான விடயங்களை) அவர்களின் கைகள் எழுதிய (அந்த ஒரு காரணத்தினாலும் அவர்களுக்கே கேடு.

وَوَيْلٌ لَّهُمْ مِّمَّا يَكْسِبُونَ ۝ ٧٩

(மாறுபாடாக அதிலிருந்து) அவர்கள் பொருளீட்டுவதனாலும் அவர்களுக்கே கேடு.

وَقَالُوا لَنْ تَمَسَّنَا النَّارُ إِلَّا أَيَّامًا مَّعْدُودَةً

கணிக்கப்பட்ட சின்னாட்களே தவிர்த்துத் தீ எம்மைத் தொடாது என்று அவர்கள் கூறினார்கள்.

قُلْ أَتَّخَذْتُمْ عِنْدَ اللّٰهِ عَهْدًا

(நபியவர்களே, நீங்கள் அவர்களிடம்) அல்லாஹுவிடத்து நீங்கள் (ஏதேனும்) வாக்குறுதி பெற்றிருக்கிறீர்களா? எனக் கேளுங்கள்.

فَلَنْ يُّخْلِفَ اللّٰهُ عَهْدَهٗ

அவ்வாறேயாயின், அல்லாஹ் அவன் தனது வாக்குறுதியிலிருந்தும் மாறமாட்டான்.

اَمۡ تَقُوۡلُوۡنَ عَلَى اللّٰهِ مَا لَا تَعۡلَمُوۡنَ ۝٨٠ ٨٠

அல்லது அல்லாஹுவின் மீது (பொய்யாக) நீங்கள் அறியாததைக் கூறுகிறீர்கள் (என நபியே நீங்கள் அவர்களிடத்துக் கேளுங்கள்.)

بَلٰى مَنۡ كَسَبَ سَيِّئَةً وَّاَحَاطَتۡ بِهٖ خَطِيْٓـــَٔتُهٗ فَاُولٰٓـئِكَ اَصۡحٰبُ النَّارِ‌

ஆம். எவர் கெடுதியைச் சம்பாதித்து அவர் செய்த குற்றம் அவரைச் சூழ்ந்து கொண்டதோஅன்னவர்கள் நரகத்தை யுடையவர்கள். (நரக வாசிகள்)

هُمۡ فِيۡهَا خٰلِدُوۡنَ ۝٨١ ٨١

அவர்கள் அதிலே நித்தியமாய்த் தங்குவார்கள்.

ع ٩

وَالَّذِيۡنَ اٰمَنُوۡا وَعَمِلُوا الصّٰلِحٰتِ اُولٰٓـئِكَ اَصۡحٰبُ الۡجَـنَّةِ‌ هُمۡ فِيۡهَا خٰلِدُوۡنَ ۝٨٢ ٨٢

நம்பிக்கை கொண்டு நல்வினை செய்தார்களே அவர்கள் சுவர்க்கத்தையுடையவர்கள். (சுவர்க்க வாசிகள்) அவர்கள் அதிலே நித்தியமாய்த் தங்குவார்கள்.

---

**(ஆ.கா. அப்துல் ஹமீது பாக்கவி அவர்களின் மொழி பெயர்ப்பு)**

79. எவர்கள் தங்கள் கைகளைக் கொண்டு (கற்பனையாக) எழுதிய புத்தகத்தை ஒரு சொற்பக் கிரயத்தை அடைவதற்காக இது அல்லாஹ்விடமிருந்து வந்ததுதான் என்று கூறுகிறார்களோ அவர்களுக்குக் கேடுதான். (அதை) அவர்களுடைய கைகள் எழுதியதனாலும் அவர்களுக்குக் கேடுதான். அவர்கள் (அதைக்கொண்டு பொருள்) சம்பாதிப்பதாலும் அவர்களுக்குக் கேடுதான்.

80. ஒரு சில நாள்களுக்கே தவிர நரக நெருப்பு எங்களைத் தீண்டவே செய்யாது என அவர்கள் கூறுகிறார்கள். (அதற்கு நபியே அவர்களை) கேட்பீராக. அல்லாஹ்விடம் ஏதேனும் (அவ்வாறு) ஓர் உறுதி மொழியை நீங்கள் பெற்றிருக்கிறீர்களா? அவ்வாறாயின் நிச்சயமாக அல்லாஹ் தன் வாக்கு மாறமாட்டான். அல்லது நீங்கள் அறியாததை அல்லாஹ்வின் மீது (பொய்) சொல்கிறீர்களா?

81. அவ்வாறன்று எவர்கள் பாவத்தையே சம்பாதித்துக் கொண்டிருந்து அவர்களுடைய பாவம் அவர்களை சூழ்ந்து கொண்டதோ அவர்கள் (யாராக இருப்பினும்) நரகவாசிகளே அதில்தான் அவர்கள் என்றென்றும் தங்கிவிடுவார்கள்.

82. ஆனால் எவர்கள் (இவ் வேதத்தை) உண்மையாகவே நம்பிக்கை கொண்டு நற்காரியங்களைச் செய்கிறார்களோ அவர்கள் சொர்க்கவாசிகளே அதில் அவர்கள் என்றென்றும் தங்கிவிடுவார்கள்.

## திருக்குறள்

**மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்**
**சொல்லினாற் தேறற்பாற் றன்று. (825)**

மனத்தாலே நம்மோடு நெருக்கம் கொள்ளாதவரை எந்த ஒரு வகையாலும் அவர் சொல்லினால் மட்டுமே நல்ல நண்பராகத் தெளிந்து கொள்ளக் கூடாது .

**கல்லாமை அச்சம் கயவர் தொழிலச்சம்**
**சொல்லாமை உள்ளுமோர் சோர்வச்சம் - எல்லாம்**
**இரப்பார்க் கொன்றீயாமை அச்சம் மரத்தாரிம்**
**மாணாக் குடிப்பிறந் தார். (145)**

மாண்பற்ற தாழ்குடியில் பிறந்தவர், படிக்காத அச்சம், கயமைத் தொழில் செய்யும் அச்சம், நல்லோர் அவை நடுவே ஒன்றும் பேசவியலாமையை எண்ணிச் சோர்ந்து போகும் அச்சம், எல்லாமே இரப்பவர்க்கு ஒன்றும் கொடுக்க முடியாத அச்சம் ஆகிய அச்சங்களை உணராத மரக்கட்டைகளாய் மரத்துப் போவர். *(நாலடியார்)*

## இரு மாதச் சிறப்பு தினங்கள்

**பிறை**

**ஷவ்வால்**

1 ஈதுப் பெருநாள்

3 புகாரி தங்கள் கந்தூரி

16. **சங்கைமிகு ஜமாலிய்யா அஸ்ஸெய்யிது கலீல் அவ்ன் மௌலனா அல் ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் உதயம்.**

25. ஹைதராபாத் அப்துல் காதிர் ஸூஃபி ஹள்ரத் உரூஸ்

ذُو القَعْدَة

7. திருமுல்லைவாசல் யாஸீன் மௌலானா (ரலி) கந்தூரி.

23 ஏர்வாடி சையிது இப்றாஹீம் ஷஹீது (ரலி) கந்தூரி

சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்களின்

# அமுத மொழிகள்



**நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் ஆத்ம உலகக் காட்சி பற்றி ஷைகு நாயகம் அவர்களின் அரிய விளக்கம் !**

( "இப்றாஹீம் உறுதிகொள்ளும் பொருட்டு, வானங்களிலும் பூமியிலுமுள்ள (நம்முடைய) சிருஷ்டிகளை நாம் அவருக்கு இவ்வாறு காண்பித்து வந்தோம்"

"(ஒரு நாள்) இருள் சூழ்ந்த இரவில், (பிரகாசித்துக் கொண்டிருந்த) ஒரு நட்சத்திரத்தை அவர் கண்டு" இது என்னுடைய இறைவன் (ஆகுமா?)" எனத் தம் மக்களைக் கேட்டு, அது மறையவே, "மறையக் கூடியவற்றை" (இறைவனாக்கிக் கொள்ள) நான் விரும்ப மாட்டேன் எனக் கூறி விட்டார்."

"பின்னர் உதயமான சந்திரனைக் காணவே, "இது என்னுடைய இறைவன் (ஆகுமா?) எனக் கேட்டு, அதுவும் மறையவே (அதனையும், நிராகரித்து விட்டு) "என் இறைவன் என்னை நேரான வழியில் செலுத்தாவிடில், வழிதவறிய ஜனங்களில் நிச்சயமாக நானும் ஒருவனாகி விடுவேன்" என்று கூறினார்."

"பின்னர் உதயமான (பேரொளியுடன் பிரகாசிக்கும்) சூரியனைக் கண்டபொழுது, "இது மிகப் பெரியதாயிருக்கிறது. இது என்னுடைய இறைவன் (ஆகுமா?) எனக் கேட்டு அதுவும் மறையவே அவர் (தம் மக்களை நோக்கி) "என் மக்களே ! நீங்கள் (இறைவனுக்கு) இணையாக்கும் (இவை) ஒவ்வொன்றிலிருந்தும் நிச்சயமாக நான் விலகிக் கொண்டேன்" என்று கூறிவிட்டு,

"வானங்களையும் பூமியையும் எவன் படைத்தானோ அ(ந்த ஒரு) வனின் பாலே நிச்சயமாக நான் முற்றிலும் நோக்குகிறேன். நான் (அவனுக்கு எதனையும்) இணைவைப்போன் அன்று" என்று கூறினார்."

(அல்குர் ஆன் 6:75,76,77,78,79)

# அமுத மொழிகள்

*(மேற்கண்ட திருவசனங்களுக்கு சங்கைக்குரிய நமது ஷைகு நாயகம் அவர்கள் அருளிய (ஹக்கீகத்தான) யதார்த்தமான உள்ரங்கமான விளக்கங்களை வாசகர்களுக்கு அப்படியே இங்கு வழங்குவதில் பெரு மகிழ்வு கொள்கிறோம். – ஆசிரியர்.)*

ஹக்குப் பரிசுத்த குர்ஆனில் ஹிக்மத்தைக் கையாண்டுள்ளது. ஹக்கின் “பைளை” அடையாத பொது மனிதர்களுக்கு அதன் வெளிரங்கமான அறிவு உபயோகப்படுகிறது. ஹக்கின் “பைளை” அடைந்த ஆத்ம ஞானிகளுக்கு அதன் உட்கருத்து ஹக்கை அடையப் பெருந்துணைபுரிகிறது.

ஹக்குஸுப்ஹானஹு தஆலா கூறியவற்றிலும், நம் பாட்டனார் ரஸூலுள்ளாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியவற்றிலும் இருவகைப்பட்ட கருத்துக்கள் அமைந்துள்ளன. பொது மக்களிடத்துப் பொதுவான கருத்தையும் வெளிரங்கமான கருத்தையும் விசேஷமான மக்களிடத்து விசேஷமான (உள்ரங்கமான) கருத்தையும் தேவையான நேரங்களில் வெளியிட்டார்கள்.

ஹக்கு கூறுகிறது;

நாம் இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு வானத்தினுடையவும் பூமியினுடையவும் ஆத்ம (அமர) உலகத்தைக் காட்டினோம். அமர உலகமாவது; சக்தி பொருந்திய ரூஹானிய்யத்தான உலகமாகும். வானத்தினதும் பூமியினதும் நிர்வாகம் ரூஹின் சக்தி கொண்டே (ஹக்கால்) நடக்கிறது. எனவே ஒவ்வொரு பொருளுக்கும் மலக்கூத்தின் சக்தி (மலக்கூத் என்னும் சக்தி) இருக்கிறது. அது அதனைக் காப்பாற்றுகிறது. (அதன்) பொருளின் கருமத்தை நிர்வகிக்கிறது. ரூஹானிய்யத் மலக்கூத் இரண்டும் ஒன்றாகும். அவர்கள் மீது இருள் இருண்ட போது நட்சத்திரத்தைக் கண்டார்கள். அதாவது ஹகீகத்தை அறிகிறதின் பால(ப்) பருவத் (ஆரம்ப காலத்) தில் இயற்கையான சடலத்தின் உலகத்திலே இருள் எனும் சந்தேகம் உண்டானபோது மானிட கோலத்தின் மலக்கூத்தாகிய ஆத்ம உலகத்தைக் கண்டார்கள். அதுவே நப்ஸ் அல்லது ரூஹு ரௌஹானிய்யத் என்னும் எண்ணத்தினை “ரப்பு” ஆகக் கொண்டார்கள், அதிலே ஹக்கின் அருளையும் சீவனையும் ருபூபிய்யத்தையும் கண்டார்கள். இதில் “முஹிய்யு” என்னும் நாமத்தைக் காட்டியருளியது. எனவே இங்கே கவ்கபு (நட்சத்திரம் என்பது நப்ஸ் ஆகும். நப்ஸையே ரப்பாகக் கண்டார்கள். மறைந்த பொழுது அவர்கள் சொன்னார்கள் ; மறைகிறவற்றை நான் உகக்க மாட்டேன் என்று ; அதாவது :-

# அமுத மொழிகள்

இங்கே மறைதல் என்பது நப்ஸினுடைய தானத்தை அடைந்து அதைக் கடந்த பின்பு அதை ரப்பு அல்ல எனக் கண்டார்கள். சந்திரனை உதிக்கிறதாகக் கண்டபோது இது என்னுடைய ரப்பு என்றார்கள். அதாவது இங்கே, நப்ஸின் தானத்தை விட உயர்ந்த தானமாக கல்பின் தானத்தைக் கண்டார்கள் (கல்புல் முஉமினி அர்ஷுல்லாஹ்) இங்கே கமரு (சந்திரன்) என்பது கல்பு ஆகும். எனவே கல்பையே ரப்பாகக் கண்டார்கள். இதிலே ஹக்கின் நாமங்களான ஆலிம், ஹகீம் என்பனவற்றைக் காட்டியருளியது.

முன்போல் கல்பின் தானத்தை அடைந்து அதைக் கடந்த பின்பு கல்பையம் ரப்பு அல்ல எனக் கண்டார்கள். சூரியனை உதிக்கிறதாகக் கண்டபோது அவர்கள் சொன்னார்கள். இது மிகப்பெரியது; இதுவே என் ரப்பாகும் என்றார்கள். அதாவது :- கல்பின் தானத்தை விட உயர்ந்த தானமாக ரூஹின் தானத்தைக் கண்டார்கள். இதிலே ஹக்குத் தன் நாமங்களான ஷஹீது அலிய்யு அளீமு ஆகிய நாமங்களைக் காட்டியருளியது.

முன் போல் ரூஹின் தானத்தையும் அடைந்து அதனையும் கடந்த பின்பு: "கூட்டமே நீங்கள் இணைவைக்கிற பொருள்களில் நின்றும் நான் நீங்கிக் கொண்டேன்" என்றார்கள். பின்பு அல்லாஹ் மவ்ஜூது பில்வுஜூது எனும் தானத்தை அடைந்து இன்னீ வஜ்ஜஹ்து என்பதைக் கூறினார்கள். இதுவே எமதும் பாதினிய்யத் (உள்ரங்கம்) தான விடையாகும். இறைவனே மிகவும் அறிந்தவன் இதுவே நமது நிர்ணயமுமாகும். இங்கே கவ்கபு-நப்ஸ், கமரு-கல்பு, ஷம்ஸு-ரூஹு

*திண்டுக்கல் கலீபா S. அப்துல் கரீம் (ஜமாலி) அவர்களுக்கு எழுதப்பட்ட பட்டோலையிலிருந்து.)*

---

மனிதர் ஜின் ஆகிய ஈரினத்தாரும் சேர்ந்து செய்யும் மொத்த வணக்கத்தின் அளவுக்கு ஒருவன் இபாதத்துச் செய்தாலும் அவனிடத்தில் அணுவளவேனும் அகங்காரம் குடிகொண்டிருந்தால் அவன் அல்லாஹ்வுக்கும் நபி பெருமானார் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் மாறுசெய்த பகைவர்களின் ஏட்டில்தான் எழுதப்பெறுவான்.

இறைவனைத் தவிர உள்ள ஏனைய அனைத்தையும் விட்டு உன் இதயத்தை வெறுமையாக்கு. பின்னர் உனக்குத் தேவையான குர்ஆனின் வசனம் ஒன்றை உச்சரிக்கும் போது கண்ணிமைக்கும் நொடியில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிப் பறப்பாய். **(ஹள்ரத் பாயஸீதுல் பிஸ்தாமீ-ரஹ்)**

# உமர் ரலி புராணம்

*(நேரிசை வெண்பா)*

**நீர்மொள்ளப் பொய்கையில் நேர்சாலை போய்வரவில்**
**ஆர்கலியுங் கிட்டி லருநீரைத் - தீர்த்தமாய்**
**நல்கிடுந் தெங்கி னறுநுங்கி றாலமில்**
**புல்லிற் சுரத்தே புரி.**

## பொருள் :

நீர் கொள்ளத் தடாகம் இல்லை. போய் வருதற்குச் செம்மையான பாதை இல்லை. கடலும் அணுகியில்லை. அருமையான நீரைத் தீர்த்த மாகக் கொடுக்கும் தென்னை மரமும் இல்லை. இனிமையான நுங்கை யுடைய பனையு மில்லை. அப்பாலை வனத்தே புல்லும் இல்லை. புரிவாயாக.

## குறிப்பு:

மொள்ளுதல்: முகத்தல், கொள்ளல், எடுத்தல். பொய்கை: தடாகம். நேர்: செம்மையான. சாலை: பாதை. ஆர்கலி: கடல். கிட்டு: கிட்டே. அரு: அருமை. தீர்த்தம்: நீர்: புண்ணிய தீர்த்தம். நல்குதல்: கொடுத்தல். தெங்கு:தென்னை. நறு: இனிய. தாலம்: பனை. இல்: இல்லை.

ஒரு நாடு, ஓர் ஊர் என்றால் அதில் பொய்கை எனப்படும் நீரைத் தேக்கிவைத்திருக்கும் தடாகம் இருக்கும், எங்கும் எண்ணியவுடன் சென்றுவர நல்ல பாதை இருக்க வேண்டும் இதுவும் இல்லை, குளம் போன்ற தடாகம் தான் இல்லையென்றால் ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கும் கடலும் அருகில் இல்லை, சரி, தண்ணீரைத் தனக்குள் தேக்கிவத்துத் தருகின்ற தென்னை மரமுமில்லை, அது போல இனிக்கும் நுங்கு தரும் பனை மரமும் இல்லை. அதுதான் இல்லை என்றால் பசுமையாகக் கண்ணுக்குக் குளுமையாகக் காட்சி தரும் புற் பூண்டும் இல்லை.

இலக்கியத்தில் நாட்டு வருணனையில் போற்றிக் கூறப்படும் எதுவும் இல்லை யென்பதை படிப்படியாகக் கூறி பாலை வனத்தைக் கண்முன்னே கொண்டுவரும் அருமையான பாட்டு.

**மூட(ம்) நிறைந்தவொரு மூர்க்கக் குறைநாடாய்**
**கூடா வினைகளும் கூடியே - நீடினவால்**
**நன்னிலையை யிந்நாடு நண்ணிடவே யோர்ந்திலையே**
**பன்னாளும் பட்டதே பாடு.**

**பொருள் :**

மடமை நிறைந்த மூர்க்கமுள்ள குறை நிறைந்த ஒரு நாடாயதால் கூடாச் செயல்கள் அதிகப்பட்டு அவ்வாறே அவை நீடித்திருந்தமையால் நல்ல நிலையை இந்நாடு அணுகச் சிந்திக்க வில்லையே. அதனாற்றான் பல காலமும் இது பாடுபட்டதே.

**குறிப்பு:**

மூடம்: மடமை. மூர்க்கம்: கொண்டதை விடாத்தன்மை. கூடா: நல்லன வல்லவை. வினைகள்: செயல்கள். கூடாச் செயல்கள், கெட்ட செயல்கள். நண்ணிடல்: கிட்டிடல். ஓர்தல்: நினைத்தல்.

அறியாமை நிறைந்த மக்கள் வாழ்ந்ததால் எதையும் முன் யோசனையின்றி முரட்டுத்தனமாகவும் மூர்க்கத்தனமாகவும் அணுகியதோடு, அதனால் ஆகாத செயல்கள் அதிகம் புரிந்து நிறைந்த குறை நிறைந்த நாடாக அது தொடர்ந்து இருந்ததால் நல்லது எது? கெட்டது எது என்ற சிந்தனையே இல்லாமல், மக்கள் மாக்களாக இருக்க அதனால் பல கஷ்டம் வேதனையில் பல நூறு ஆண்டுகள் துயரப்பட்டது.

## தாஹா நபிகளாரும் தங்க மகளாரும். .

ஃபாத்திமா (ரழி) அன்ஹா அவர்கள் தமது ஆருயிர்தந்தை ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைச் சந்திக்க வரும்போது ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மகிழ்ச்சிப் பெருக்குடன் எழுந்து நின்று பத்திமா (ரழி) அன்ஹா அவர்களை வரவேற்பார்கள். பிறகு ஃபாத்திமா அவர்களுக்கு முத்தமிட்டு மகாளரை தனது இடத்தில் அமரவும் வைப்பார்கள்.

*(ஆயிஷா ஸித்தீக்கா (ரழி) அன்ஹா – அதபுல் முஃப்ரத்)*

*(சங்கைமிகு குத்புல் ஃபரீத், ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா (ரலி) அவர்களின் வானொலிப் பிரசங்கமான "அறபு இலக்கிய வளர்ச்சி" எனும் நூல் தேடற்கரிய செய்திகளைக் கொண்ட தகவல் களஞ்சியமாக இருப்பதால் அதன் முக்கியப் பகுதிகளைத் தொடராக வெளியிடுதில் மகிழ்ச்சியடைகிறோம். வாசகர்கள் படித்துப் பயன் பெறுவார்களாக.)*

# அறபு இலக்கிய வளர்ச்சி

**பண்டைய அறபிகளின் அறிவுத் துணுக்குகள்.**

© மனிதர்களின் வீழ்ச்சி அவர்களின் பேராசை மின்னியதற்குக் கீழாயிருக்கும்.

© நாவினால் உண்டாகும் காயம் ஈட்டியினா லுண்டாகும் காயத்தைப் பார்க்கிலும் வேதனை மிக்கது.

திருக்குறளையும் நோக்குக. அது கீழ்வருமாறு:

**"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு."**

© எத்தனையோ அவசரம் தாமதத்தை வருத்துகிறது.

© கண்டித்தல் தண்டித்தலுக்கு முன்.

© பாப மன்னிப்புத் தேடல் பாபத்தைக் கழுகிவிடும்.

© ஆலோசனை உறுதிகொள்ள முன்பாகும்.

© சுதந்தர புருஷன் வாக்கை நிறைவேற்றுவான்.

© தீங்கை நீ விட்டு விடு. அது உன்னை விட்டு விடும்.

© (கஷ்டமான வாழ்க்கை நடத்துபவனின் நா வித்திரண மடையும். மனக்கஷ்டம் உடையோனின் நா வித்திரணமாகும்). மனக்கஷ்டம் உடையோனின் நா வித்திரண மான தாகும்.

© சூகைக் கையாயினும் உன் கை உன்னுடையதாகும்.

© எத்தனையோ பழிப்புக்குரியவன் அவனுக்குப் பாபமில்லை.

இவை போன்ற அறிவுத் துணுக்குகள் இலக்கிய வளம் பெற அமைந்துள்ளன.

ஹானீ பின் கபீஸா வென்ற பிரசங்கி யுத்த காலத்திலும் தம் மனிதருக்குச் செய்த உபதேசம் வருமாறு:

© பக்ரு வகுப்பினரே, பயந்து மறைகிறவன் தப்பியோடுகிறவனை விட நல்லவனாவான்.

© அச்சம் விதியிலிருந்து தப்பவைக்காது.

© பொறுதி ஜயத்தின் காரணங்களிலுள்ளது.

© மரணத்தை விரும்பு கேவலத்தை விரும்பாதே.

© மரணத்தை எதிர்பார்த்தல் அதைப் பிற்படுத்துவதைப் பார்க்க நன்று.

© ஆயுதக் குத்துகளை நெஞ்சுக் குழியில் வாங்குதல் புட்டணங்களிலும், முதுகுகளிலும் வாங்குவதை விட மேலானதாகும்.

© பக்ரின் மக்களே, மரணத்திலிருந்து தப்ப முடியாது. யுத்தம் புரியுங்கள்!

அன்றைய அறபிப் பெண் ஒருத்தி தன் மகளின் விவாக இரவில் மகளுக்குச் செய்த உபதேசம், இனிய இலக்கியத் தேன் சுவை மிக்கதாயும் அபூர்வ அறிவு நிறைந்ததாயுமுளதால் அதைக் கீழே தருகிறோம். அது:

மகளே, நீ வெளிவந்த ஆகாயத்தைப் பிரிந்தாய்; நீ வளர்ந்த கூட்டை விட்டு அறியாத கூட்டுக்கும் நீ பழக்கமில்லாத நண்பன் ஒருவனிடத்தும் போகிறாய்.

எனவே பத்துக் கருமங்களைச் சுமந்து செல். அவை உனக்குத் தங்கரியமாயிருக்கும். (வரும்)

---

***ஒரு தடவை ஆயிஷா ஸித்தீக்கா (ரழி) அவர்கள் தமக்குக் கிடைத்த எழுபதாயிரம் திர்ஹம்களையும் ஸதகா செய்தார்கள். அப்போது அவர்களை நான் கண்டேன். அம்மையாருடைய ஆடை கிழிந்த நிலையில் ஒட்டுப் போடப்பட்டிருந்தது.***

***(உர்வா இப்னு சுபைர்ரலியல்லாஹ் – அஸ்ஸுஹ்த் வல்ரகாஇக், லி இமாமி அப்துல்லாஹ் இப்னு முபாரக்)***

# திருப்பேரரின் திருவருகை!

சங்கைமிகு, குத்புஸ்ஸமான், ஷம்ஸுல்வுஜுத், ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்) அவர்களின் திருப்பேரர், சங்கைமிகு ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள், 23.5.2024 வியாழன் அன்று இலங்கையிலிருந்து இந்தியா வருகைதருமுகமாக திருச்சிக்கு விஜயம் செய்தார்கள். அவர்களை கலீபாக்கள் முரீதுகள் நிர்வாகிகள் அன்போடும் ஆனந்தத்தோடும் வரவேற்றார்கள்.

இளைய நாயகம் அவர்கள் மதுரஸா சென்று தங்களின் பாட்டனார் அவர்களின் ஜியாரத்தை முடித்து திருச்சி பைத்துல் உரஃபாவில் தங்கிய அவர்களை உள்ளூர் வெளியூர் முரீதுப்பிள்ளைகள் சந்தித்து மகிழ்ந்தார்கள். 24. 5. 2024. வெள்ளிக்கிழமை மக்ரிபுக்குப் பின் பைஅத் நடைபெற்றது. மறுநாள் 25.5.2024. காலை சையிதுனா யாஸீன் நாயகம் (ரலி) அவர்களின் ஜியாரத்துக்காக திருமுல்லை வாசல் புறப்பட்டார்கள். அங்கு தங்களின் உறவினர்களான சங்கைமிகு மர்ஹூம் சையிது மஸ்ஊத் மௌலானா அல்ஹாதீ அவர்களின் திருக்குடும்பத்தார், சங்கைமிகு சையித் அலி மௌலானா, சங்கைமிகு யாஸீன் மௌலானா, மற்றும் உறவினர்களை சந்தித்து மகிழ்ந்தார்கள்.

மக்ரிபுக்குப்பின் பைஅத்தும் நடைபெற்றது. கந்தூரி நிகழ்ச்சிகளில் கலந்து ராதிபு, மௌலிது ஓதியபோது சங்கைமிகு வாப்பா நாயகம் அவர்கள் ஓதுவதுபோன்று ஒலித்த குரலோசையால் பக்தர்கள் ஆச்சரியத்திலும் ஆனந்தத்திலும் திளைத்தனர்.

26.5.24 ஞாயிற்றுக் கிழமை காலை சம்பைப்பட்டினம் தர்ஹாவுக்கு விஜயம் செய்து தங்களின் அப்பா நாயகம் கௌதுஸ்ஸமான் அஸ்ஸையித் முஹம்மது ஜமாலிய்யா மௌலானா (ரலி) அவர்ளை களிப்போடு ஜியாரத் செய்தார்கள். மதுக்கூருக்கும் விஜயம் செய்தார்கள். 27.5.24 திங்கட்கிழமை மதியம் திருச்சியிலிருந்து விமானம் மூலம் புறப்பட்டு இலங்கை திரும்பினார்கள்.

சங்கைமிகு இளைய நாயகம் அவர்களின் வருகை முரீதுப்பிள்ளைகளுக்கு புதிய உற்சாகத்தையும். நம்பிக்கையையும், வாப்பா நாயகம் அவர்களுடன் இருப்பதே போன்ற சந்தோஷத்தையும் நல்கியது.

இளைய நாயகம் அவர்களுடன் கலீபா. எம். சிராஜுத்தீன் ஹக்கிய்யுல் காதிரி, ஜனாப். எஸ்.ஐ. தவ்லத் ஹக்கிய்யுல் காதிரி, கே. அய்னுல் ஹக்ஹக்கிய்யுல் காதிரி, மற்றும் முரீதுகள் உடன் இருந்தனர்.

# ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா நாயகம் (ரலி) அவர்களின் 60 ஆம் ஆண்டு புனித கந்தூரி விழா.

சங்கைமிகு குத்புல் ஃபரீத், கௌதுல் வஹீத். ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் (ரலி) அவர்களின் 60 ஆம் ஆண்டு உரூஸ் கந்தூரி விழா, திருமுல்லைவாசல் தர்ஹா ஷரீபில் துல்கஃதா பிறை 7 (5.5.24) கொடியேற்றத்துடன் தொடங்கி, பிறை17 (25.5.24) சனிக்கிழமை மாலை ஞாயிறு இரவு சிறப்பாக நடைபெற்றது.

கந்தூரி விழாவிற்கு இலங்கையிலிருந்து வருகை புரிந்த சங்கைமிகு ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்) அவர்களின் திருப்பேரர், சங்கைமிகு ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள் தலைமை தாங்கினார்கள். திருமுல்லைவாசல் சங்கைமிகு சையித் அலி மௌலானா, சங்கைமிகு யாஸீன் மௌலானா, மற்றும் திருக்குடும்பத்தார் முன்னிலை வகிக்க, தரீகத்துல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யா கலீபாக்கள் முரீதுகள்,ஏகத்துவ மெய்ஞ்ஞானசபை உறுப்பினர்கள், குறிப்பாக, யாஸீன் நாயகம் அவர்களின் வரலாறை, திருப்புகழை, நாளிதழ்களிலும், தொலைக்காட்சிகளிலும் சிரத்தையோடு எடுத்துச்செல்லும் வழுத்தூர் சகோதரர்கள் அறிவியல் அறிஞர். எம்.ஜே.முஹம்மது இக்பால் பி.இ.எம்.பி.ஏ. ஹக்கிய்யுல் காதிரிய், எம்.ஜே. அப்துர்ரவூப் ஹக்கிய்யுல் காதிரிய், மற்றும் பலநாடுகளிலிருந்தும், பல ஊர்களிலிருந்தும் வந்து திரளாகக் கலந்து கொண்டனர்.

கந்தூரி உணவு காலை 10 மணிக்கு ஜமாஅத்தார்களுக்கு வழங்கப்பப்பட்டது. தர்காஹ் ஷரீபில், காலை 11 மணிக்கு சங்கைமிகு யாஸீன் (ரலி) மௌலிதும், அஸருக்குப்பின் ஸுப்ஹான மௌலிதும், மக்ரிபுக்குப் பின் ராதிபு , கஸீதாக்களும் ஓதப்பட்டன. ரவ்ழா ஷரீப் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு சந்தனமும் பூசப்பட்டது. விழாவுக்கு வருகை புரிந்தவர்களுக்கு மூன்று வேளை உணவும், கந்தூரி உணவும், தப்ரூக்கும் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை திருக்குடும்பத்தார் தலைமையில், தர்ஹா கமிட்டியார் , திருச்சி யாஸீன் ஹக்கிய்யுல் காதிரி, மற்றும் யாஸீனிய் ஆலிம்கள், முரீதுப்பிள்ளைகள் சிறப்பாகச் செய்திருந்தனர்.

*சங்கைமிகு குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (ரலி) அவர்களின் 60 ஆம் ஆண்டு கந்தூரி விழா சிறப்பாக நடைபெற்றது. கந்தூரி விழா பற்றி தமிழகத்தின் பிரபல நாளிதழ்கள் வெளியிட்ட செய்தி கள்.*

## சீர்காழி அருகே திருமுல்லைவாசல்

# யாஸீன் மௌலானா தர்காவில் புனித சந்தனக்கூடு கந்தூரி விழா

சீர்காழி,மே.27—

சீர்காழி வட்டம் திருமுல்லைவாசல் யாஸீன் மௌலானா (ரலி) தர்காவில், நபிகள் நாயகம் (ஸல்) 33—ம் தலைமுறைத் திருப்பேரர் குத்புல் அக்தாப் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா (ரலி) 60—வது ஆண்டு புனித சந்தனக்கூடு கந்தூரி விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு, நபிகள் நாயகம் (ஸல்) 36—ம் தலைமுறைத் திருப்பேரர் குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹாஷிமிய் நாயகம் தலைமை வகித்தார்.

நிகழ்ச்சியில், சங்கைமிகு திருக்குடும்பத்தினர், கலீபாக்கள், முன்னிலை வகித்தனர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் முரீதுகள், சீடர்கள், பக்தர்கள் ஆயிரக்கணக்கானோர் திரளாகக் கலந்து கொண்டனர். சுபுஹான மவ்லிது, யாஸீன் (ரலி) மவ்லிது, ராத்திபு, சந்தனம் பூசும் நிகழ்ச்சி மற்றும் பிரார்த்தனைகளுடன் விழா நடைபெற்றது.

விழாவுக்கு வந்திருந்த பல்வேறு பக்தர்கள், தங்களது நேர்ச்சைகள் நிறைவேறியதற்காகவும், இன்னும் பலர் நிறைவேறவும் சீரணி காணிக்கையாகக் கொண்டு வந்து, அனைவருக்கும் பகிர்ந்தனர்.

முன்னதாக, வந்திருந்த அனைவருக்கும் ஊர் பொது மக்களுக்கும் கந்தூரி அன்ன தானம் வழங்கப்பட்டது. கந்தூரி விழாவுக்கான ஏற்பாடுகளை, திருக்குடும்பத்தாருடன் இணைந்து தர்கா பரிபாலன கமிட்டி விழாக்குழுவினர் செய்திருந்தனர்.

மணிச்சுடர்

### மயிலாடுதுறை அருகே திருமுல்லை வாசலில்

# குதுபுகள் திலகம் சையது யாஸீன் மவுலானா நாயகம் கந்தூரி

### ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு





வழுத்தூர், மே 27 - அஸ்ஸய்யிது ஜமாலிய்யா சையது யாஸீன் மவுலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமி நாயகமின் 60 வது நினைவு தின கந்தூரி விழா 25052024 சனிக்கிழமை மயிலாடுதுறை அருகே திருமுல்லை வாசலிலுள்ள அவரது அடக்கத்தலத்தில் அஸ்ஸையது ஜமாலிய்யா யாஸீன் அலி மவுலானா அல் ஹஸனிய்யுல் ஹுஸைனி அல் ஹாஷிமி தலைமையில் காலை முதல் இரவு வரை நடைபெற்றது! கஷீதானா மவுலாது, புர்தாஷரீஃபு, ராத்திபு, யாஸீன் நாயகம் அவர்கள்மீது அவர்களது

மேலும், பலவரக்காட்டில் வாழ்ந்த மார்க்க மேதை அலவிய்யுல் ஜெமீலிய் (ரஹ்) அவர்களிடமும் கற்றார்கள். பின்னர் லாஹூர் இஸ்லாமியக் கல்லூரியில் உயர்கல்வியைக் கற்று, மௌலவி பாஸில் பட்டம் பெற்றுக் கொண் டார்கள். பின்னர் தேவ்பந்த் கல்விக்கூடத்தில் கற்று,மௌலவி பாஸிலே அஉலா பட்டம் பெற்றார்கள். தமிழ்நாட்டில் ஜமாலியா அரபுக் கல்லூரியிலும் சிறந்த உயர் பட்டத்தால் கௌரவிக்கப்பட்டார்கள்!

யாஸீன் மௌலானா அவர்கள் தமிழ்நாட்டின் தஞ்சாவூரைச் சேர்ந்த

மற்றும் மத்ஹபுகளின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற தலைப்புகளில் தொடர் சொற்பொழிவுகளை யாஸீன் மௌலானா அவர்கள் நடத்தி வந்தார்கள். மௌனதுர் ரஹ்மான் பீ தத்ரீஸில் குர்ஆன்" எனும் பெயரில் குர்ஆன் மதரஸாக்களை நாட்டின் பல பாகங்களிலும் நிறுவினார்கள்.

ஒவ்வொரு வருடமும் தமது மாணவர்களை (சீட்சதர்களை) சந்திப்பதற்கு யாஸீன் மௌலானா அவர்கள் இந்தியா செல்வது வழக்கமாக இருந்தது. அவ்வகையில் 1966ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இலங்கையிலிருந்து

தினகரன்

# சையது யாசின் மவுலானா தர்கா கந்தூரி

சீர்காழி, மே 27: மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே திருமுல்லைவாசலில் இஸ்லாமியர்களின் இறை தூதர் நபிகள் நாயகத்தின் வம்சா வழி பேரன் ஜமாலியா சையது யாசின் மவுலானா தர்கா அமைந்துள்ளது. தமிழகம் மற்றும் இலங்கை வாழ் முஸ்லிம்களின் ஆன்மிக குருவாக விளங்கிய இவர் இந்தியா மற்றும் கீழ்திசை நாடுகளில் இஸ்லாமிய ஆன்மிகத்தை பரப்பியவர். இறுதியாக மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே உள்ள திருமுல்லைவாசலில் 1964ம் ஆண்டு நல்லடக்கம் செய்யப்பட்டார். அங்கு அவருக்கு தர்கா அமைத்து வழிபட்டு வருகின்றனர். ஆண்டு தோறும் யாசின் மௌலானா இறையடி சேர்ந்த தினத்தன்று கந்தூரி விழா நடைபெறுவது வழக்கம்.

அதன்படி நேற்று நடை

**லண்டன், துபாய் உள்ளிட்ட வெளி நாட்டினர் பங்கேற்பு**



சீர்காழி அருகே திருமுல்லைவாசலில் 60வது ஆண்டு புனித சந்தனக்கூடு கந்தூரி விழா நடந்தது.

பெற்ற 60-வது ஆண்டு விழாவில் தஞ்சை, சென்னை, புதுக்கோட்டை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்கள், பல்வேறு மாநிலங்களில் இருந்தும், இலங்கை, லண்டன், துபாய் உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்தும்

மவுலானாவின் கலிபாக்கள், சீடர்கள், பக்தர்கள் கலந்துகொண்டனர். விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சந்தனக்கூடு வைபவத்தை முன்னிட்டு சந்தன கூடு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு சையது யாசின் மவு

லானா சமாதி
பூசும் நிகழ்
நது. அதனை
சிறப்பு துவா
நடைபெற்றது
விழாவுக்
பல்வேறு பக்
ளது நேர்
வேறிய தற்
காணிக்கை
வந்து அ
பகிர்ந்தளி
திருந்த அ
ஊர் பொது
கந்தூரி அ
வழங்கப்பட்
மத நல்லிண
ஒற்றுமையை
விதமாக அ
னையும் சேர்
பட பல்லாயி
னோர் பங்கே
செய்தனர். வி
ஏற்பாடுகளை
பத்தாருடன்
தர்கா பரிபா
விழா குழுவி
செய்திருந்த

# அவ்ன் நாதர் பிரிவாலே!

கலீபா. ஆலிம் புலவர் – எஸ். ஹுஸைன் முஹம்மது ஹக்கிய்யுல் காதிரிய்யுல் –மன்பயீ

அழுவோமா தோழர்களே! அவ்ன் நாதர் பிரிவாலே!
கண்ணீர் கங்கை ஓடும் கவலை என்று மாறும்
உள்ளம் கொண்ட அன்பாலே உயிரில் தோய்ந்த உறவாலே!
(அழுவோமா)

பகலிலும் இரவிலும் அந்தியிலும் சந்தியிலும் அழுகிறேன் அழுகிறேன்
தனிமையில் வெறுமையில் அறையினில் சபைதனில் அழுகிறேன்
அழுகிறேன்
சப்தமாக வாயைவிட்டு சஞ்சலத்தை வார்த்தையிட்டு அழுகிறேன்
அழுகிறேன்
மௌனமாக நெஞ்சுக்குள்ளே ஓசையின்றித் தனக்குள்ளே அழுகிறேன்
அழுகிறேன்
வந்த துன்பம் சிறிதாமோ வார்த்தையாலே சொல்ல
தந்தை செய்கின் முகம் தேடிப் பார்வை செல்லச் செல்ல
காலம் செய்த மாயம்தான் – காயாதிந்தக் காயம் தான்!
(அழுவோமா)

யூசுப் நபி பிரிந்தபின் யாகூப் நபி அழுதது சரித்திரம்
ஆதம் நபி அன்னை ஹவ்வா தேடித் தேடி அழுதது சரித்திரம் சரித்திரம்
பாத்திமத்து நாயகியார் பண்பு நபி மறைந்ததும் கலங்கினார்
புழுங்கினார்
பாசமுடன் பிலால் ரலி சுவாச நபி பிரிந்தபின் அலறினார் மயங்கினார்
போதும் இந்த வாழ்வென்று போகலாமோ அன்பே!
பாவம் என்று பார்க்காமல் பறந்து சென்றீர் அருளே!
இறைவன் ஆடும் விளையாட்டு
யார் தடுப்பாரோ தடைபோட்டு!
(அழுவோமா)

ஆண்டுக்கொரு இருமுறை வந்ததுவும் சென்றதுவும் மறக்குமா
மறக்குமா?
தேவைகளைக் கேட்டுக் கேட்டுத் தீர்த்து வைத்த கருணைதான்
மறக்குமா மறக்குமா?
திருமணம் பிள்ளைவரம் தொழில்வளம் கொடுத்தது மறக்குமா
மறக்குமா?
நோய்கள் நீக்கி ஆயுள்தனை நீட்டி மீட்டுக் கொடுத்தது மறக்குமா
மறக்குமா?
அகம் புறத்தை சீராக அமைத்துத் தந்ததாரு?
முஹம்மதெங்கள் நபி மீது மோகம் தந்ததாரு?
பாடல் கேட்டு வருவீரே!
பாதம் தோளில் தருவீரே! (அழுவோமா)

---

## ஈமானுடன் மரணிக்க வேண்டுமா? இதனைப் படிய்ங்கள்.

ஹள்ரத் இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் லெபனானில் உள்ள மலையில் ஏராளமான இறைநேசர்களுடன் எனது நாட்களைக் கழித்துள்ளேன். அச்சமயங்களில் அந்த இறைநேசர்கள் என்னிடம் இவ்வாறு (வஸிய்யத்) உபதேசம் செய்வார்கள். நிச்சயமாக நீங்கள் மக்களை அடையும் பொழுது அவர்களுக்கு இந்த நான்கு காரியங்களை உபதேசிக்க வேண்டும்.

1. எவரேனும் அளவுக்கு அதிகமாக உணவு அருந்தினால், அவனால் இறைவழிபாட்டின் ஆனந்தத்தை அறிய இயலாது.

2. எவரேனும் அதிகமாக உறங்கினால் அவனுடைய ஆயுளில் (பரக்கத்) அபிவிருத்தி ஏற்படாது.

3. எவரேனும் இறைவனுடைய திருப்தியை நாடாமல் உலக மக்களுக்காக, மேலும் அவர்களை திருப்திப்படுத்துவதற்காக ஏதேனும் அமல்கள் செய்தால் அவனால் இறைவனுடைய திருப்தியை அடைய இயலாது.

4. எவரேனும் தேவையற்ற பேச்சுக்களையும் புறம் பேசுவதையும் வழக்கமாக்கிக் கொண்டால் அவனுக்கு முஸ்லிமாக மரணிக்க இயலாது.

(நூல் மின்ஹாஜுல் ஆபிதீன்)

# காலத்தை வென்ற வலிமார்கள்

ஹள்ரத் அஜ்மீர் காஜா கரீப் நாவாஜ் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

■ ஒரு முறை நானும் ஷைகு உஸ்மான் ஹாரூனி (ரஹ்) அவர்களும் பிரயாணத்தில் இருந்த போது தஜ்லா நதிக்கரையை அடைந்தோம். அதைக் குறுக்கே கடந்து செல்வதற்கு படகு வசதியில்லை. மேலும் தஜ்லா நதியின் அகலம் ரொம்பவும் அதிகம். நாங்கள் சீக்கிரமாக போக வேண்டியிருந்தது.

அப்போது ஷைகு உஸ்மான் ஹாரூனி (ரஹ்) அவர்கள் என்னை நோக்கி கண்களை மூடிக் கொள்ளுமாறு பணித்தார்கள். நான் அவ்வாறே செய்தேன். அவர்களுடன் நானும் தண்ணீரின் மீது எவ்வித சிரமமும் இன்றி நடந்து சென்றோம். வெகு சீக்கிரத்தில் அக்கரையை அடைந்தோம்.

அதன்பின் நான் ஷைகு அவர்களிடம், இது எவ்வாறு நிகழ்ந்தது? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், நான் ஐந்து முறை ஸூரத்துல் ஃபாத்திஹாவை ஓதிவிட்டு தண்ணீர் மீது கால் வைத்தேன். கடந்து விட்டேன் என்று கூறினார்கள்.

■ ஒரு முறை கண் பார்வையில்லாத மிக பலவீனமான வயோதிகர் ஒருவர், கைளில் தடியை ஊன்றியவராக, அளவு கடந்த மனக்கவலையுடன் ஷைகு உஸ்மான் ஹாரூனி (ரஹ்) அவர்களிடம் வந்து ஸலாம் கூறினார்.

ஹள்ரத் ஷைகு அவர்கள் அவருக்கு பதில் ஸலாம் கூறி முகமலர்ச்சியோடு எழுந்து, தமக்கு அருகில் அமரச் செய்தார்கள். அப்போது அந்த வயோதிகர் கூறினார்.

முப்பது ஆண்டுகளாக எனது மகனைக் காணவில்லை அந்தக் கவலையால் நான் மிக இயலாமல் ஆகிவிட்டேன். அவன் இறந்ததாகவோ, வாழ்வதாகவோ எவ்விதத் தகவலும் இல்லை. இதற்காகவே தங்கள் முன் ஆஜராகி உள்ளேன் எனது மகன் சுகமாக வந்து சேர துஆச் செய்யுங்கள் என்றார்.

சிறிது நேரம் தலையைத் தாழ்த்தி முராக்கபாவில் இருந்து, பிறகு சிறிது நேரம் கழித்து தலை நிமிர்ந்த ஹள்ரத் உஸ்மான் ஹாரூனி (ரஹ்) அவர்கள், அங்கு அமர்ந்திருந்தோரை நோக்கி, அனைவரும் இதற்காக துஆச் செய்யுங்கள். அவரது மகன் சுகமாக வந்து விடுவார் என்றார்கள்.

அனைவரும் துஆ செய்து முடித்ததும், வந்திருந்த வயோதிகரை நோக்கி தாங்கள் சிறிது நேரத்திற்குப் பின் தங்களின் மகனை அழைத்து வாருங்கள் என்று கூறினார்கள்.

அவர் இல்லம் திரும்பிய போது வழியிலேயே அவருக்கு நல்ல செய்தி கிடைத்தது. முன்னரே அவரது மகன் வந்திருந்தார். மகனைப் பார்த்ததும் அவரது கண்பார்வை நன்றாகி விட்டது. மகனை அழைத்துக் கொண்டு ஹள்ரத் ஷைகு உஸ்மான் ஹாரூனி (ரஹ்) அவர்களிடம் வந்தார்.

காணாமல் போய்த் திரும்பி வந்த மகனிடம் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி ஹள்ரத் அவர்கள் விசாரித்தார்கள். அப்போது அவர் கூறலானார்.

என்னைச் சிலர் பிடித்துக் கொண்டு போய் கடல் நடுவில் ஒரு தீவில் சங்கிலியால் பிணைத்து வைத்திருந்தார்கள். இன்றும் அங்குதான் இருந்தேன். ஹள்ரத் ஷைகு அவர்களின் இதே தோற்றத்தில் ஒரு பெரியார் எனது அருகில் வந்தார்கள்.

அந்தச் சங்கிலியை தமது பார்வையால் உடைத்தார்கள். உடனே அவர்கள் எனது பிடரியைப் பற்றிப் பிடித்துக் கொண்டு எனது காலடி மீது கால்வைத்து நடந்துவா என்றார்கள். மேலும் கண்ணை மூடிக் கொள்ளும்படி கூறினார்கள். அவ்வாறே மூடிக்கொண்டு நடந்து வந்தேன். பிறகு கண்ணைத் திறக்கச் சொன்னார்கள். கண்ணை திறந்து பார்த்த போது வீட்டு வாசலில் நின்றேன் என்று கூறினார்.

இந்தச் சம்பவத்தை கூறி முடித்ததும் அவருடைய தந்தை, என் மகன் காணாமல் போகும் போது எந்த வயதில் இருந்தாரோ அதே வயதில் அப்படியே திரும்ப வந்தான்.

ஹள்ரத் உஸ்மான் ஹாரூனி (ரஹ்) அவர்களின் பாதங்களை முத்தமிட்டு நன்றிக் கடன் செலுத்தினார். மேலும் அவர், பாருங்கள் அல்லாஹ்வின் அடியார்கள் தங்களிடம் எவ்வளவு பெரிய சக்தியை மறைத்து வைத்துள்ளார்கள் என்று கூறினார்.

■ சூஃபியாக்கள் இந்த உயர்ந்த நிலையை எப்படி அடைந்தார்கள்? அதற்கென்று என்ன பயிற்சி மேற்கொண்டிருப்பார்கள்? உலகத்தில் வாழும்போது தன் நப்ஸுடன் எதிர்கொள்ளும் நிலையை ஓர் உதாரணத்துடன் சொல்றேன்.

புராதன ஜப்பானில் கேடயம் எதுவும் இல்லாமல் ஒரு வாள் கொண்டு போரிடும் வீரர் இருவரில் ஒருவராக உங்களை கற்பனை செய்து கொள்ளுங்கள்.

உங்கள் எதிரியை எதிர்கொள்ளும் போது இடையறாது மிகக் கவனத்துடன் உறுதியாகவும், ஆயத்தமாகவும் இருக்கிறீர்கள்.

கண நேரமாவது விழிப்பு நிலையைத் தளர விட்டு விடுவீர்களானால் அக்கணமே மின்னல் வேகத்தில் எதிராளியின் வாளால் நீங்கள் வெட்டி வீழ்த்தப்படுவீர்கள். சண்டையை வேடிக்கை பார்க்க பெரும் கூட்டம் கூடியுள்ளது. நீங்கள் குருடனல்ல, ஓரக்கண்ணால் கூட்டத்தைப் பார்க்கிறீர்கள். நீங்கள் செவிடனல்ல, கூட்டம் எழுப்பும் ஆரவாரத்தை கேட்கிறீர்கள். பக்கத்தில் பரிசுப் பொருட்கள் நிறைய பரப்பப்பட்டு உள்ளது. ஆனால் எந்த ஒரு கணமும் உங்கள் மனம் இத்தகைய புலனார்ந்த பதிவுகளுக்கு கட்டுப்படுமா?

**ஒவ்வொரு நொடியும் உங்கள் மரணம் தவிர்க்கப்படுகிறது. அல்லது தள்ளி வைக்கப்படுகிறது. உங்கள் எதிரியை மட்டும் நீங்கள் உற்று நோக்காத தருணமே இருக்காது, இருக்கக் கூடாது. இது ஒரு வகை பயம் கலந்த விழிப்புநிலை. இந்த நிலையில்தான் ஞானிகள் இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டே எப்போதும் தன் நப்ஸை எதிர்கொள்கிறார்கள்.**

ஒரு சமயம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தபூக்கு யுத்தத்தில் வெற்றி பெற்று ஜெயபேரிகையுடன் நபித்தோழர்கள் சகிதம் மதீனா நகருக்குள் நுழைகிற போது, சிறிது போரிலிருந்து பெரிய போர் அளவில் மீண்டுள்ளோம் என்றார்கள்.

உடனே, நபித்தோழர்கள், யா ரசூலல்லாஹ்... இப்போது போர் (பீஸபீல்) செய்துதானே திரும்பினோம். இதைவிட பெரிய போர் யாது? என வினவ?

நபுஸுடன் போராடுவதுதான் பெரிய போராட்டம் என்றார்கள். அல்லாஹ்வுக்கு வழிபட்டு தன்னுடைய நபுஸுடன் போர் புரிபவர் எவரோ அவரே வீரர் – மிஷ்காத்

முஷ்ரிக்குடன் யுத்தஞ் செய்து வெட்டுப்பட்டு, ஷஹீதானவர்கள் தத்துவாதிகளைப் பொதிந்து ஜோதி ஒளியில் ஐக்கியமாகி விடுகிறபடியால், என்றும் ஹயாத்தாக நித்திய ஜீவனாக உயிர் உள்ளவர்களாகி, இறைவனிடம் உணவு பெறுகிறார்கள்.

ஓர் இல்லத்தில் இருந்து மறு இல்லத்திற்கு மாறுகிறார்கள். தன் (நான் என்கிற) நப்ஸோடு போர் செய்து, அதைக் கொன்றொழித்தவர்களின் ஹயாத்தானது மவுத்தில் ஹயாத்தாய், ஒளியோடு ஒளியாய் சேர்ந்துக் கொள்வதாய் சொல்லப்படுகிறது.

*அன்றி, அல்லாஹ்வுடைய பாதையில் போர் புரிந்து (எதிரிகளால்) வெட்டப்பட்டவர்களை இறந்தவர்கள் எனக் கூறாதீர்கள். மாறாக, (அவர்கள்) உயிரோடு இருக்கிறார்கள். ஆனால் (அதை) நீங்கள் உணர்ந்து கொள்ள மாட்டீர்கள். (குர் ஆன் 2154)*

# மெய்ஞ்ஞானப் பேரொளி!

*ஹெச் . ரஜியாம்மாள். மேலத்திருப்பூந்துருத்தி*

*மெட்டு: எவனோ ஒருவன் வாசிக்கிறான்*

*திரை : அலைபாயுதே*

குருவே யாஸீன் அலி நாதரே
சரணம் சரணம் மலர்ப் பாதங்களே
அவ்னின் வடிவே அலி நாதரே
எங்கள் உயிரும் உணர்வும் இனி தாங்களே
காண வேண்டுமே கண்ணாரவே
ஞான ஒளி நிறை சூரியரே
கைகள் ஏந்தியே நெஞ்சாரவே – உயர்
ஞானம் வேண்டி மன்றாடினேன் (குருவே)

அவ்னாய் வந்த பேரொளியே
அறியா மனதை மாற்றிடுவீர்
தாங்கள் இல்லை எனும் நினைவை
அடியோடென்றும் நீக்கிடுவீர்
இரண்டறக் கலந்த எம் உயிரே
உங்கள் மறைவும் புதிய உதயமன்றோ
எங்கள் உயிர் குருவே எங்களுக்கு இளம்
பிறையாய் வந்தது வரமல்லவோ (குருவே)

உண்மைப் பொருளே ஓவியமே – உயிர்க்
கருவே குருவே காவியமே
உங்கள் பாதம் சரணடைய – என்றும்
ஏங்கும் ஏங்கும் என் மனமே
காலம் முழுதும் கண்மணியை
புகழ்பாடும் வரமே தந்தருள்வீர்
முக்தி நிலை அடைந்து மோட்சம் பெற
எம் குருவே எமக்கு அருள் புரிவீர்

(குருவே)

# குர்பானி – ஹஜ்– ஒரு பார்வை!

## ✯ குர்பானி ஏற்படுத்தப்பட்டதன் காரணம்

குர்பானி என்பது குர்பான் என்ற சொல்லிலிருந்து வந்ததாகும். நெருக்கத்தைப் பெறுதல் என்பது இதன் பொருள். அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்காக ஒரு காரியத்தைச் செய்வதற்கு குர்பானி என்று சொல்லப்படும்.

குர்பானி என்பது ஒரு செயல்வழிக் கல்வியாகும். இக்கல்வியின் மூலம் கற்றுத் தரப்படும் விஷயம் யாதெனில் நீங்கள் அறுக்கும் பிராணியின் இறைச்சியோ, இரத்தமோ அல்லாஹ்வுக்குத் தேவையில்லை. அவனே அனைவருக்கும் உணவு அளிப்பவன். அவனுக்கு யாரும் உணவளிக்க முடியாது. அல்லாஹ்வின் கட்டளைப்படி பிராணியை அறுத்து குர்பானி கொடுக்கும் நீங்கள் உங்களின் மனோவிருப்பங்கள், இச்சைகள் ஆகியவற்றைத் துறந்து அல்லாஹ்வுக்காக நீங்களும் குர்பானியாகிவிட வேண்டும்.

நமது நண்பர்களோ, உறவினர்களோ நமது வீட்டிற்கு வந்தால் அவர்களிடம் நமக்குள்ள நெருக்கத்தின் அளவுக்கு அவர்களை நாம் உபசரிக்கிறோம். நம்மிடமுள்ள உணவுபானங்களை அவர்களுக்காக குர்பானி செய்கிறோம். வருபவர்கள் மிக நெருங்கியவர்களாக இருந்தால் நமது வீட்டிலுள்ள ஆட்டையோ, கோழியையோ அறுத்து விருந்து படைக்கிறோம். இந்த நியதியின் அடிப்படையில் அல்லாஹ்வின் நெருக்கத்தை அடைவதற்குரிய ஓர் உயர்ந்த வழிமுறையாக குர்பானியை கடமையாக்கப்பட்டுள்ளது.

இஸ்லாத்தில் மட்டும் குர்பானி கடமையாக்கப்படவில்லை. வரலாற்றை வாசித்துப் பார்த்தால் எல்லா மதங்களிலும் குர்பானி கொடுக்கும் பழக்கம் இருந்து வந்ததை அறிய முடியும். ஒன்றை இழந்தால் தான் இன்னொன்றைப் பெற முடியும் என்பதும் உயர்ந்ததைப் பெறுவதற்காக தாழ்ந்ததை அர்ப்பணிக்க வேண்டுமென்பதும் உலக நியதி. இந்த அடிப்படையில்தான் குர்பானியும் அமைந்திருக்கிறது.

## ✯ குர்பானி கொடுப்பது உயிர்வதைக்கு ஒப்பானதன்று.

அல்லாஹ்வை நம்பும் எவரும் அவன் அநியாயம் செய்பவன் என்று ஒரு போதும் கூற மாட்டார்கள். மாறாக அவன் வற்றாத கருணையுள்ளவன் என்பதை உளமாற ஏற்றுக் கொள்வார்கள். அப்படிப்பட்ட அல்லாஹ் தான் படைத்த சில உயிரினங்களுக்கு வேறு சில உயிரினங்களையே உணவாக ஆக்கியிருக்கிறான்.

ஆகாயத்தில் பறக்கும் கழுகு, பருந்து, இராஜாளி, ஆகிய பறவைகள் சில உயிரினங்களையும் பறவைகளையும் வேட்டையாடி உண்கின்றன. சிறு பறவைகள் புழுக்களையும் சில பூச்சிகளையும் பிடித்து தின்கின்றன.

கடலில் வாழும் சுறா, திமிங்கலம் போன்ற பெரிய விலங்குகள் கடலிலுள்ள

மீனினங்களை உணவாக்கிக் கொள்கின்றன. சில மீன்கள் வேட்டையாடுவதற்காகவே வட துருவத்திலிருந்து தென் துருவத்திற்கு வந்து செல்கின்றன. தரையில் வசிக்கும் உயிரினங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. எறும்புதின்னி என்னும் பிராணி தனது பெரிய நாக்கை வெளியில் நீட்டி வைத்துக் காத்திருக்கிறது. அதன் நாக்கில் உள்ள இனிப்பு சுவையை உணர்ந்து எறும்புகள் அதில் ஏறியதும் நாக்கை உள்ளே இழுத்து எறும்புகளை விழுங்கிக் கொள்கிறது.

சிலந்திப் பூச்சி தன் வலையைப் பயன்படுத்தி ஈக்களைப் பிடித்து சாப்பிடுகிறது. சிங்கம், புலி, சிறுத்தை போன்ற காட்டு விலங்குகள் ஆடு, மாடு, குரங்கு, முயல் போன்ற பிராணிகளை அடித்து சாப்பிடுகின்றன. வீட்டில் வசிக்கும் பூனை எலிகளைத் தன் உணவாக ஆக்கிக் கொள்கிறது.

இந்த உயிரினங்களில் ஒன்று மற்றொன்றை சாப்பிடுவதை அநியாயம், உயிர்வதை என்று எவரும் கூற மாட்டார்கள். மாறாக இது இயற்கை நியதி என்று தான் கூறுவார்கள். இது அநியாயம் இல்லையெனில் மனிதன் மற்ற பிராணிகளை உண்பது மட்டும் எப்படி அநியாயமாகும். பிராணிகளை அறுப்பது உயிர்வதை எனில் மாமிச பட்சினிகளை அல்லாஹ் படைத்திருக்கவே மாட்டான். எனவே அல்லாஹ்வால் படைக்கப்பட்ட சில பிராணிகளை அல்லாஹ்வின் கட்டளைப்படி அறுப்பது ஜீவகாருண்யத்திற்கு மாற்றமானதல்ல.

## ✯ மனிதனை குர்பானி கொடுப்பது தடுக்கப்பட்டதன் காரணம்

இறைவனுக்கு பலி கொடுப்பதற்காக மனிதனை அறுப்பது மார்க்கத்தில் தடை செய்யப்பட்டுள்ளது.

ஏனெனில், மனிதன் கண்ணியமானவன். மற்ற பிராணிகளைப் போன்று கழுத்தில் கத்திவைத்து அறுப்பது மனிதனின் கண்ணியத்திற்கும் மேன்மைக்கும் பொருத்தமான செயலன்று.

இறைப்பாதையில் போரிட்டு கொல்லப்படுவதுதான் மனிதனுக்கு கண்ணியத்தைத் தேடித்தரும். எனவே தான் ஷஹாதத் என்னும் வீர மரணத்திற்கு விசேஷமான சிறப்புகள் கூறப்பட்டுள்ளது. இதில் இறைவனுக்காக மனிதன் தனது உயிரை அர்ப்பணிக்கிறான்.

ஆனால் மனிதனை குர்பானி செய்தால் ஒரு மனிதன் இறைநெருக்கத்தைப் பெறுவதற்காக இன்னொரு மனிதன் தனது உயிரை இழக்க வேண்டியதேற்படும். இது மனித நேயத்திற்கு முரணானது.

மேலும் ஒவ்வொரு மனிதன் மீதும் அவன் பிற மனிதர்களுக்குச் செய்ய வேண்டிய சில கடமைகள் உள்ளன. அவன் குர்பானி செய்யப்படும்போது அக்கடமைகளை நிறைவேற்றுவது தடைபட்டு அதனால் சமுதாயத்தில் பல பாதிப்புகளும் குழப்பங்களும் ஏற்படும்.

## ✯ ஹஜ் கடமையாக்கப்பட்டதன் காரணம் என்ன?

பொதுவாக ஒருவர் இன்னொருவரின் மீது ஆழமான அன்பு கொண்டிருந்தால் அவரின் நெருக்கத்தைப் பெறுவதற்காக எப்போதும் முயற்சி செய்து கொண்டிருப்பார். அவரைச் சுற்றி வந்து அவரின் பார்வையில் படுமாறு நடந்து கொள்வார். அவரிடம் அடிக்கடி பேசுவதற்கு விரும்புவார். அவர் பயன்படுத்தும் பொருட்களை, அவரின் வீட்டுச் சுவர்களைக் கூட முத்தமிடுவார்.

இறைக்காதலில் மூழ்கிய இறையடியார்களுக்கு அக்காதலின் ஆழத்தை வெளிப்படுத்தும் ஒரு வடிகாலாக அல்லாஹ் கஃபாவை ஏற்படுத்தி அங்கு வந்து ஹஜ் செய்வதை கடமையாக்கியுள்ளான்.

இது எனது இல்லம், எனது நெருக்கத்தைப் பெற விரும்புபவர்கள் தங்களின் ஆடம்பர, அலங்கார ஆடைகளைக் களைந்து தலைமுடிகளை சிரைத்து, தைக்கப்படாத இரு வெள்ளைத் துணிகளை மட்டும் உடலில் போர்த்திக் கொண்டு எனது இல்லத்தை சுற்றி வரவேண்டும். அதில் பதிக்கப்பட்டுள்ள, ஹஜருல் அஸ்வத் எனும் கல்லை முத்தமிட வேண்டும். என் கட்டளைக்குப் பணிந்து அரபா, மினா மைதானங்களில் தங்க வேண்டும். ஸபா மர்வாவுக்கு மத்தியில் ஓட வேண்டும். ஷைத்தானுக்கு கல்லெறிய வேண்டும். எனக்காக குர்பானி கொடுக்க வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். கண்களால் காண முடியாத நேசனின் மீதுள்ள அன்பை உயிராலும், உடலாலும் உணர்வாலும் வெளிப்படுத்தும் உன்னத வணக்கமாக ஹஜ் இருக்கிறது. உண்மையான இறைக்காதலின் ஆழத்தை ஹஜ்ஜைத் தவிர வேறெந்த வணக்கத்தின் மூலமும் வெளிப்படுத்த முடியாது.

## ✯ செல்வந்தர்களின் மீது ஹஜ் கடமையாக்கப்படக் காரணம் என்ன?

செல்வந்தர்களிடம் இருக்கும் செல்வம் தான் உலகமோகம், தற்பெருமை போன்ற பல வியாதிகள் ஏற்படக் காரணமாக உள்ளது. மேலும் செல்வந்தர்கள் உலக விஷயத்தில் பெரும் கஷ்டத்தையும் சிரமத்தையும் சந்திக்க விரும்பமாட்டார்கள். அதனால் சோம்பலுள்ளவர்களாகவும் சுக விரும்பிகளாகவும் இருப்பார்கள்.

அவர்களின் திரண்ட செல்வம் அவர்களை தவறான வழியில் திருப்பிவிடாமல் தடுத்து இறைவழியில் அதனை செலவு செய்யும் எண்ணத்தை ஏற்படுத்துவதற்காகவும், தமது ஊரையும் உறவுகளையும் விட்டுப்பிரிந்து கஷ்டங்கள், சிரமங்கள் நிறைந்த நீண்ட பிரயாணத்தை மேற்கொண்டு, இறைவனுக்காக அமல் செய்வதில் ஏற்படும் சிரமங்களை சகித்துக் கொள்ளும் பக்குவமுடையவர்களாக அவர்களை மாற்றுவதற்காகவும் செல்வந்தர்களின் மீது ஹஜ்ஜை கடமையாக்கப்பட்டுள்ளது.

---

என் வணக்கமும் என் குர்பானியும் என் வாழ்வும் என் மரணமும் அல்லாஹ் ஒருவனுக்கே! (அல்குர்ஆன்)

# சற்குரு சரித்திரம் 3

*(கலீபா. எம். சிராஜுதீன் பி.எஸ்.சி ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி.)*

கல்வியில் பெரும் ஆர்வத்தையும், அள்ளித்தந்து விட்டது, கல்வி கற்பதின் மேல் அவர்களுக்கு இருந்த ஆர்வத்தினால், அவர்களுக்கு ஏற்பட்ட மலைபோன்ற இன்னல்களையும், பெரிதெனக் கருதாமல் தொடர்ந்து படிப்பதில் ஆர்வம் காட்டினார்கள். அருமைத் தாயாரின் மறைவும் ஆருயிர்த் தந்தையின் நினைவும் கல்வி கற்பதின் மேலிருந்த ஆர்வத்தால் மறைந்து போயின.

அருமைத் தாயாரின் அரவணைப்பில் வளர்ந்த சமயம் அவர்களிடம் கற்ற நல்லொழுக்கம், மௌலானா நாயகம் அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு கேடயமாக பயன்பட்டது.

ஏக இறையின் நாட்டப்படி அரபு ஆரம்பக் கல்வியை கற்க மேலப்பாளையத்தில் தலைசிறந்து விளங்கிய "மஃனல் அஸ்பியாஉ" என்ற மதரஸாவில் சேர்ந்தார்கள். கற்க வேண்டியதையெல்லாம் கசடற கற்றுத் தேர்ந்தார்கள். அவர்களது பதினேழாம் வயதில் அறபியில் திறம்படக் கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தாரகள். இச்சிறு பிராயத்திலேயே "மாதிஹுர் ரஸூல்" என்றும் "ஷாஇர்" என்றும் புகழ்ப் பெயர் பெற்றார்கள். இச்சிறு வயதிலேயே "பத்வா" என்னும் அரும் பெரும் மார்க்கத் தீர்ப்புகளும் வழங்கினார்கள்.

மௌலானா நாயகம் அவர்கள் ஆங்கிலம், தமிழ், உர்தூ, பார்ஸி, ஹிந்தி, மலையாளம், முதலாம் வேறு பல மொழிகளையும் கற்று அவற்றில் நாவன்மையும் பெற்றிருந்தார்கள். இவர்கள் தமிழ், உர்தூ, மொழிகளில் கவிபல பாடியுள்ளார்கள்.

மேலும் சென்னையிலுள்ள பெரம்பூர் மத்ரஸத்துல் ஜமாலியதுல் குல்லிய்யா எனும் மாபெரும் அறபிக் கலாசாலையில் முதற்தர "மௌலவி பாஸில்" என்ற கௌரவப்பட்டம் சூட்டப்பட்டார்கள். மேலும் வட இந்தியா சென்று லாஹூர் பல்கலைக்கழகம் என்ற இஸ்லாமியக் கல்லூரிக்கு சென்றார்கள். அங்கு அவர்களைச் சோதித்த ஆசிரியர்கள் மௌலானா நாயகம் அவர்களின் கல்விப் புலமையைக் கண்டு வியந்து தாங்கள் இங்கு கற்பதற்கு ஒன்றுமில்லை வேண்டுமானால் மத ஆராய்ச்சி தர்க்கக் கல்வி ஆகியவற்றை கற்கலாம் என்றார்கள். அதன்படியே அங்கு அவற்றையும் திறம்படிவே கற்றுத்தேர்ந்தார்கள். அங்கு அவர்களுக்கு "லாஹூர் மௌலவி பாஸில்" என்ற சிறப்பு பட்டம் வழங்கப்பட்டது.

பிறகு தேவ்பந்த் பல்கலைக்கழகத்திற்குச் சென்று அங்குள்ள அனைத்துக் கல்விகளையும் கசடறக் கற்றுத் தேர்ந்தார்கள். இப்படி பலதரப்பட்ட கல்விகளிலும், கற்றுத் தேர்ந்தபின் 1921 ஆம் ஆண்டு தென் இந்தியா திரும்பி இஸ்லாமியத் தொண்டில் அயராது ஈடுபட்டார்கள். பெருமானார் அவர்களின் சுன்னத்தை பின்பற்ற வேண்டுமென நினைத்த அவர்கள் சீர்காழிக்கு அருகில் உள்ள திருமுல்லைவாசல் என்னும் ஊரில் உள்ள அபூபக்கர் சித்திக் நாயகம் அவர்கள் வம்சத்தில் உதித்த சிறப்புமிக்க பாத்திமா பீவி என்ற மாதரசியை மணந்து கொண்டார்கள். இவர்களுக்கு ஜமாலிய்யா ஸய்யித் ஹாமித் மௌலானா அல்ஹாஷிமிய், ஜமாலிய்யா ஸய்யிதா ஜஹ்ரா குறைஷ் கண்ணே, ஜமாலிய்யா ஸய்யித் ஹஸ்னா குறைஷ் கண்ணே ஆகியவர்களைத் தவிர மற்ற பிள்ளைகள் சிறுவயதிலேயே இறையடி சேர்ந்துவிட்டார்கள்.

தமது அருமை தந்தை நாயகம் அவர்களின் விருப்பத்திற்கு இணங்க இலங்கையில் உள்ள வலிப்பட்டி எனும் ஊரில் வாழ்ந்து வந்த அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வம்சத்தில் உதித்த குதுபுநாயகம் அவர்களின் வழித்தோன்றல் ஆகிய தங்களுக்கு மாமா முறையான அஸ்ஸையித் தாஸீன் மௌலானா அல்ஹாஷிமிய் அவர்களின் முதலாம் அருமைப் புதல்வி ஸையிதா ஸஹ்ருவான் கண்ணே என்ற சிரோன் மணியை திருமணம் செய்து கொண்டார்கள். மௌலானா நாயகம் அவர்கள் இமாம் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வழிவந்தவர்கள், அன்னவர்களின் துணைவியார் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹ் அன்ஹு அவர்களின் வழித் தோன்றல் ஆவார்கள்.

இவர்களுக்கு ஜமாலிய்யா ஸய்யித் அலிய் ஜெய்னுல் ஆபிதீன் மௌலானா அல் ஹாஷிமிய் ஜமாலிய்யா ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹாஷிமிய் ஆகிய இருவரைத் தவிர மற்ற பிள்ளைகள் சிறுவயதிலேயே இறையடி சேர்ந்து விட்டார்கள்.

ஜமாலிய்யா ஸய்யித் யாஸீன் மௌலானா அவர்கள் இந்தியாவில் மணம் முடித்த ஸித்திக்கி வம்சத்தில் பிறந்த அன்னை பாத்திமா அவர்களுக்குப் பிறந்த ஆண் பிள்ளை ஜமாலிய்யா ஸய்யித் ஹாமித் மௌலானான அல் ஹாஷிமிய் அவர் களை சிறுபிராயத்திலேயே இலங்கைக்கு அழைத்து வந்து விட்டார்கள். இவர்களையும் தம் பிள்ளைபோல் வளர்த்து ஆளாக்கியவர்கள் அன்னை ஸஹர்வான் அவர்களேயாகும்.

இம் மூவருக்கும் புகாரி மதரஸாவின் முதல்வர் கல்விக் கடல் புகழ்பெற்ற ஜக்கரிய்யா ஆலிம் அவர்களின் மூன்று புதல்வியர்களையும் மணமுடித்து

வைத்தார்கள். இவர்கள் பிள்ளைகள் இன்றும் வெலிகமா என்ற சிறுமக்கம் என்று புகழ் பெற்ற ஊரில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களே தற்போது ஸய்யித் வம்சத்தில் குதுபுநாயகம் அவர்களின் வழித்தோன்றலில் வாழும் ஒரே குடும்பமாகும்.

இலங்கையில் ஜமாலிய்யா ஸய்யித் யாஸீன் மௌலானா அல் ஹாஷிமிய் நாயகம் அவர்களுக்கும் அன்னை ஸய்யிதா ஸஹர்வான் குரைஷ் கண்ணே அம்மையாருக்கும் பிறந்த ஜமாலிய்யா ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யி நாயகம் அவர்கள் எங்கள் உயிருக்கும் உயிரான சற்குரு ஷெய்குநாயகம் ஆவார்கள்.

இவர்கள் சிறுவயது முதலே நல்ல புத்திக் கூர்மையும், மற்றவர்களைக் கவரும் முக வசீகரமும் பெற்றிருந்தார்கள். இவர்கள் வலிகமாவில் உள்ள அறபா தேசிய பாடசாலையில் தங்களின் தொடக்கக் கல்வியை கற்கத் தொடங்கினர்கள். இவர்கள் ஆரம்பத்தில் அப்பள்ளிக்கு அழைத்துப் போனது தற்போது நமது சற்குரு ஷெய்கு நாயகம் அவர்களின் மூன்றாவது மருமகர் செய்யிது ஜாவீது அலவி மௌலானா அவர்களின் தாய்மாமா செய்யிது யாஸீன் மௌலானா ஆவார்கள். அந்நேரம் நமது அருமை சற்குரு ஷெய்கு நாயகம் அவர்களின் அருமைத் தந்தையார் ஜமாலிய்யா செய்யிது யாஸீன் மௌலானா ஹஸனிய்யுல் அல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள் வெலிகம என்னும் ஊருக்கு அருகாமையிலிருந்த வெலிப்பட்டி என்னும் குக்கிராமத்தல் வாழ்ந்து வந்தார்கள். *(மலரும்)*

---

♦ **நிச்சயமாக நாம் உங்களுக்கு ஹௌளுல் கவ்தரை (அளவற்ற அருட்கொடைகளை) க் கொடுத்தோம். எனவே உங்கள் இறைவனைத் தொழுங்கள், அறுத்துக் குர்பானி கொடுங்கள். உங்கள் எதிரிதான் வம்சமற்றவன். (ஸூரா கவ்தர்)**

♦ நீங்கள் அடிக்கடி வழிபடுவதால் மட்டும் பெருமை கொள்ளாதீர்கள்.

இப்லீஸ் (சாத்தான்) அதிக நேரம் தொழுது கொண்டிருந்த பிறகு அவனுக்கு என்ன நடந்தது என்பதை சிந்தித்துப்பாருங்கள் *–இமாம் ஹஸனுல் பஸ்ரீ (ரஹ்)*

♦ மனிதனே!

♦ மண்ணில் ஓடும் ஊற்று நீர்பயிர்களின் தாகம் தீர்க்கும்

உன் கன்னத்தில் ஓடும் கண்ணீர் உன் ஆன்மாவின் தாகம் தீர்க்கும்

*–இமாம் இப்னுல் ஜௌஸி ரஹிமஹுல்லாஹ்–*

# புத்தகம் ஒரு பொக்கிஷம்!

புத்தகக் கடையொன்றில் சில காலம் பணியாற்றிய நண்பர் ஒருவர், ஓர் அரிய மனிதரைப் பற்றிய நினைவைப் பகிர்ந்துகொண்டார்.

அபு இப்ராகிம் என்ற அந்த மனிதர் வாரம் தோறும் வியாழக்கிழமையன்று மதியம் புத்தகக் கடைக்கு வருவாராம்.

ஒவ்வொரு முறையும் முப்பது, நாற்பது புத்தங்கள் வாங்கிக் கொண்டு போவாராம்.

எதற்காக, இத்தனை புத்தகங்கள் வாங்குகிறீர்கள்? எனக் கேட்டதற்கு, யாரேனும் தன்னை சந்திக்க வந்தால் அவர்களுக்கு ஒரு புத்தகம் பரிசு கொடுப்பது வழக்கம். இந்தப் பழக்கத்தை 25 வருஷங்களுக்கும் மேலாகக் கடைப்பிடித்து வருவதாகச் சொல்லி யிருக்கிறார்.

ஒருமுறை அவர் வருவதற்குப் பதிலாக, அவரது மகன் கடைக்கு வந்து நூறு புத்தகங்கள் வாங்கியிருக்கிறார். அப்பா வரவில்லையா எனக் கேட்டதற்கு, அப்பா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கே அப்பாவைப் பார்க்க வருபவர்களுக்குக் கொடுப்பதற்காகதத்தான் இந்தப் புத்தகங்களை வாங்குகிறேன். இதன் முகப்பில் என்னால் உங்களுடன் பேச முடியவில்லை. ஆனால் இந்தப் புத்தகங்கள் என் சார்பாக உங்களுடன் பேசும் என அச்சிட்டுத் தரப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறார். இரண்டு வாரங்களுக்குப் பிறகு இப்ராகிமின் மகன் புத்தகக் கடைக்குத் தேடி வந்து 500 புத்தகங்கள் வாங்கி யிருக்கிறார். அப்பா எப்படி இருக்கிறார்? எனக் கேட்ட போது, அவர் இறந்துவிட்டார், அவரது இறுதி நிகழ்வுக்கு வருபவர்களுக்குத் தருவதற்காகத்தான் இந்தப் புத்தகங்கள். இதில், இனி நான் உங்களுடன் இருக்க மாட்டேன் என் நினைவாக இந்தப் புத்தகம் உங்களிடம் இருக்கட்டும் என அச்சிட்டு தரப்போகிறோம். இதுவும் அப்பாவின் ஆசையே என்று சொல்லியிருக்கிறார்.

அதன்படியே இப்ராகிமின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட அத்தனை பேருக்கும் புத்தகங்களைத தந்திருக்கிறார்கள். இதை நண்பர் சொல்லியபோது, எனக்குச் சிலிர்த்துப்போனது. தன் வாழ்நாளிலும், அதற்குப் பின்னும் புத்தகங்களைப பரிமாறிக் கொண்ட அற்புதமான மனிதராக அவர் இருந்திருக்கிறாரே என வியந்து போனேன்.

*புத்தகங்கள் மட்டுமில்லை, அதை நேசிப்பவர்களும் அழிவற்றவர்களே.*

*எழுத்தாளர் – எஸ். ராமகிருஷ்ணன்.*

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# நிக்காஹ் (எ) திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பேரருளாலும் நபிகள் நாயகம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் துஆ பரக்கத்தாலும், அவர்களது திருப்பேரர், குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜுது, ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் அருளாசியாலும் அவர்களது திருப்பேரர் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் நல்லாசியாலும் இன்ஷா அல்லாஹ் நிகழும் ஹிஜ்ரி 1445 – ஆம் ஆண்டு துல்ஹஜ் பிறை 16 தமிழ் ஆனி மாதம் 09 – ஆம் தேதி ( **23.06.2024**) ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணிக்குமேல் 11.30 மணிக்குள் முபாரக்கான வேளையில்

---

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுகா, புதுப்பட்டினம், (மர்ஹூம்) ஜனாப். H. முகமது அலி – (மர்ஹூமா) ஹவ்வாம்மா, (மர்ஹூம்) ஜனாப். H.அப்துல்கரீம்–பீபீ ஜான் அவர்களின் பேரனும், சென்னை ஜனாப். H.M. சாதிக் அலி – மெகராஜி பேகம் அவர்களின் மகனுமாகிய தீன்குலச்செல்வன்

## S. அப்துல் லாஜா B.E.,

என்கிற மணமகனுக்கும்



இராமநாதபுரம் மாவட்டம், மீசல் (மர்ஹூம்) ஜனாப். M. முஹம்மது அப்துல் அலி– ஹாஜியானி ஜோதி ரமலான், குருவாடி (மர்ஹூம்) ஜனாப்.அப்துல் ரஹ்மான் – மர்ஹூமா A. அஸ்மா பிவி அவர்களின் பேத்தியும், சென்னை ஜனாப், M.ஹைதர் நிஜாம் (HQ) A.நூரே ஜஷ்மி அவர்களின் மகளுமாகிய தீன்குலச் செல்வி

## H. மதீஹா B.Sc., M.Sc.,

என்கிற மணமகளுக்கும்

---

இன்ஷா அல்லாஹ் நிக்காஹ் என்னும் திருமணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயித்த வண்ணம் மேற்படி திருமணம் சென்னை, புளு லகூன் ரிசார்ட் திருமண மஹாலில் (No. 5/72 ராஜா நகர், நீலாங்கரை, சென்னை –115) நடைபெறுவதால் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தி மஜ்லிசைச் சிறப்பித்து அதன்பின் நடைபெறும் விருந்திலும் கலந்து கொள்ள வேண்டுமாய் அன்புடன் அழைக்கின்றோம்.

அவ்வண்ணமே கோரும் ,

**H.M. சாதிக் அலி**

**S. மெகராஜி பேகம்**

மண்ணிவாக்கம்,சென்னை –48

தங்களன்புள்ள,

**M. ஹைதர் நிஜாம் B.E.,**

**A. நூரே ஜஸ்மி**

**H. காஜா அப்ஸல்**

வேளச்சேரி, சென்னை– 42

செல்: **9840724370**

# அருள் நபியின் திருக்கரம்!

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தண்ணீர்ப் பாத்திரத்தைக் கொண்டு வரக் கூறியபோது தண்ணீருடன் வாய் விசாலமான ஒரு பாத்திரம் கொண்டு வரப்பட்டது. அதில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களின் விரல்களை வைத்தபோது அவர்களின் விரல்களுக்கிடையிலிருந்து நீர் ஊற்று சுரப்பதைப் பார்த்தேன். அதிலிருந்து எழுபதிலிருந்து எண்பது பேர் வரை உளூச் செய்ததை நான் கணக்கிட்டேன்.

(ஹழ்ரத் அனஸ் (ரலி) ஸஹீஹுல் புகாரி-200)

கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உள்ளங்கையை விட மென்மையான பட்டையோ, (பூ வேலைப்பாடு செய்யப்பட்ட) தூய்மையான பட்டையோ நான் தொட்டதில்லை.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் (உடல்) மணத்தை விட சுகந்தமான ஒரு நறுமணத்தை நான் நுகர்ந்ததேயில்லை. வேறு சில அறிவிப்புகளில் உடல் மணம் என்பதற்கு பதிலாக வியர்வை என்று இடம் பெற்றுள்ளது. (ஹழ்ரத் அனஸ் (ரலி) ஸஹீஹுல் புகாரி 3561)

பராஃ (ரலி) அவர்கள் அறிவித்த நீண்ட ஒரு சம்பவத்தை சுருக்கமாகச் சொல்கிறேன்.

அப்துல்லாஹ் இப்னு அதீக் (ரலி) அவர்கள் அபூ ராபிஃ என்ற யூத வியாபாரியை அவனுடைய கோட்டைக்குச் சென்று கொலை செய்துவிட்டு இரவு நேரத்தில் இறங்கும் பொழுது இடையில் கால் சறுக்கி கீழே விழுந்து அவர்களுடைய கெண்டைக் கால் முறிந்துவிட்டது. அப்துல்லாஹ் இப்னு அதீக் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் நடந்த சம்பவத்தை நபிகள் நாயகத்திடம் கூற நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உங்களுடைய காலை நீட்டுங்கள். என்று கூறினார்கள். நான் காலை நீட்டினேன். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதன் மீது தடவினார்கள். நான் அதில் ஒரு பொழுதும் நோய் வாய்ப்படாதவனைப் போன்று மாறிவிட்டேன் என்று அப்துல்லாஹ் இப்னு அதீக் (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஸஹிஹுல் புகாரி 4039)

நான் (மக்காவில்) உக்பா பின் அபீ முஅய்யத் என்பவரின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களும், அபூபக்கர் (ரலி) அவர்களும் என்னிடம் வந்தார்கள்.

அப்பொழுது அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், சிறுவரே பால் இருக்கிறதா? என்று கேட்டார்கள். அதற்கு நான், ஆம் உள்ளது. எனினும் நான் நம்பி ஒப்படைக்கப்பட்டவனாக இருக்கிறேன். (யாருக்கும்நான் இவ்வாடுகளின் பாலை என் விருப்பப்படி வழங்க முடியாது) என்றேன். அப்பொழுது அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், சினையாகாத ஆடு எதுவும் உள்ளதா? என்று கேட்டார்கள். உடனே ஓர் ஆட்டை நான் அன்னவர்களிடத்தில் கொண்டு வந்தேன்.

உடனே (அதிலிருந்து) பால் வர ஆரம்பித்துவிட்டது. ஒரு பாத்திரத்தில் பாலைக் கறந்து அவர்கள் பருகினார்கள். அபூபக்கர் (ரலி) அவர்களுக்கும் வழங்கினார்கள்.

(ஹழ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) முஸ்னத் அஹ்மத்)

அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நான் பார்த்தேன். அஸருடைய தொழுகையின் நேரம் வந்தது. (ஒழுச் செய்யத்) தண்ணீரை மக்கள் தேடினார்கள். அது கிடைக்கவில்லை. ஒலூச் செய்ய ஒரு பாத்திரம் (தண்ணீர்) அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களுக்குக் கொண்டுவரப்பட்டது. அப்பாத்திரத்தில் தங்கள் கையை வைத்துக் கொண்டு அதிலிருந்து ஒழுச் செய்யுமாறு மக்களுக்குக் கட்டளையிட்டார்கள். அவர்களுடைய விரல்களுக்கு அடியிலிருந்து தண்ணீர் வெளிவருவதை நான் பார்த்தேன். அவர்கள் அனைவரும் ஒழுச் செய்தனர்.

(ஹழ்ரத் அனஸ் இப்னு மாலிக் (ரலி) – ஸஹீஹுல் புகாரி)

ஹுதைபிய்யா நாள் அன்று மக்களுக்கு தாகம் ஏற்பட்டு விடவே அவர்கள் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தனர். அவர்களுக்கு முன்னால் தண்ணீர்ப்பை வைக்கப்பட்டிருந்தது. நாங்கள் ஒழு செய்யவோ குடிக்கவோ எங்களிடம் தண்ணீர் இல்லை. தங்களுடைய தண்ணீர்ப் பையில் இருப்பதைத் தவிர என்று தோழர்கள் கூறினார்கள். அப்பொழுது அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் தண்ணீர்ப் பையில் தங்களின் கையை வைத்தனர். உடனே அவர்களுடைய விரல்களிலிருந்து தண்ணீர் பீரிட்டு வரத் தொடங்கியது. ஊற்றுக் கண் (திறந்தாற்) போல. எனவே நாங்களும் ஒழுவும் செய்து குடிக்கவும் செய்தோம். அச்சமயம் நீங்கள் எத்தனைப் பேர் இருந்தீர்கள்? என்று ஜாபிர் (ரலி) அவர்களிடம் கேட்கப்பட்டது. (அதற்கு) அவர்கள், நாங்கள் ஒரு லட்சம் பேர் இருந்திருப்பினும் அது எங்களுக்குப் போதுமானதாக இருந்திருக்கும். ஆனால் நாங்கள் ஆயிரத்து ஐநூறு பேர்கள்தாம் இருந்தோம் என்று கூறினார்கள்.

# ஷரீஅத் முதலா? முழவா?

ஏ.என்.எம். முகம்மது யூசுப் ஹக்கிய்யுல் காதிரிய். மதுக்கூர். கத்தார்

மார்க்கத்தில் முதல் என்ன என்று கேட்டால் எல்லோரும் கலிமா என்றும் அது லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்றும் வார்த்தையில் எளிதாகக் கூறிவிடுவர். ஆனால் இது வெறும் வார்த்தை மட்டும் அல்ல, நமது மார்க்கத்தின் தாரக மந்திரம், பிரபஞ்சத்தின் மூலாதாரம். ஒவ்வொரு மனிதனின் வாழ்வின் அஸ்திவாரம் என்றால் மிகையில்லை. இதன் உண்மை விளக்கத்தின் மூலமாகவே இறைவனை அறிந்து செயல்பட்டு அதன் மூலம் நமது கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நமக்குத் தந்த நல்வாழ்வைப் பெறமுடியும்.

இந்தக் கலிமாவை க் கற்றுக் கொள்ளவே இரண்டை விட்டுச் செல்கிறேன் என்று குர்ஆன், மற்றது எனது குடும்பத்தார்கள் என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள். குர்ஆனுக்கு உள்ளும் புறமும் உண்டு எனவே அதை முறையாக அறிந்தவர்கள் நமது உயிரினும் மேலான கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அஹ்லுல் பைத்துகள். இதனால் தான் சட்டமேதையும், மத்ஹபைத் தோற்றுவித்தவர்களுமாகிய மிகப் பெரிய இமாம் அபூ ஹனீபா (ரஹிமஹுல்லாஹ்) அவர்களுடைய முதுமையான காலத்தில் தன்னுடைய வயது எத்தனை என்று குறிப்பிடும் போது 2 என்பதாகக் கூறி, அதன் காரணம், ஆருயிர் நபியின் திருப்பேரர், மகத்துவமிக்க இமாம் ஜாபர் சாதிக் (ரலி) அவர்களின் திருக்கரம் பற்றிய பிறகே தாம் பிறந்ததாக உணர்வதாகக் கூறி அதற்கு முன்பு வாழ்ந்த வாழ்வு கணக்கில் கொள்ள முடியாது, வீண் என்று உணர்ந்து அறிவிக்கிறார்கள்.

சரீஅத் சட்டங்களைத் தொகுத்தவர்கள் சட்டங்களுக்கு குர்ஆன் ஹதீஸ் வழங்கிய விளக்கம் தந்தவர்கள் தான் இமாம் ஜாபர் சாதிக் (ரலி) அவர்களிடம் உரையாடி அவர்களின் தெளிந்த நுட்பமான அறிவைக்கண்டுஅதன் மூலம் ஹக்கினை அறியக்கூடிய அருளைப் பெற்று தன்னைவிட நாயகத்தின் பேரர் மிக உயர்ந்தவர்கள் எனக் கண்டு அஹ்லுல் பைத்துகளின் மேன்மையை உலகிற்கு எடுத்துக் கூறுகிறார்கள். எனவேதான் இறைவனை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விளக்கியபடி அறிந்து வாழ்பவர்கள்அஹ்லுபைத் செய்குமார்களும் வலிமார்களுமே என்பது எளிதாய் அறிய முடிகிறது.

ஒரு புதிய மருந்தை ஒரு குறிப்பிட்ட வியாதிக்காக கண்டு பிடித்து அதை வெறும் பாட்டிலில் அடைத்து எந்தக் குறிப்பும் இல்லாமல் விற்றால் அதை வாங்குபவர்கள் தன்னுடைய எல்லா நோய்களையும் நீக்குவதற்குப் பயன்படுத்தினால் அதன் விளைவுகள் எப்படி இருக்கும்? ஆனால் அந்த மருந்து பாட்டிலில் இந்த மருந்து திரவ அல்லது கேப்சூல் நிலையில் உள்ளது. இதை இத்தனை நாட்களுக்குள் பயன்படுத்த வேண்டும். இதை இத்தனை டிகிரி உஷ்ணத்திற்கு மேல் வைக்கக் கூடாது. இது வெளி , அல்லது உள்

உபயோகத்திற்கானது, இதை மருத்துவர்களின் ஆலோசனையின் அடிப்படையில் பயன்படுத்த வேண்டும் என்று அதன்பௌதிக குணங்கள் எழுதப்பட்டும் மேலும் இதில் இந்த இந்த ரசாயனங்கள் இந்த இந்த விகிதத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இது இந்த வியாதிகளை நீக்கும், இதில் இந்த இந்த பக்க விளைவுகள் உள்ளது என்று அந்த மருந்தின் வேதியல் குணங்களையும் எழுதி வைத்தால் அதை சரியான முறையில் பயன்படுத்தி நம்முடைய வியாதிகளை நீக்கிக் கொள்ளமுடியும்.

இந்த உதாரணப்படி உலகிலுள்ள எல்லாம் வெளியாகி இறுதியில் மனிதனும் ஆள்வதற்கு வெளியானபின், எப்படி இந்தப் பிரபஞ்சத்தில் தன்னை ஆட்படுத்தி வாழவேண்டும் என்பதறியாமல் எப்படி விளக்கமில்லா மருந்தை தவறாகப் பயன்படுத்தி தன்னை அழித்துக் கொண்டானோ அதேபோல் தன்னையும் தன்னோடு உள்ளவர் களையும் அழித்து அறியாமையில் உழல்கிறான். இறை வெளியான மனிதன் மேல் இரக்கப்பட்டு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை மனித கோலத்தில் வெளியாக்கி எவ்வாறு மனிதனின் உண்மை, ஆற்றல் ரகசியம், மனிதன் வெளியான நோக்கம் எல்லாவற்றையும் தெரியப்படுத்தி எப்படி விளக்கமில்லா மருந்து பாட்டிலின் மீது விளக்கத்தை ஒட்டினார்களோ அதே போல் எல்லா விளக்க அறிவுகளையும் இந்த நானிலத்தில் பதித்து வைத்தார்கள் நம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.

எனவே மனிதன் தன்னை அவர்களின் விளக்கத்தின் படி அறிந்து அதன் மூலம் தன்னையும் தன் சூழ உள்ள பிரபஞ்சத்தையும், அதன் மூலமான இறைவனையும், இதை விளக்க வந்த ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் அறிந்து அதன்படி அவன் வாழ்வை வடிவமைத்துக் கொண்டால் அந்த வாழ்வு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வாழ்ந்து காட்டித் தந்த சரீஅத் நடை முறைக்கு முற்றிலும் உட்பட்ட வாழ்க்கையாகவே அமையும். எப்படி மருந்தின் தன்மையை அறிந்து அதைப் பயன்படுத்தி பலனடைகிறோமோ அது போலத்தான்.

நபிமார்கள், குத்புமார்கள், வலிமார்கள், மகான்களின் வாழ்வு தொடக்கம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உயர்வாக்குக்கு ஏற்ப இறைவனை அறிந்து தன்னைஅறிந்து, தான் வாழும் பிரபஞ்சத்தை அறிந்து இறுதியில் அவர்களின் வாழ்வு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வாழ்ந்து காட்டிய சரீஅத்தின் வாழ்வாகவே அமைகிறது. அதனால்தான் அவர்களின் போதனை முதலில் அல்லாஹ்வை அறியும் மஃரிபாவில் தொடங்கி அதைத் தெளிவுடன் புரிந்து அதன் பலனாகிய சரீஅத்தைப் பெற்று வாழ உதவும் வழியாக அமைகிறது.

ஆனால், சாதாரண பொது மக்கள் சரீஅத் இப்படி அப்படி என்று பார்த்துப் பார்த்து தங்கள் குணங்களை மாற்றி மாற்றி வாழ முயற்சிக்கிறார்கள். இவர்கள் சரீஅத்திலிருந்து மஃரிபாவை அடைய முயலுகினறனர். ஆனல் சரீஅத் என்பது மஃரிபாவை நன்கு விளங்கிக் கொண்டவர்களுக்கு அதிலிருந்து விளையும் சுவையான கனியாக சரீஅத் அமைந்துவிடும். அதிலே எப்போதும் மாற்றமும், குழப்பமும் இருக்கபோவது இல்லை.

மஃரிபாவை அறியாது சரீஅத் நிலையில் இருப்பதாகக் கூறிக்கொள்பவர்கள் தங்களின் வசதிக்கு ஏற்ப சரீஅத் சட்டத்தை வளைத்துக் கொள்கிறார்கள்.

சங்கைமிக்க குத்பு நயகம் (ரலி) அவர்கள் கூறும்போது இறுதியில் எங்களின் பாட்டனாரின் சரீஅத்தில் வந்து அமர்ந்து கொண்டதாகக் கூறுகிறார்கள். எனவே இறையை முறையாக அஹ்லுபைத்துகளின் மூலம் அறிந்தால் ஏற்படும் வாழ்க்கை முறையே சரீஅத் நிலையாகும். எனவே எப்படி இறைவனின் அமாவிலிருந்து மனிதன் இறங்கிய வழியாகிய மஃரிபாவை அறிந்து, எதற்கு இறங்கி இப்பூவுலகில் வாழ்கிறானோ அதைச் செய்வதே சரீஅத் என்றும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தந்த மாற்றமில்லா நிறை வாழ்வாகும். எனவேதான் உண்மை இறைஅறிவு மட்டுமே நிறைவான சரீஅத் வாழ்வைத் தரும் என்பதால் மகான்கள் மட்டுமே ஷிர்க் அற்ற சரீஅத் வாழ்வை வாழ்கிறார்கள். அவர்களிடம் அண்டி இந்த வாழ்வைப் பெற்றவர்களும் அன்னவர்களின் வழிகாட்டுதலால் இறைவனை சாட்சியாகக் கொண்டு இறைவனின் கண்காணிப்பை உறுதிகொண்டு உண்மை நிலையில் வாழ்ந்து இம்மை மறுமைப் பேறுகளை பெறமுடியும்.

அந்த வகையில் நாம் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் புனித பாரம்பரியத்தில் உதித்த நமது உயிரிலும் மேலான செய்கு நாயகத்தின் பேரருளால் ஷிர்க்கின்றி உண்மையான சரீஅத்தை அடிப்படையாகக் கொண்ட நல்வாழ்வைப் பெற்று நலமுடன் வாழ்கிறோம். எனவே அவர்களுக்கு நம் மெய், மொழி செயல்களால் என்றுமே நன்றியுடையவர்களாக வாழவேண்டும். அதற்கும் நம் நாயகம் கிருபை செய்வார்களாக!

ஆனால், மஃரிபா ஞானமில்லாத மக்கள் தேவைப்பட்டபோது தேவைப்பட்டதைச் செய்து சரீஅத்தை தன்னுடைய இஷ்டத்திற்கு ஏற்ப வளைத்து, தனக்குத் தானே தீங்கிழைத்துக் கொள்பவர்களாக வாழ்ந்து மகான்களை, வலிமார்களை ஷிர்க் என்று தவறாகக் கூறி, தன்னுடைய ஷிர்க் நிலையை நீக்கத் தகுதியில்லாமல் வாழ்கிறார்கள். இறைவனைப்பற்றி வார்த்தைகளில் பேசி அவனுடைய இருப்பை அறியாது இறையச்சம் இன்றி வாழ்ந்து இறைவனின் அச்சத்திலும் வாழும் மகான்களை ஏசித்திரிந்து இறைவனின் சாபத்திற்கு ஆளாகிறார்கள்.

**எனவே சரீஅத் என்பது மகான்களுக்கு இவ்வுலக வாழ்வின் முடிவுநிலை மற்றவர்களுக்கு அதுவே அவர்கள் தரும் படிப்புநிலை. உலகின் முடிவு நிலையான சரீஅத்திலிருந்து அவர்கள் தங்களின் உண்மை நிலையாகிய இறைநிலையில் என்றும் நித்திய ஜீவியாகவே இருக்கிறார்கள்.**

எனவே இக்கால குரு நாயகம் நமது ஆருயிர் செய்குநாயகம் அவர்களின் திருப்பேரர் செய்யிதுனா செய்யிது யாசீன் அலி நாயகம் அவர்கள் இந்த நிலையில் இருந்து நமக்குக் கற்றுத் தந்து வாழ்கிறார்கள். எனவே அவர்களைப் பின்பற்றி வாழும் நாம் இறையை அறியும் மஃரிபாவை முதன்மையாய்க் கொண்டு அதன் மூலம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்தந்த சரீஅத் நிலையில் இவ்வுலகில் வாழ்ந்து இம்மை மறுமை இரண்டிலும் நற்பேறுகளைப் பெற்று நலமுடனும் வளமுடனும் வாழ்வாங்கு வாழ்வோம். ஆமீன்.

# முத்தான மூன்று நாட்கள்.

– 2022 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் தேதி திங்கட்கிழமை அன்று சங்கைக்குரிய ஷைகு நாயகம் அவர்களை, இலங்கை வெலிகமையில் உள்ள பைத்துல் பரக்காஹ் திரு இல்லத்தில் நோன்பில் தரிசிக்கும் வாய்ப்புப் பெற்றோம்.

– இந்த புனிதப் பயணத்தில் என்னோடு ஆத்தும சகோதரர் முதுகுளத்தூர் ஃபக்ரூத்தீன் அலி அஹமது ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களும் கண்ணியத்திற்குரிய கோவை ஆலிம் ஷர்புதீன் ஆலிம் பைஜி அவர்களும் உடன் வந்திருந்தார்கள். ஏறக்குறைய மூன்று தினங்கள் ரஹ்மத் நிறைந்த வாப்பா நாயகம் அவர்களின் புனிதம் நிறைய அவர்களுடைய திரு இல்லத்தில் அருளானந்தத்தில் திளைத்து வந்தோம்.

– ஒவ்வொரு நாளும் பகல் பொழுதிலும் மாலை மற்றும் மஃரிப் பிறகும் சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்களைச் சந்தித்து அருகில் அமர்ந்து அருள் நிறைந்த ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டிருந்தோம். அந்த மூன்றுநாட்களும் சங்கைக்குரிய திருக்குடும்பத்தார்களின் உபசரிப்பின் சிறப்பை வரிகளால் வர்ணிக்க இயலாது.

– அந்த புண்ணிய நாட்களில் சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்களின் உடல்நலம் சற்றுக் குறைவாக இருந்த போதிலும் அவர்களின் ரூஹின்பலம் அவர்களின் வார்த்தைகளில் மிகுந்த இளமையாக வெளிப்பட்டுக் கொண்டு இருப்பதை நாங்கள் உணர்ந்தோம்.

– சங்கைக்குரிய வாப்பா நாயகத்தின் மாறாத புன்னகை அன்பும் கனிவும் கலந்த அரவணைப்பு தாயினும் மேலான உபசரிப்பு எங்களுக்கு மிகப்பெரும் ரஹ்மத்தாக அமைந்திருந்தன.

– ஒவ்வொரு பொழுதிலும் நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் போது மிகுந்த மகிழ்ச்சியுடனும் புன்னகை மாறாத முகத்துடன் பல்வேறு செய்திகளை சங்கைக் குரியவாப்பா நாயகம் அவர்கள் எங்களோடு பேசிக்கொண்டு, அனைத்து உயிர்ப்பான முரீதுப்பிள்ளைகளின் ரிஸ்கு அபிவிருத்திக்காக அதிகம் பிரார்த்தனை செய்த வண்ணம் இருந்தார்கள். இப்படியாக காலை முதல் இரவு வரை பேச்சு நீண்டு கொண்டே போகும். சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்களுக்கு சிரமம் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் எங்கள் மனதில் ஏற்பட்டதை அறிந்து, அருளான தர்பார் நாயகம் அவர்கள் எம் பிள்ளைகளைச் சந்திப்பது தான் எங்களுக்கு மகிழ்ச்சி

என்று கூறி எங்களின் உள்ளங்களுக்கு ஆறுதல் கூறி, எங்களைத் தொடர்ந்து அமரச் செய்து தங்களது அறிவுரைகளைத் தொடர்வார்கள்.

– அல்ஹம்துலில்லாஹ். அல்ஹம்துலில்லாஹ். அல்ஹம்துலில்லாஹ்.

– இந்தப் புனிதச் சந்திப்பில் எங்களோடு வந்திருந்த கண்ணியத்திற்குரிய ஷர்புதீன் ஆலிம் அவர்களை முதல்நாள் சந்திப்பின்போதே சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்களின் தர்பார்முன் ஆலிம் அவர்களைப் பற்றிய சில செய்திகளுடன் அறிமுகப்படுத்தினேன்.

– மேலும் சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்களிடம் இரண்டு மூன்று முறை ஆலிம் அவர்கள் தொலைபேசி வாயிலாக பேசியதை ஆலிம் அவர்களே சங்கைக்குரியவாப்பா நாயகம் அவர்களிடம் நினைவூட்டினார்கள்.

– மேலும் நானும் தர்பார்நாயகத்தின் பிறந்ததின விழாவில் திருச்சியில் நம் மதுரஸாவின் வளாகத்தில் நடைபெற்ற விழாவில் ஆலிம் அவர்கள் அஹ்லுல் பைத்தின் மாண்புகளையும் புனித விசேடத் தன்மைகளைப் பற்றியும் பேசியதோடு, ஒரு கட்டத்தில் அருளான வாப்பா நாயகத்தை இதுவரை நேரில் சந்திக்கவில்லை என்று கண்ணீர்விட்டு அழுத நிகழ்வையும் எடுத்துக்கூறினேன்.

– சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்கள், ஆலிம் அவர்களும் நிறைய விடயங்களைப் பேசிக் கொண்டே இருந்ததைக் கண்டோம்.

– முதல் நாள் அறிமுகப்படுத்தி வைத்ததில் இருந்து நாங்கள் தங்கியிருந்த மூன்று நாட்களும் சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்கள் ஆலிம் அவர்களை மிக நெருக்கமாக இருத்திக் கொண்டு ஆசீர்வதித்தார்கள்.

– எங்க ஆலிம் பிள்ளை எங்ககிட்ட வந்து விட்டது என்று பல தடவைகள் கூறி ஆசிர்வதித்தார்கள்.

– இப்படிப்பட்ட ஒரு சன்னிதானத்தை தன்வாழ்நாளில சந்திக்கத்தான் காத்திருந்த செய்தியையும், வஹ்தத்துல் உஜூது அதன் உள்ளார்ந்த உண்மையான கல்வியை, தான் தேடி அலைந்ததையும் ஆலிம் அவர்கள் சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்களிடம் தெரிவித்த தருணத்தில், இந்தியாவில் இருந்து யாரோ ஆலிம் அவர்கள் எனனைச் சந்திக்க வருகிறார்கள் என்று அனுமதி கேட்டார்கள்.

– முதலில் நாம் மறுத்துவிட்டோம். சில ஆலிம்களின் போக்குவேறு, நமது போக்கு வேறு அவர்கள் ஷரியத்தை மட்டுமே பிடித்துக் கொண்டு தொங்குவார்கள். நாம் ஷரீயத்துடன் ஹக்கிய்யத்தையும் சேர்த்து முழுமையாகப் போதிப்பவர்கள் என்று தான் அனுமதி கொடுக்கவில்லை. ஆனால் இந்தப் பிள்ளை, எங்க ஆலிம்

பிள்ளை, எங்க கிட்ட வந்து சேர்ந்து விட்டது என்று கூறி ஆலிம் அவர்களிடம் மிகவும் உகப்புக் கொண்டார்கள். – கல்வி விடயமாக அகீதா, மார்க்கக்கல்வி, உலகக்கல்வி, வாழ்க்கைக் கல்வி, இவைகளைப் போதிக்கும் முறைகள், மேலும் மதுரஸா, பள்ளிக்கூடம், கல்லூரி ஆகிய வற்றின் கட்டமைப்பு மற்றும் பிள்ளைகள் பயிலும் முறை, பயிற்றுவிக்கும் ஆசிரியர்களின் தகுதி முதலான விடயங்களைப் பற்றி அருளிய சங்கை பொருந்திய வாப்பா நாயகம் அவர்களின் பேச்சு அதிகமாகக் கல்வியைப் பற்றியே இருந்தது. – இத்தருணத்தில் நம் மதுரஸாவின் தொலை நோக்குத் திட்டத்தைப் பற்றியும் வெளிப்படுத்தினார்கள்.

– இரண்டாம் நாளின் அமர்வின் மாலைப் பொழுதில் மஃரிப் நேரம் சங்கைக்குரியவாப்பா நாயகம் அவர்கள் தீர்க்கமாக எங்களைச் சாட்சியாக்கி ஒரு உத்தரவைப் பிறப்பித்தார்கள்.

– மௌலவி ஷர்புத்தீன் ஆலிம் அவர்களை, நம் மதுரஸாவின் ஃபத்வா கமிட்டியில் உறுப்பினர் ஆக நியமனம் செய்து உத்தரவிட்டார்கள். மேலும், இந்த உத்தரவை அனைவருக்கும் பகிருமாறும் எங்களிடம் (இம்தாதுல்லாஹ் ஃபக்ருதீன்) அறிவுறுத்தினார்கள்.

– மூன்றாவது நாள் சங்கைக்குரியவாப்பாநாயகம் அவர்களிடம் கண்ணீர்மல்க, பிரியாவிடை பெறும் சமயத்தில் தங்களின் பேரப் பிள்ளை சங்கைக்குரிய யாசீன் அலி மௌலானா நாயகம் அவர்களின் திருமணவைபவத்தில் அவசியம் கலந்து கொள்ள சங்கைக்குரிய வாப்பாநாயகம் அவர்களே எங்களுக்கு அழைப்புக் கொடுத்தார்கள்.

– சங்கைக்குரிய வாப்பா நாயகத்தின் இந்த அழைப்பு எங்களுக்கு மிகுந்த புத்துணர்வைக் கொடுத்ததோடு, மீண்டும் சந்திக்கும் பாக்கியத்தை உறுதி செய்து ரஹ்மத்தாக அமைந்தது.

– தித்திக்கும் நினைவுகளாக நாங்கள் வாப்பா நாயகத்தின் துஆவான.– பிள்ளைகளின் வளமான வாழ்வு, நீண்ட ஆயுள், தொழில் அபிவிருத்தி, பெரும் செல்வம், ஆன்மீகத்தில் உச்சம், சமுதாயத்தில் கண்ணியம், நற்குணம் மிக்க குழந்தைகள் பாக்கியம், மனநிறைவான வாழ்வு ஆகிய வாப்பா நாயகம் அவர்களின் அருள் மிக்க துஆவை (பிராத்தனைகளை) மீண்டும் மீண்டும் நினைவுகூர்ந்த வண்ணம் பயணப்பட்டோம். – ஆமீன். ஆமீன். ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**– பயணக்கட்டுரை. – அஹமது இம்தாதுல்லாஹ் – முதுகுளத்தூர்**

# படேசாஹிப் ஹள்ரத் (ரலி)

*(கலீபா. எம். சிராஜுதீன் பி.எஸ்.சி ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி.)*

ஸர்தார் அப்துல் கறீம் ஹள்ரத் அவர்களிடம் சென்று தமக்காக துஆ செய்யும்படி வேண்டினால் அவர்கள் அவரைத் தம் ஆசான் படே சாஹிப் ஹள்ரத் (ரலி) அவர்களிடமே அனுப்பி வைப்பார்கள். அந்த அளவுக்கு குரு விஸ்வாசம். இன்று இதுபோன்ற மனிதர்களைப் பார்க்கக் கூட முடியவில்லை.

ஒரு தடவை காயல் பட்டினத்திலிருந்து மூஸா சாஹிப் என்பவர் ஸர்தார் அப்துல் கறீம் ஹள்ரத் அவர்களிடம் வந்து, நான் என் பிள்ளைகளுக்கு மார்க்க அறிவுரை கூறி அவர்களை தர்தீப் செய்ய வேண்டியுள்ளது. அதற்கு எனக்கு நல்ல நா வன்மையை நல்க வேண்டும் என்று வேண்டினர். நம் ஹள்ரத் அவர்கள் அவரையும் தம்முடைய ஷெய்கு படே சாஹிப் ஹள்ரத் அவர்களிடமே அனுப்பி வைத்தார்கள். அப்போது ஷெய்கு படே சாஹிப் ஹள்ரத் (ரலி) அவர்கள் கடலூர் மஞ்சக்குப்பத்தில் தான் வாழ்ந்து வந்தார்கள். ஸர்தார் அப்துல் கறீம் ஹள்ரத் அவர்கள் நெல்லிக்குப்பத்தில் சின்னத்தெரு பள்ளியில் பணியற்றி வந்தார்கள்.

காயல் பட்டினத்திலிருந்து வந்த மூஸா சாஹிப் அவர்கள் நம் ஹள்ரத் அவர்கள் கட்டளைக்கிணங்க படே சாஹிப் ஹள்ரத் (ரலி) அவர்களிடம் சென்று தம் வேண்டுகோளை வைக்கும் போதே உங்கள் வேண்டுதல் அப்பவே உங்களுக்கு கொடுக்கப்பட்டு விட்டதம்மா என்று சிரித்துக் கொண்டே கூறினார்கள். அதாவது மூஸா சாஹிப் அவர்களை ஸர்தார் ஹள்ரத் அவர்கள் தம் செய்கிடம் போகும்படி சொன்ன போதே அவர் வேண்டுதலை ஷெய்கு அவர்கள் கபூல் செய்து விட்டார்கள். இப்படித்தான் இருக்க வேண்டும் ஷெய்கு, முரீதுகளுடைய தொடர்பு.

சுமார் 30 வருடங்களுக்கு மேல் இருக்கும். செல்போன் வசதி இல்லாத நேரம் அது ஒரு நாள் நான் ஒரு கனவு கண்டேன். அதில் நாம் ஷெய்கு நாயகம் அவர்கள் தலையில் வலது புற காதுக்கு மேலே வட்டமாக அவர்களது அழகான, அருமையான, முபாரக்கான தலை முடி வெட்டப்பட்டு இருப்பது போல் தெரிந்து. சாதாரணமாக தலையில் அடிபட்டால் தான் இப்படி ஒட்ட வெட்டுவது வழக்கம். நான் பதறிப்போய் உடனே நம் ஷெய்குநாயகம் அவர்களுக்கு லட்டர் மூலம் கனவுகண்டதை எழுதி விபரம் கேட்டேன்.

அதற்கு ஷெய்கு நாயகம் அவர்கள் பதில் பட்டோலையில் (துபாலில்) சிராஜுதீன் நீங்கள் கண்டது உண்மைதான். நான் குளியல் அறையில் வழுக்கி விழுந்துவிட்டேன். குழாயில் பட்டு லேசான காயம் ஏற்பட்டு விட்டது. அது உங்களுக்குக் காட்டப்பட்டிருக்கிறது என்றார்கள்.

ஒருசமயம் படே சாஹிப் ஹள்ரத் அவர்கள் பொதக்குடிக்குச் சென்று மதரஸா அந்நூருல் முஹம்மதிய்யின் மேல் மாடியில் தங்கி இருந்தார்கள். அன்று இரவு சொற்பொழிவுக்கு ஏற்பாடாகி இருந்தது. அப்பொழுது ஒருவர் அவர்கள் அணிந்து கொண்டு சொற்பொழிவாற்றுவதற்குப் பட்டுப்போன்று மிருதுவான கோடுகள் போடபட்ட நீலநிறத் துணியால் தைக்கப்பட்ட ஒரு ஜுப்பா போன்ற அங்கி ஒன்றைக் கொண்டு வந்து காணிக்கையாக வழங்கினார்கள்.

அதனை அன்புடன் பெற்றுக் கொண்ட ஷெய்கவர்கள் ஸர்தார் அப்துல் கறீம் ஹள்ரத் அவர்களை நோக்கி, என்னம்மா நான் இதை அணிந்து கொள்ளலாமா? என்று வினவினார். அதற்கு ஸர்தார் அவர்கள், தங்களுக்கு எல்லாம் ஆகும் என்று பதில் கூறினார்கள். பாம்பின் கால் பாம்பே அறியும் என்ற பழமொழிக்கேற்ப, தம் ஆசானின் மாண்பினை உணர்ந்தே அவர்கள் அவ்விதம் கூறினார்கள். என்பதில் ஐயமில்லை.

ஷெய்கு பதுருதீன் அஹமது படே சாஹிப் ஹள்ரத் அவர்களிடம் இல்லை என்று வருபவர்களுக்கு இல்லை என்று சொன்னதேயில்லை. ஷெய்கு படே சாஹிப் ஹள்ரத் அவர்கள் வீட்டின் முன் தினமும் ஏழைகள் உதவி கேட்டு வந்து கொண்டே இருப்பார்கள். மாத சம்பளம் வாங்கி வந்து அன்றே அவர்கள் அதனை தர்ம வழியில் செலவழித்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள்.

அதனால் ஷெய்கு படேசாஹிப் ஹள்ரத் அவர்களை தேனை தேனீக்கள் மொய்பது போல மொய்த்துக் கொண்டே இருப்பார்கள். அதோடு ஷெய்கு அவர்களைக் காண வருபவர்களுக்கு ஒரு கவள உணவு தயாரித்து வழங்குவார்கள். இதனால் ஷெய்கு அவர்களுக்கு பணத்தின் தேவை இருந்து கொண்டே இருந்தது. இதனை அறிந்து கொண்ட ஸர்தார் ஹள்ரத் அவர்கள் ஷெய்கைக் காண செல்பவர்களிடம் தம் மாணாக்கர்களிடமும், நீங்கள் ஷெய்கைப் பார்த்து விட்டு திரும்பும்போது உங்களிடம் உள்ள பணத்தில் உங்களுக்குத் திரும்பி வருவதற்கான டிக்கட் செலவு போக மீதம் உள்ள பணத்தை ஷெய்கு அவர்களிம் காணிக்கையாகக் கொடுத்துவிட்டு வரும்படி சொல்லி அனுப்புவர்கள்.

இதுதான் எல்லா ஷெய்குமார்களுக்கும் உள்ள நடைமுறையாகும். நாமும் நம் ஷெய்ககைத் தரிசிக்கச் செல்லும்போது எல்லாம் இந்த நடமுறையை கையாள்வது நம்கடமையாகும்.

ஷெய்குபடே சாஹிப் ஹள்ரத் அவர்கள் இப்படி வருவதெல்லாம் வாரி வாரி வழங்கியதால் அவர்கள் இல்லத்தை சரி செய்யக்கூட அவர்களால் முடியவில்லை. அவர்கள் வீடு ஒரு கீற்றால் வேயப்பட்ட சிறு குடிசைவீடு தான். இதைக் கண்டு மனம் வருந்திய சிலர் அதை சீரமைத்து நல்ல வீடாக கட்டித்தர முன்வந்தும் அதை அவர்கள் தடுத்து விட்டார்கள். மஞ்சக்குப்பத்தில் உள்ள அவர்கள் குடிசை வீட்டிற்கு நானும் கலீபா வலிய்யுல்காதிர் மௌலவி வேல்வார் கோட்டை காதிர் முஹம்மது ஆலிம் அவர்களுடன் சென்று வந்தோம். நாங்கள் போய்வந்து 20, 25 ஆண்டுகள் இருக்கும். இப்போது எப்படி உள்ளது என்று தெரிய வில்லை. இன்ஷா அல்லாஹ் ஒருமுறை போய்ப் பார்த்து வரவேண்டும் எனறு எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

ஷெய்கு படே சாஹிப் ஹள்ரத் அவர்கள் எப்போதும் மிக எளிமையான உணவே சப்பிடுவார்கள். பழைய சோறு, நீராகாரம் சின்ன வெங்காயம். அவர்களுக்கு மிகவும் பிடித்தமான உணவு.

ஒருமுறை ஷெய்கு படே சாஹிப் ஹள்ரத் அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேலைபார்த்துக் கொண்டிருக்கும்போது வெளியே ஆபிஸ் பின்புறம் போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது மாடியிலிருந்து ஒரு அலுவலர் வெற்றிலை போட்ட வாயைக் கொப்பளித்து வெளியே துப்பி விட்டார். அது எதிர்பாராத விதமாக ஷெய்கு படே சாஹிப் ஹள்ரத் அவர்கள் தலைப்பாகை மேலங்கி மீது விழுந்து விட்டது.

துப்பிய மனிதர் கீழே எட்டிப் பார்த்துவிட்டு துடியாய்த் துடித்துக் கொண்டு சாமி என்னை மன்னித்து விடுங்கள். நான் சற்றும் கவனிக்காமல் இப்படிச் செய்து விட்டேன் என்று பதறினார். அதற்கு பொறுமையின் சிகரமான ஷெய்கு அவர்கள் பரவாயில்லை அதனால் ஒன்றுமில்லை நீர் விட்டுக் கழுவினால் அது போய்விடும். நீங்கள் அதற்காக கவலைப்பட வேண்டாம் என்று சர்வ சாதாரணமாகக் கூறிவிட்டுச் சென்று விட்டார்கள் *(வருவார்கள்)*

## இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்

சிங்கப்பூர் ஏகத்துவ மெய்ஞ்ஞானசபை செயலாளர் ஹாஜா ஷேக் அலாவுதீன் அவர்களது மைத்துனர் (அக்காளின் கணவர்) ஜனாப். பாரூக் சுல்தான் அவர்கள் ஜொஹுர்பாருவில் மௌத்தாகி விட்டார்கள். அல்லாஹ் அன்னாரின் பிழைகள் பொறுத்து சுவனவாழ்வை அருள்வானாக!

சிங்கப்பூரில்

# சங்கைமிகு இளைய வாப்பா நாயகம் அவர்களின்

# புனித உதயதினவிழா

(நிகழ்ச்சி ஒளிப் பதிவு முஹம்மது நாசீர் ஹக்கிய்யுல் காதிரி.)

(உரைத் தொகுப்பு, முஹம்மது மாதிஹ் ஹக்கிய்யுல் காதிரி மற்றும் மஃதூம் ஹக்கிய்யுல் காதிரி.)

ஏகத்துவ மெய்ஞ்ஞான சபைச் செயலாளர் ஜனாப். ஹாஜா ஷேக் அலாவுதீன் ஹக்கிய்யுல் காதிரி அவர்கள் நிகழச்சியின் தொடக்கமாக சங்கைமிகு ஷெய்கு வாப்பா நாயகம் அவர்களை வரவேற்று, மற்றும் நிகழ்ச்சியின் தொடக்கமான மூன்று நிமிட மௌனம் தொடர்ந்து, ஏக காட்சி அரபி பைத்தை ஜனப் ஷேக் அல் மஃதூம் ஹக்கிய்யுல் காதிரி அவர்கள் ஓத, அவரைத் தொடர்ந்து, ஏக காட்சி தமிழ் விளக்கம் ஜனாப். முஹம்மது பஹீம் ஹக்கிய்யுல் காதிரி படிக்க, ஏகாந்தம் ஜனாப். ஜாஹிர் ஹுஸைன் ஹக்கிய்யுல் காதிரி அவர்கள் ஓதிட நிகழ்வு ஆரம்பம் ஆனது.

**சங்கைமிகு ஷைகு, இளைய வாப்பா நாயகம் அவர்களின் அருமையான உரை.**

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன். அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா சையிதினா முஹம்மதின் வஆலா ஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மாஈன்.

பிள்ளைகள் எல்லோரும் சிறப்பாக உரையாற்றினீர்கள். வாப்பா நாயகத்தின் பழைய நினைவுகள் எல்லாம் கூறி சிறப்பாக இருந்தது. ஒரு முறை வாப்பா நாயகம் எங்க கிட்ட சொல்றாங்க, மகன் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் நம் பாட்டனார் சொன்னது போல் இல்மு படிப்பதற்காக வேண்டி சீனா தேசம் சென்று படித்தாலும் படிக்க வேண்டும். அவர்களே எங்களுக்கு அதை முதலில் சொல்லிக் கொடுத்தார்கள்.வாப்பா நாயகம் தான் எங்களுக்கு ஷரீஅத், தரீகத், ஹகீகத், மஃரிபத் எல்லாம் ஒன்றாகத் தான் இருக்கிறார்கள்.

ஒரு முறை நான் அவர்களிடம் அரபி படித்துக் கொண்டிருக்கும்போது அவர்கள் என்ன சொன்னார்களென்றால், கனவு ஒன்று கண்டேன் மகன். எங்களது வாப்பா, (யாஸீன் வாப்பா நாயகம் அவர்கள்) எனக்கு அரபி சொல்லித் தருவதாகவும் ஒரு

பெரிய கிதாபு வைத்துள்ளதாகவும், நாங்கள் அவர்களுடன் கட்டில் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். கனவில் மேலும் கிதாபின் பக்கங்களைப் புரட்டி சொல்லி தருகிறார்கள். மகன், நான் உங்களுக்குப் பாடம் சொல்லித் தருவதை அவர்கள் (யாசீன் நாயகம் அவர்கள்) அறிகிறார்கள் என்பதையும், நங்கள் என்கிட்ட வந்து அரபி படிக்கிறது அவர்களின் (யாஸீன் நாயகத்தின்) விருப்பமாகவும் இருக்கின்றது.

அதுவே இல்முடைய மஃரிபத். இல்முடைய படிப்பிற்கு ஒரு எல்லையோ மட்டோ இல்லை. அது விரிவடைந்து கொண்டே இருக்கும். இல்மு படிப்பதை எங்கிருந்து ஆரம்பிக்க வேண்டும் என்றால், தாய் தகப்பனாரிடத்திலே தான் . முதலில் பிள்ளை பிறந்தவுடனே அந்தப் பிள்ளைக்கு ஒழுங்கான முறையில் இல்மைக் கற்றுக்கொடுக்க வேண்டும். ரசூலல்லாஹ்வைப் பற்றியும் அவர்கள் குடும்பத்தைப் பற்றியும் (அஹ்லுல் பைத்துகள்) சொல்லிக்கொடுத்து அந்தப் பிள்ளையை வளர்க்க வேண்டும். அது தான் முதல் கட்டாயமாக இருக்கு. அதன் பிறகும் அந்தப் பிள்ளைக்கு புத்தி எட்டிய பின், எல்லாம் அவர்களுக்கே சொந்தமாக கற்றுக்கொள்ளும் நிலைமை வந்தபின் அவர்களே வந்து அதை பேணிக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஹலாலான முறையில் இருக்க வேண்டும். முஹிய்யுத்தீன் அப்துல் காதிர் ஜீலானி ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், ஒரு நாள் சிறு வயதிலே சுப்ஹு தொழுதுவிட்டு தாயார் உம்மு பாத்திமா ரழியல்லாஹு தஆலா அன்ஹா அவர்களிடம் சென்று இல்மு படிப்பதற்கு ஆசைப்படுகிறேன், நான் பகுதாத் நகரம் போக அனுமதி தாருங்கள் என்று கேட்டார்கள். அப்போது உம்மு பாத்திமா நாயகியார் அவர்கள் நீங்க ஏன் பகுதாத் நகரம் போக வேண்டும். அது மிகவும் தூரமான இடமாக இருக்குதே. காடு, மலைப் பகுதி மற்றும் குறுகிய பாதையெல்லாம் இருக்கும். மேலும் அவர்கள் தனியாகச் செல்வதை விரும்பவில்லை.

இங்கேதானே மதுரஸாக்கள் இருக்கின்றன. இங்கே படிப்பதற்கு நான் ஏற்பாடு செய்து தருகிறேன், என்று சொன்னதற்கு முஹிய்யுத்தீன் ஆண்டவர்கள் அவர்கள் சொன்னார்கள், இங்கு மதுரஸா இருக்குது. குற்றம் ஒன்றும் இல்லை. என் வயதுப் பிள்ளைகளுடன் நான் விளையாடவேண்டி வருவதால் என்னுடைய படிப்பில் என்னால் கவனம் செலுத்த முடியவில்லை. விளையாட்டினால் முழு கவனமும் அதிலே செலுத்துகிறேன். எனக்கு இல்மில் கூர்மை உண்டாகாதே, அதனால் தான் நான் பகுதாத் போவதற்கு ஆசைப்படுகிறேன் என்று கூறினார்கள். அதன் பிறகு மிகவும் மன்றாடிக் கேட்டபோது தான் அவர்கள் தாயார் விருப்பப்பட்டு அவர்களை பகுதாதுக்குப் போகலாமென்று சொன்னார்கள்.

அவர்கள் இல்மை அங்கேயே படித்திருக்கலாம் அல்லவா? அவர்கள் விளையாட்டையும் வைத்து கொண்டு, முழுமையாகக் கற்றிருக்கலாம். ஏன் அவர்கள் அப்படிக் கூறினார்களென்றால் அது தவ்ஹீதுடைய இல்மு. அதை பரிபூரணமாக அவர்கள் அதைக் கற்றுக்கொள்ள வேண்டும் எனவும், எங்குமாய் அவனே இருக்கிறான்.

பரிபூரணமாக அவனே இருக்கும்போது விளையாட்டோ வேறு எண்ணங்களோ அதில் இருக்கக்கூடாது எனவும், பரிபூரண எண்ணமும் பரிசுத்த நிலையில் இருந்தால் மட்டும் தான் தவ்ஹீதுடைய இல்மைப் பெற்றுக்கொள்ள முடியும், என அவர்கள் சிறு வயதிலேயே சுட்டிக் காட்டினார்கள்.

ஜீலானி நகரிலிருந்து பகுதாது செல்வதற்கு 40 தீனார் கொடுத்து அனுப்பி வைத்தார்கள். அப்போது நாயகம் அவர்கள் சொன்னார்கள். இந்த இல்மை ஹலாலான முறையிலும் கற்றுக்கொள்ள வேண்டும். ஹலால் ஆன ஆகாரத்தைக் கொண்டு அந்த இல்மை நான் பேணிக்கொள்ள வேண்டும்.

அப்போது தான் அந்த இல்மு பலன் கொடுக்கும் என்று சொல்லி எனக்கு செலவு செய்து படிப்பதற்கு ஏதும் தாருங்களேன் என்று கேட்ட போது, அவர்கள் தாயார் அவர்கள் 40 தினார் கொடுத்து சென்று வாருங்கள் மகன் என்று சொல்லி நிறைய துஆ செய்து அனுப்பிவைத்தார்கள்.

அவ்வாறு அவர்கள் போகும் வழியில் சையிதுனா ஹிளுர் அலைஹிஸ் ஸலாம் அவர்களைச் சந்தித்தார்கள். அப்போது நாயகம் அவர்களின் வயது 15 இருக்கும். சையிதுனா ஹிளுர் (அலை) அவர்களைப் பார்த்து அவர்களிடமிருந்து ஞான விஷயங்களைக் கற்றுக்கொண்டார்கள். அதற்குப் பிறகு 17 வயதில் தான் அவர்கள் அங்கிருந்து பகுதாத் நகரம் சென்றார்கள். அதற்குப் பிறகுதான் நமக்கு அவர்களது வரலாறை அறிந்திருக்கிறோம். எப்படிபட்ட ஞான மகானாக இருந்தார்கள்.

இதையெல்லாம் எதற்கு நான் உங்களிடம் சொல்கிறேன் என்றால்,முதலில் நம் வாப்பா நாயகம் சொன்னது போல தவ்ஹீதுடைய இல்மை நல்ல முறையிலும் பரிசுத்த நிலையிலும் இருந்தால் மட்டுமே அதை அடையமுடிகின்றது. உங்களுக்கு எல்லாம் அதைச் சொல்வதற்குத் தேவையில்லை. வாப்பா நாயகத்தின் சிறப்பான பிள்ளைகளாகவே இருக்கிறீர்கள். மேலும் அதைச் சிறப்பித்து இன்னும் புதிய அர்த்தங்கள் உண்டாவதற்கு ஹக்கே உங்கள் எல்லோருக்கும் அருள் புரிய வேண்டும். அதே போன்றும் இன்னும் நிறைய தெளிவும், விளக்கங்களும். உங்கள் எல்லோருக்கும் கிடைப்பதற்கு ஹக்கே அருள் புரியட்டும். இத்தோடு இந்த உரையை நான் முடித்துக் கொள்கிறேன்.

நிகழ்ச்சியின் தொடக்க உரையாக

**ஜனாப். அப்துல் சுபஹான் ஹக்கிய்யுல் காதிரி அவர்களின் உரை.**

ஒரு சிறிய உதாரணத்துடன் எனது உரையை ஆரம்பம் செய்கின்றேன்.

ஒரு பத்து பவுன் தங்கம் வீட்டில் பாதுகாப்பாக வைத்திருக்கிறேன். அதை சில காலம் கழித்து வெளியில் எடுக்கிறேன். அதை நகைக் கடையில் கொடுத்து வேறு விதமான வடிவில் மாற்றி வைக்கலாம் என சொல்கிறேன். அதை எடுத்துச் செல்லும் போது என் நண்பர் அது என்ன என கேட்க, நானும் விவரத்தைக் கூறி கடைக்குச் செல்கிறேன். கடையில் நகையை வேறு விதமாக மாற்ற ஒரு வாரம் கழித்து வரச் சொன்னார்கள். ஒரு வாரம் கழித்து நான் கடைக்குச் செல்கிறேன். அந்த நகையை நான் கேட்ட வடிவில் புது வித டிசைனில் மாற்றிக் கொடுக்கிறார். அதை வாங்கிட்டு நான் வெளியே வரும் போது முன்பு பார்த்த அதே நண்பர் என்னவென்று கேட்கிறார். நானும் நகையை மாற்றி வாங்கிச் செல்கிறேன் என்று கூறினேன். அது நீங்க கொடுத்த அதே பத்து பவுன் தானா? என்பதற்கு என்ன உத்திரவாதம் என்று கேட்கிறார். நான் அவரை மேலும் கீழுமாக பார்த்துவிட்டு நான் வீட்டிற்கு சென்று நகையைப் பத்திரப்படுத்துகிறேன்.

நாமெல்லாம் சுமார் 25 ஆண்டு காலம், 1999 இல் இருந்து 2023 வரை விஜயம் செய்து நம் ஒவ்வொருவரையும் சந்தித்து உரையாடி ஞான விளக்கங்களை அள்ளித் தந்து சிங்கப்பூர் சபையை உருவாக்கி மிகச் சிறப்புடன் நடத்தி நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையையும் மேம்படுத்திய நம் சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்கள், இன்றைய காலத்தின் இளைய வாப்பா நாயகமாக வெளியாகி இருக்கிறார்கள் என்ற தாற்பரியத்தை விளங்க வேண்டும் என்பதற்கே அந்த உதாரணத்தைச் சொல்லிக் காண்பித்தேன்.

ஒரு உலோகத்தின் தன்மையை நம்மால் சற்று எளிதாகப் புரிந்து கொள்ளமுடிகிறது. ஆனால் ஹகீகத்தின் வெளிப்பாடுகளை அவ்வளவு எளிதில் அறிந்து கொள்ள முடியாது. அதைத் தகுதியான ஞான மகான்கள் மூலமும், அவர்கள் மேல் கொண்ட ஆழ்ந்த பக்தியைக் கொண்டும் அவர்கள் கொடுக்கும் விளக்கங்களை உள்வாங்கி சிந்திப்பார்களேயானால் மட்டுமே இது நிச்சயம் விளங்கும்.

அவ்வாறு தான் நாம் அனைவரையும், மற்றும் உலகத்தில் உள்ள அனைத்து முரீதுகளையும் வாப்பா நாயகம் வைத்திருக்கிறார்கள். நாமெல்லாம் மிக பெரிய பாக்கியவான்கள். இன்றைய காலத்தின் குத்பான இளைய வாப்பா நாயகம்

அவர்கள் அதே போன்று நம்மையெல்லாம் வழி நடத்தி ஹக்கின் வழியிலே கொண்டு சேர்த்து நம்மையெல்லாம் சொர்க்கவாதிகளாக ஆக்க வேண்டி அவர்களிடமே பிரார்த்தனை செய்கிறேன்.

## திருக்குடும்பத்தினரால் பாதுகாப்பு

ஜனவரி 3 ஆம் தேதி 2024 நமது ஆருயிர் ஷைகு நாயகம் நம்மையெல்லாம் விட்டு வெளிரங்கமான உடலை மறைத்துக் கொண்ட துயரமான நாள். நாம் அனைவரும் அந்த இறுதி நிகழ்வுக்காக திருச்சி சென்றிருந்த போது பல ஊர்கள் வெளிநாடுகளிலிருந்து வந்த பிள்ளைகளை சந்திக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. ஒவ்வொருவரிடமும் பேசும் போதும் அனைவருமே துக்கத்துடன் கனத்த இதயத்துடன் சொன்ன செய்தியெல்லாம் அல்லாஹ்வின் நாட்டபடி ஷைகு நாயகம் மறைந்துவிட்டார்கள், ஆனல் நம்மை திருக்குடும்பத்தாரின் திருக்கரங்களிலே விட்டுச் சென்றிருக்கிறார்கள், அது தான் மிக பெரும் பாக்கியம் என்று மனதிலே பெரும் நிம்மதியோடு அங்கே சொன்ன அந்தச் செய்தியை என்னால் மறக்கவே முடியாது. நான் பார்த்த அத்தனை பிள்ளைகளும் இந்தச் செய்தியைத் தான் சொன்னார்கள். அப்படி நாம் அவர்களது திருக்குடும்பத்தினரின் கரத்தில் பிடித்துக் கொடுக்கப்படவில்லையென்றால் அந்தச் சூழலை நம்மால் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது என்று தான் சொல்ல வேண்டும்.

தொடர்ச்சியாக இம்முறை நான் இந்தியா சென்றிருந்தபோது கூட மதுக்கூரில் அட்வகேட் கலீபா லியாகத் அலி மாமா அவர்களுடன் பேசிய போது முரீதுப் பிள்ளைகளான நாங்கள் மூத்த முரீது பிள்ளைகள் கலீபாமார்களுக்கு மிகப் பெரிய நன்றி கடன்பட்டிருக்கிறோம் மாமா, திருக்குடும்பத்தாரை சரியான முறையில் அறிமுகப்படுத்தி அவர்களை எப்படி அணுகி நம் வாழ்க்கையை ஒழுங்கு படுத்திக்கொள்ள வேண்டும் என்ற ஒரு நெறியை தெளிவை எங்களுக்கெல்லாம் ஏற்படுத்திக் கொடுத்ததற்கு நாங்களெல்லாம் மிகப் பெரிய பாதுகாப்பு வளையத்தில் வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறோம் என்று கூறினால் அது மிகையாகாது. மறைந்தவர்களை என்னில் காணுங்கள் வாப்பா நாயகத்தின் வாரிதாத்தின் தாற்பரியத்தை விளங்கிக்கொண்டோம் என்றால் நாம் இன்றும் என்றும் சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்களுடனே இருந்து கொண்டு இருக்கிறோம் என்று மிக சரியாக விளங்கிக்கொள்ள முடியும்.

## இக்காலத்தின் குதுப்.

இத் தாற்பரியத்தினை விளக்கிச் சொல்ல மேலும் சில பதிவுகளை மேற்கோள் காட்ட விரும்புகிறேன். நாம் எல்லாம் சுபுஹான மவ்லிது ஓதியிருப்போம். அதன்

தமிழ் அர்த்தத்தைப் படித்திருப்போம். ஒரு ஹிக்காயத்தில், இந்த உலகத்தை ஹக்கு படைக்கும் போது ஜிப்ரீல் அலைஹிவஸல்லாம் அவர்கள் படைக்கப்பட்ட பிறகு அவர்கள் தூரத்தில் ஒரு நட்சத்திரத்தின் ஒளியைப் பார்க்கின்றார்கள். அந்த நட்சத்திரத்தைப் பற்றி அல்லாஹ்விடம் கேட்கும்போது அல்லாஹ் உங்களைப் படைப்பதற்கு முன்பு 70 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் படைக்கப்பட்ட நூரே முஹம்மதியாவின் ஒளியென்று கூறினான். இந்த உலகத்தைப் படைப்பதற்கு முன்பே தோன்றியே நூரே முஹம்மதியாவின் ஒளியிலிருந்து தான் அனைத்தும் தோன்றியது என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆதம் அலைஹிவஸல்லாம் அவர்களுடைய முதுகுத் தண்டிலிருந்த அந்த ஒளி, பிறகு வந்த ஒவ்வொரு நபிமார்களுடன் பயணம் செய்து இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் முதுகுத் தண்டிற்குச் சென்று, பின் அப்துல்லா (ரலி) அவர்களின் முதுகுத் தண்டில் பயணம் செய்து பின் முஹம்மது நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமாக இந்த உலகத்திற்கு அருட்கொடையாக மனிதராகத் தோன்றி வழிகாட்டிச் சென்றிருக்கிறது. அந்த ஒளி தொடர்ச்சியாக இக்காலத்திலும் அஹ்லுல் பைத்துக்களாக வழி காட்டும் முன்னறிவிப்பு செய்வதாகவே அவர்களது இறுதிப் பிரசங்கத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்த உலகத்தில் உள்ள மூமின்கள் கியாமத் நாள் வரை எப்படி நம்முடைய வாழ்க்கையை தவ்ஹீதுடைய விளக்கத்தைக் கொண்டு வாழ வேண்டும் என்பதை எப்படி செயல்படுத்த முடியும் என்ற ஒரு கேள்வி. மிகப்பெரிய வெற்றிடம் அங்கே இருக்கத்தான் செய்கிறது. குர்ஆனில், மிகவும் அழகாக (முஃமின்களே) நிச்சயமாக உங்களிலிருந்தே ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கின்றார் என்ற வசனம் ஒரு நிகழ்கால வாக்கியமாக அது அமைப்பப்பட்டிருக்கிறது. உங்களில் ஒரு நபி வந்தார் என்று அது இறந்தகால வாக்கியமாக அமைக்கப்படவில்லை. அது தான் அதில் உள்ள நுட்பம். நம்மைப் போல் ஞான விளக்கம் உள்ளோர் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், ஒவ்வொரு காலத்திலும் அல்லாஹ்வின் தூதராக ஹக்கிலிருந்து அனுப்பி வைக்கப்படுகிறார்கள் என்ற நுட்பமான விளக்கத்தை, இது தொடர்பாக எந்தவித சலனமும் நம் மனதில் வந்து விடக்கூடாது. அப்படியென்றால் யார் கையில் இன்று கொடுக்கப்பட்டுள்ளோம்.

ஹக்கிலிருந்து வெளிப்படுத்தப்பட்டு இன்றைய காலத்தின் குத்பாக யார் இருக்கிறார் என்பதை தெளிவாக நாம் அறிந்து கொள்ள வேண்டும். வாப்பா நாயகம் தான் நம்முடன் இருக்கின்றார்கள், இருந்து கொண்டிருக்கிறார்கள் எப்போதும் இருப்பார்கள், நாமும் அவர்களுடன் தான் இருப்போம் அப்படி என்கின்ற தெளிவான நிலையை எக்கணமும் மறவாதிருக்க வேண்டும்

**நாளை நம் நிலை என்ன?**

நாளை நம் நிலை என்ன என்று கேள்விக் கேட்கும் போது எங்கே போகப் போகிறோம்? தெரியவில்லை. அன்று ஒரு நாள் இளைய வாப்பா நாயகம் பேசிக்கொண்டிருக்கும் போது பிரபஞ்சம் முடிவுக்கு வரப்போகுது என்று சில செய்திகள் உலா வருகிறது என்று கூறிய போது அவர்களுக்கே உரிய புன்னகையுடன் எங்கே போகப்போகிறது. மாற்றமடைந்து இங்கே தான் இருக்கப் போகுது என்று விளக்கம் அளித்தார்கள். எப்படி மாறினாலும் நாங்கள் உங்களுடனே இருக்கவேண்டும் என்று வேண்டுகோள் வைத்தேன்.. அந்தத் தெளிவை நாம் அடைந்துவிட்டால் மனதில் எந்தவித குழப்பத்திற்கும் வேலையில்லை.

**ஷஃபா அத்**

ஒரு தடவை வாப்பா நாயகத்திடம் ஒருவர் கேட்டார். மறுமையில் ஷபாஅத் செய்வாங்க வாப்பா. அந்த ஷபாஅத்திற்கு உரியவராக இருக்க வேண்டும், ரசூலுல்லாஹ்வை கனவில் காண வேண்டும் என்றுசொல்லும்போது, உங்களுக்கு அந்த பாக்கியம் கிடைக்கும் என்று வாப்பா நாயகம் பதில் சொல்லிட்டு, அதான் அவங்க ஏற்கனவே ஷபாஅத் செஞ்சிட்டாங்களே? இனி என்ன செய்ய வேண்டும்? என்றார்கள். தாற்பரியத்தை விளங்கியவர்களுக்கு இந்த வெளிரங்கமாக சொல்லப்பட்ட விஷயங்கள் எல்லாம் பெரிது கிடையாது. நாம் வேறு கிதாபுகளில் இப்படி அப்படி இருக்கிறதே என்று குழப்பம் கொள்ளாமல் நம் அறிவைக் கொண்டு ஆத்மார்த்தத் தெளிவில் இருந்து விட்டோம் என்றால் இந்தக் கேள்விக்கெல்லாம் இடமே இல்லை. இன்றைய அமுதமொழியில் கூட திக்ரைக் கொண்டு உங்கள் மனதை திருப்தி படுத்தமுடியுமா? என்பது போல் கேள்விகேட்டு , உங்கள் மனதைத் திருப்திப்படுத்தலாம். ஆனால், அறிவைக் கொண்டுதான் அல்லாஹ்வை அறிய வேண்டும் என்று அருளியுள்ளதை நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.. ஆகவே தாற்பரியத்தை மிகச் சரியாக விளங்கிவிட்டோம் என்றால் மனதில் எந்தவித ஊசலாட்டத்திற்கும் இடமில்லை.

**உதயதின விழாவின் நோக்கம்**

ஒருவர் வக்கீல் மாமாவிடம், கந்தூரிகள் கொண்டாடி சாப்பாடு கொடுக்கிறோம், அதனால் என்ன நன்மை இருக்கிறது? என்று கேட்டார். சாப்பிடுபவர்களுக்கு நன்மை இருக்கு தானே என்று வேடிக்கையாக பதில் சொல்லிவிட்டு, மீலாதுடைய உணவு என்றால் ரசூலுல்லாஹ்வின் தாற்பரியத்தை நாம் உணர்ந்துள்ளோம், அந்த

நினைவுகூருதலின் அடிப்படையில் அந்த பரக்கத்தை கொண்டு மிகப்பெரிய நன்மை அந்த உணவில் இருக்கிறது என்று சொன்னார்கள். விழாக்களின் நோக்கமே நினைவூட்டுதல் தான். நாம் யார், எங்கிருந்து வந்தோம்? எங்கே போய்க்கொண்டிருக்கிறோம்? என்பதை விளங்கத் தான். ஒவ்வொரு சடங்கும் கோர்வையாக நினைவுப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதுதான். ஐந்து வேளை தொழுகையின் மூலம் நாம் இறைவனை நினைவு கொள்கிறோம். இறைவனுக்கு ஏதும் நன்மை இருக்கிறதா? நமக்குத் தான் நன்மை. நன்றியோடு நெகிழ்ந்து போகின்றோம்.

வாப்பா நாயகத்தின் உதய தின விழாவை சில நாட்களுக்கு முன்பு ராதிப் மற்றும் கஸீதத்துல் அவ்னிய்யா மற்றும் கஸீதத்துல் அஹமதிய்யா ஓதி முதல் பாகமாக கொண்டாடினோம். இப்போது, இந்தச் சிறப்புக் கூட்டம் மூலம் கொண்டாடுகிறோம். வாப்பா நாயகம் நம்முடன் சுமார் 25 ஆண்டுகள் பயணம் செய்ததைத் தான் இங்கு நாம் நினைவு கொண்டு வருகிறோம். இது எவ்வளவு பெரிய மன நிறைவைத் தருகிறது என்று அனுபவித்துக் கொண்டிருக்கும் அனைவருக்கும் தெரியும். இது போன்ற செய்திகளை சிலாகித்துப் பேசி மனது அமைதி அடையாமல் வாழ்க்கையில் என்ன இருக்கிறது? இன்று வேலை செய்கிறோம், சம்பாதிக்கிறோம், சாப்பிடுகிறோம், நாளையும் அதே தான். இப்படியே தினமும் சென்றால் அதன் முடிவு எங்கே? இதற்கெல்லாம் தீர்வு, வாப்பா நாயகத்துடன் இருக்கிறோம் என்ற தெளிவு இருந்தாலே ஒழிய இதற்கு முடிவே இல்லை. இது போன்ற நிகழ்வுகளை முன்னெடுத்து நடத்துவதற்கு முக்கியக் காரணம், அடையும் நன்மைகள், தவ்ஹீதை நினைவுபடுத்தி, மீண்டும் மீண்டும் புதுப்பித்துக்கொள்வது தான்.

**நாம் வேண்டிக் கேட்கும் துஆ**

உங்களோடு இருக்க வேண்டும் என்று இளைய வாப்பாவிடம் கூறிய போது, அதற்குத் தகுதியானவர்களாக ஆக எங்களுக்கு அருள் புரிய வேண்டும் என்று வேண்டியபோது, வாப்பா நாயகம் புன்னகைத்தார்கள். நமக்குப் பேராசை இருக்கு. உலகம் நாளை எப்படி மாறினாலும் எனக்கு எந்தவிதமான பதற்றமும் இல்லை. நான் ஒரு நேரத்தில் பாரமாக நினைத்த எந்த விஷயமும் இப்போது எனக்கு பாரமில்லை. காரணம், இந்தத் தெளிவும் வாப்பா நாயகத்தின் அருட்பார்வையிலும் திருக்கரங்களில் ஒப்படைக்கப்பட்டதினால், அவர்கள் திருப்பாதங்களுக்கு கீழே இருப்பதனால் எமக்கு அச்சமில்லை. ஆனால் அதற்கு முழுமையானவர்களாக இருக்க வேண்டும். அதற்கு ஒவ்வொருவரும் தங்களுடைய சுயமுயற்சியைக் கொண்டுதான் செயல்பட வேண்டும். நான் யாருக்கும் சிபாரிசு செய்ய இயலாது. அந்த பந்தம் ஒவ்வொரு முரீதுக்கும் வாப்பா நாயகத்திற்கும் இடையிலானது.

ஒவ்வொருவரும் வாப்பா நாயகத்திற்கு உகப்புக்குரியவர்களாக ஆக்கிக்கொள்வது ஒவ்வொருவரின் முயற்சியிலே உள்ளது. அல்லாஹ்வைப் பற்றி அறிந்தவர்களிடம் கேட்டுக்கொள்ளுங்கள் என்று குர்ஆனில் வருகிறது. அப்படியென்றால் குருமார்களைத் தான் நாம் அண்ட வேண்டும். வேறு ஆலிம்களிடம் சென்றால் அவன் நிலை என்னாவது? அப்படியெல்லாம் நாம் ஒரு காலத்தில் இருந்திருப்போம். ஆனால், இன்று நாம் பெரும் பாக்கியம் செய்தவர்கள், நாம் அனைவரும் தேர்நதெடுக்கப்பட்டு, ஒப்படைக்கப்பட்டு, வாப்பா நாயகம் மூலமாகவே ஹக்கைப் பற்றி அறியக் கூடிய பாக்கியத்தைப் பெற்றுள்ளோம். இதனை என்றென்றும் பெறக்கூடியவர்களாக இருக்க ஹக்கிடம் வேண்டி நிற்போம்.

## நமது தலையாயப் பணி

ஹக்கினை நினைவுறுத்தும் தளங்கள் தான் ஹக்கில் இரண்டறக் கலந்த மஹான்களின் நினைவிடங்கள் என்ற தாற்பரியத்தினை உணர்ந்தவர்களாக, நமது சங்கைமிகு வாப்பா நாயகத்தின் தர்ஹா கட்டுமானப் பணிகளை சிரமேற்கொண்டு நம்முடைய முதல் கடமையாக மிகவும் சிறப்பாக செய்ய வேண்டும். அப்பணியில் நாம் அனைவரும் நம்மை முழுமையாக இணைத்துக் கொள்ளவேண்டும், அதற்கு உண்டான பொருளாதார வசதி, உடல் ஆரோக்கியம் மற்றம் அனைத்தையும் அருள வேண்டும் என்று இளைய வாப்பா நாயகம் அவர்களிடம் இறைஞ்சிக் கேட்டவனாக வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். வஸ்ஸலாம்.

## ஜனாப். ஃபைஜல் அஹ்மது ஹக்கியுல் காதிரி அவர்களின் உரை

ஷைகு நாயகம் மறைந்து விட்டார்கள் என சிலர் கூறுகின்றனர். அது அப்படி இல்லை, நான் ஒரு சிறிய கனவு கண்டேன். இந்த முறை இளைய வாப்பா நாயகம் சிங்கப்பூர் வந்தவுடன் அவர்களை அழைப்பதற்காக நான், மக்தூம் மற்றும் சில ஆத்ம சகோதரர்கள் விமான நிலையத்திற்குச் சென்றோம். அவர்களை அழைத்து வீட்டில் விட்டுவிட்டு நான் என் வீட்டிற்குச் சென்றேன். அப்போது சிறிய உறக்கம் கொண்டேன். அப்போது அந்தக் கனவில் இளைய வாப்பாவிடம் பேசிக்கொண்டு இருக்கிறோம். அந்த நேரத்தில், வாப்பா நாயகம் நடந்து செல்கிறார்கள். அவர்களுக்குப் பின் இரண்டு மூன்று பேர் நடந்து செல்கின்றனர். இதன் மூலம் ஷைகு நாயகம் தான் இளைய வாப்பாவாக சிங்கைக்கு வந்துள்ளார்கள் என்று அந்தக் கனவு மூலம் நான் உணர்ந்து கொண்டேன். அது ஒரு பாக்கியம். சிங்கப்பூர் சபை இன்றைய வாப்பாவுடன் மிகவும் நெருக்கமாக இருக்கக்கூடிய பாக்கியம் பெற்றுள்ளோம். ஞான விஷயங்களை மிகவும் எளிதாகவும் விரைவாகவும் அவர்கள் இடத்திலிருந்து நாம் பெற்றுக்கொள்ள முடியும்

60 வருடத்திற்கு முன்பு எங்களுடைய பாட்டனார் ஃபஜ்லுல்லாஹ் மரைக்காயர் மற்றும் தம்பி மரைக்காயர் அவர்களுக்கும் கிடைத்த பாக்கியத்தை நாங்கள் இருவரும் நானும், அண்ணன் ஜைன் அவர்களும் பெற்றுக்கொண்டிருக்கிறோம். தந்தை யாஸீன் நாயகத்தின் மறைவிற்குப் பிறகு நம் ஷைகு நாயகத்திற்கு எங்களுடைய பாட்டனார் இருவரும் எவ்வாறு சங்கை செய்தார்களோ அதே போல் தான் இப்போது ஷைகு நாயகத்திற்கும் இளைய வாப்பாவிற்ம் நாங்கள் சேவை செய்யும் பாக்கியம் பெற்றுள்ளோம்.

தாயாரிடம் சில நாட்களுக்கு முன்பு பேசிய போது சிறிய விஷயங்களைக் கூட வாப்பா நாயகத்திடம் ஒப்படைப்பார்கள். அதே போல் தான் இனிமேல் இளைய வாப்பாவிடம் அனைத்தையும் கேட்டுச் செய்யுங்கள் என்று என் தாயார் அறிவுரை கூறினார்கள்.

வாப்பா நாயகம் நம்மிடம் அதிகம் வலியுறுத்துவது என்னவென்றால் மன் அரப நப்ஸஹு பகது அரப ரப்பஹு. எவன் தன்னை அறிந்தானோ அவன் தன் ரப்பை அறிந்தவன் ஆவான். இறையருட்பாவில் ஒரு பாடல் வருகிறது.

ஆதியிலே சூனியமாய் அதன் பின்னும் பல படிகள். இந்த வாரிதாத்தை ஆழமாக ஆராய்ந்தாலே ஹக்கை நாம் எப்படி அறியலாம் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். மண்ணிலிருந்து படைக்கப்பட்டோம். அருவாகினோம் உருவாகினோம். இவ்வாறு ஆராய்ச்சியை மேற்கொள்ளவேண்டும். மேலும் பல ஞான விஷயங்களைக் கற்று அறிந்து வருங்காலத் தலைமுறைக்கு ஞானம் கற்றுக்கொடுக்கக்கூடிய ஆற்றலை வேண்டி என் உரையை நிறைவு செய்கிறேன். வஸ்ஸலாம்

**ஜனாப். ஷேக் அல் மஃதூம் ஹக்கியுல் காதிரி அவர்களின் உரை.**

சங்கைமிகு ஷைகு வாப்பா நாயகம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்) அவர்கள் நம் நாயகம் ரசூலாகவே (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) வாழ்ந்தார்கள். அவர்கள் மறையும் போது, ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மறையும் போது அவர்கள் உலகிற்கு இரண்டு விஷயங்களை விட்டுச்சென்றர்கள். ஒன்று அவர்களின் திருக்குடும்பத்தார்கள் (அஹ்லுல் பைத்துகள்) மற்றொன்று திருக்குர்ஆன். அதைப் போலவே, அதன் தொடர்ச்சியாகவே நம் கண்மணி நாயகம் அவர்கள் நமக்கு இரண்டு விஷயங்களை விட்டுச் சென்றுள்ளார்கள். ஒன்று அவர்களின் திருக்குடும்பத்தார்கள், (அஹ்லுல் பைத்துகள்) மற்றொன்று அவர்களின் நூல்கள். அதாவது, அவர்களின் சங்கிலித் தொடராய் கண்மணி இளைய வாப்பா நாயகம், மற்றும் அவர்களின் நூல்கள்

மூலமாக நமக்கு வெளியாகிக் கெண்டுள்ள தௌஹீத் எனும் ஞானம். இந்த இரண்டும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தது. ஷைகிடம் சென்று அடிபணிந்து தான் தௌஹீதை விளங்கிக் கொள்ள முடியும். அதுபோல தௌஹீதை விளங்கினால் மட்டுமே உங்கள் ஷைகு யார் என்பதை உங்களுக்குத் தெரியவரும். இது இல்லாமல் அது இல்லை. அது இல்லாமல் இது இல்லை என்பது தான் உண்மை.

நான் சங்கைமிகு ஷைகு வாப்பா நாயகம் (குத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்) அவர்களின் சிங்கப்பூர் மற்றும் மலேசிய விஜயத்தில் கடந்து 13 வருடமாக இருக்கக்கூடிய பாக்கியம் கிடைத்தது. அதற்கு முன்பு இந்திய விஜயத்தில் நான் நாயகத்துடன் இருக்கும்போது. பிரயாணத்தில் தௌஹீதுடைய சந்தேகங்களைக் கேட்டுக்கொண்டே செல்வேன். தொடர்ந்து விளக்கங்களைக் கொடுத்துக் கொண்டே வருவார்கள். ஒரு முறை கடலூரில் இருக்கும் போது, நாயகத்திடம் எழுப்பிய கேள்விக்கு அவர்கள் புன்முறுவலுடன் கொடுத்த பதில் பூரணப்படுத்தியது. எனது எல்லா சந்தேகங்களையும் நீக்கி என்னைப் பூரணப்படுத்தினார்கள். அதற்குப் பிறகு எனக்கு எந்தக் கேள்விகளும் இல்லை. அதற்கு பிறகு நான் சிங்கப்பூர் வந்தேன். இங்கு தௌஹீதின் முழுமையான நாயகத்துடன் ஆனந்தமாக அவர்களுடைய பூரணமான அன்பையும், தௌஹீத் எவ்வாறு நம் வாழ்வில் முழுமையாக உள்ளது என்பதையும் காட்டிக்கொடுத்து அவர்களது அருளையும் முழுமையான காட்சியாக காண்பித்தார்கள்..

2016 அல்லது 2017, நாயகம், சிங்கை விஜயம் முடித்துக் கிளம்புகிறார்கள். பிள்ளைகள் எல்லாம் உத்தரவு வாங்கிட்டோம். இரவு தனியாக இருக்கும் போது நான் சொல்கிறேன். சங்கைமிகு வாப்பா நாயகம் (குத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்) அவர்களிடம். நாளை இந்நேரத்தில் வெலிகமையில் இருப்பீர்கள். நான் தங்களைப் பிரிந்து இங்கு கஷ்டப்படுவோம், நீங்கள் இல்லாமல் நான் என்ன செய்வேன், என்றவுடன், சங்கைமிகு வாப்பா நாயகம் (குத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் கூறினார்கள். நீங்கள் ஏன் அப்படி நினைக்கிறீர்கள்? நாங்கள் எப்போதும் உங்கள் கூடவே இருக்கிறோம் என நினைத்துக் கொள்ளுங்கள் என அருளினார்கள். நல்லது, என நிம்மதி கொண்டாலும் அந்த ஏக்கம் இருந்து கொண்டே இருந்தது. அன்று இரவு தூங்கும்போது கனவு ஒன்று கண்டேன். நாமெல்லாம் சிங்கையிலிருந்து வெலிகமைக்குச் சென்றிருக்கிறோம். அங்கு நான் உணவு உண்ணும் பகுதியில் இருக்குபோது நாயகம் வருகிறார்கள். உணவு சாப்பிட்டீர்களா என என்னிடம் கேட்க, சாப்பிட்டோம் என்று கூறி நான் நாயகத்திடம் என் தேவைகளைக் கூறுகிறேன். நான் கூறியவுடன் அதை முழுமையாகக் கேட்டு

பிறகு இரு கரங்களையும் உயர்த்தி வாழ்த்துகிறார்கள். வாழ்த்திக்கொண்டே வருகிறார்கள். நாயகத்துடைய குரல் ஆனால் உருவம் நம்முடைய இளைய வாப்பா நாயகம், கனவு கலைகிறது.

அன்று நான் கேட்ட அந்த கேள்வி. வாப்பா நாயகம் (குத்தஸல்லாஹு ஸிர்ரஹூல் அழீம்) நீங்கள் இல்லாமல் நான் என்ன செய்வேன். அதற்கு வாப்பா நாயகம் எனக்கு காண்பித்த காட்சி, மேலும் அவர்கள் கூறிய நாங்கள் உங்கள் கூட தான் இருப்போம், இருக்கிறோம், இப்போதும் இருக்கின்றார்கள். இவ்வாறு நம் இளைய வாப்பா நாயகத்தின் குதுபிய்யதை, அவர்கள் தாற்பரியத்தை முன்பே வாப்பா நாயகம் (குத்தஸல்லாஹு ஸிர்ரஹூல் அழீம்) அவர்கள் காண்பித்துக் கொடுத்தார்கள். ஒரே காலகட்டத்தில் பல குத்புமார்கள் வாழ்ந்தார்கள்... தந்தை நாயகம், மகானந்த பாபா, வாப்பா நாயகம் (குத்தஸல்லாஹு ஸிர்ரஹூல் அழீம்) போன்றவர்கள். அதுபோல சமகாலத்தில் வாப்பா நாயகம் (குத்தஸல்லாஹு ஸுர்ரஹூல் அழீம்) அவர்களும், நம் இளைய வாப்பா நாயகம் அவர்களும் இருந்தார்கள்.

நாம் நமது இளைய வாப்பா நாயகம் அவர்களிடம் எப்படி நடக்க வேண்டும் என்பதை வாப்பா நாயகம் (குத்தஸல்லாஹு ஸிர்ரஹூல் அழீம்) அவர்கள் கற்றுக்கொடுத்து இருக்கிறார்கள். அவர்களுடைய சென்ற ஆண்டு இந்திய பயணத்தின் போதும், என்னை அவர்களுடன் முழுமையாக இருக்கச் செய்து நமது இளைய வாப்பா நாயகத்திடம் நாம் எவ்வாறு நடக்க வேண்டும் என்பதை முழுமையாக எனக்கு ஒரு பாடமாகவே எடுத்து அந்த விஜயத்தின் இறுதியில் என்னிடம் நேரடியாக படித்துக்கொண்டீர்களா என்று கேட்டார்கள்.

நாங்கள் இந்தியப் பயணத்தில் சென்ற ஒவ்வொரு இடத்திலும், அவர்கள் யார் என்பதையும், நாம் எவ்வாறு அவர்களுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் உணர்த்தினார்கள். அதனால் தான் நான் முதலில் சங்கலித் தொடர் என்றேன், ஏனென்றால், ஒரே சங்கிலி தான், ஒரே மெட்டல் தான் இன்றும் இருக்கின்றது. ஒன்றின் முடிவு மற்றொன்றின் ஆரம்பம் என்று இல்லை.. ஒரே உள்ளமை ஒரே தாற்பரியம் தான். நாமெல்லாம் மிகவும் கொடுத்து வைத்தவர்கள்.

அல்லாஹ் சொல்கின்றான், நீங்கள் எதை நேசிக்கிறீர்களோ அதைக் கொண்டு தான் உங்கள் சோதனைகள் வரும் என்று. நாம் நம்முடைய பல தேவைகளை நாயகத்திடம் கேட்கிறோம். தொழில், மனைவி, குழந்தைகள் என பல கேட்கிறோம். அதன் மூலமே சோதனைகளும் வரும். அதை எவ்வாறு வெற்றி காண்பது. தௌஹீதைக் கொண்டு தான்.

வாப்பா நாயகத்தின் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்) அவர்கள் மறையும் அந்தக் காட்சி, அந்தத் தருணத்தில் சொல்ல முடியாத சோகம், அழுகை, நான் நிலைகுலைந்துவிட்டேன். என்ன செய்வது என்று தெரியவில்லை. அந்த நொடியே மீண்டும் மீண்டும் என்னை வாட்டியது அதன்பிறகு ஒரு வாரம் கழித்து வாப்பா நாயகத்திடம் தொடர்பு கொண்டு என்னுடைய நிலையைக் கூறினேன். அப்போது. நாங்களும் அப்படித் தான் இருக்கிறோம். ஆனால் அப்பா கொடுத்த தௌஹீதைக் கொண்டு நாங்கள் எங்களை சமாதானப்படுத்திக்கொண்டோம். அப்படினு ஒரு வார்த்தை சொன்னாங்க. அந்த வார்த்தை எனக்கு மீண்டும் தெளிவைக் கொடுத்தது. தௌஹீது என்றால் என்ன? தௌஹீதின் வெளிப்பாடு என்ன என்பதை எனக்கு நினைவுபடுத்தியது. இதுபோல வாழ்வின் நம்மை நிலைகுலையச் செய்யும் அத்தனை தருணத்திலும் நம்மை உயிர்ப்பிப்பது தௌஹீதின் முழுமையான நம்முடைய வாப்பா நாயகமே.

நம் வாழ்வின் அனைத்துமே நம்மைத் தடுமாற்றத்திற்குத் தள்ள கூடிய விஷயங்கள் தான். சொத்து சுகமாக இருக்கட்டும், மனைவி மக்களாக இருக்கட்டும், நாம் விரும்பும் அனைத்துமே தடுமாற்றத்திற்குத் தள்ளக்கூடிய விஷயங்களாகத் தான் இருக்கிறது. அதிலிருந்து மீண்டு வர, இருக்கும் ஒரே ஆயுதம் தௌஹீது. தௌஹீதை நீங்கள் படிக்கும் போதுதான் உங்களால் உங்கள் ஷெய்கு யார் என்பதை அறிய முடியும். உங்கள் ஷைகிடம் ஃபனா ஆகிவிடுவீர்கள். அதற்குப் பிறகு எந்தக் கேள்வியும் உங்களிடம் இருக்காது. வாப்பா நாயகம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்) அவர்கள் நம்மிடம் தௌஹீதைக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது நமக்கு அவர்களே ஒரு சங்கிலித் தொடராக அவர்களே வெளியாகி இன்று நம்மிடையே அருள் புரிகிறார்கள். காட்சியளிக்கிறார்கள் ரசூலல்லாஹ்விடத்தி லிருந்த அதே தாற்பரியம், அதே குதுபிய்யத், இன்று நம் கண் முன் காட்சியளிக்கிறது. இது நமக்கு கிடைத்த மிகப் பெரும் பாக்கியம்.

ஒரு சிறிய சம்பவம். முன்பு ஒரு காலத்தில் குத்புமார்களிடம் சாரை சாரையாக மக்கள் பைஅத் வாங்குகிறார்கள். அவர்கள் வாழ்ந்த பகுதியிலே அந்த குத்புமாரை விட அதிகம் வயது உடைய ஒருவர் பைஅத் வாங்க வருகிறார். அவரின் எண்ணங்கள் எப்படி இருக்கிறது என்றால். இவர்களை நாம் தூக்கி வளர்த்துள்ளோம். இவர்கள் நமக்கு இளமையானவர்கள். இவர்களிடம் எப்படி நாம் பைஅத் வாங்குவது, ஷைகாக ஏற்றுக்கொள்வது என்ற ஒரு தயக்கம் ஏற்பட்டது. இதை அந்த குத்புமாரிடமே சொல்லிவிடுகிறார். ஆனாலும் பைஅத் வாங்கணும். குத்புமாரும் அதை விளங்கிக்கொண்டே பைஅத் அளிக்கிறார்கள். காலங்கள் உருண்டோடுகின்றன. அப்போது ஒரு கட்டத்தில் மற்ற முரீதுகள் எல்லாம் விலாயத்தின் தன்மை அடைகிறார்கள். அதை அவர்கள் உணர்கிறார். இந்த

மனிதரும் அவர்களுடன் இருக்காங்க, ஆக்கங்களையும் பேசுறாங்க, ஆனால் விலாயத்தின் தன்மையை அவரால் ரசிக்க முடியவில்லை. இதையும் அந்த ஷைகு அவதானித்துக்கொண்டே வருகிறார்கள்.

ஒரு நேரத்தில், பக்கத்து தேசத்தில் தவ்ஹீது சம்பந்தமான வாதம் இருக்கிறது. இந்த ஷைகு அதற்கு ஒரு 3,4 முரீதுகளை அனுப்புகிறார்கள். அப்போது அந்த முதிர்ந்தவரையும் சேர்த்து அனுப்புறாங்க. அங்கு என்ன நடந்தாலும் உங்கள் ஷைகின் பாதுகாப்பு இருக்கு. நீங்கள் போய் உங்கள் விளங்களைக் கொடுங்க என்று அந்த ஷைகு வாழ்த்தி அனுப்புறாங்க. துவைதவாதிகள்– அத்வைதவாதிகள் இருக்காங்க. ஒவ்வொருவரும் தங்கள்விளக்கங்களைக் கொடுத்து வருகிறார்கள். அந்த முதிர்ந்தவரின் விளக்கம் திருப்திகரமாக இல்லை. மற்ற முரீதுகளின் விளக்கம் ஏற்கப்பட்டு அவரின் விளக்கம் ஏற்கப்படாமல் இருந்தது. அடுத்த நாள் முடிவு அறிவிக்கப்படும். யாருடைய வாதம் ஏற்கப்படாமல் இருக்கிறதோ அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படும். எனவே, அந்த ஒருவரின் வாதம் ஏற்கப்படாததால் அவர்களுடைய அந்த அணியையே உயரமான மலையிலிருந்து தள்ளிக் கொன்று விடுங்கள் என்றார்கள். அவருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அவர் தடுமாறுகிறார். ஒரு இடத்தில் அவரை உயரமான மலையிலிருந்து தள்ளப் போகிறார்கள். அவரால் மற்றவர்களும் பிரச்சினைக்கு ஆளாகிவிட்டார்கள்.

அவருடைய குறையை எண்ணி வருத்தப்படுகிறார். தன்னுடை தௌஹீதின் குறையை உணர்கிறார். ஆனால் காலம் கடந்தது. தண்டனை நிறைவேறும் நேரம் நெருங்கியது. அனைவரையும் ஒரு மலை உச்சியிலிருந்து தள்ளப் பேகிறார்கள். அப்போது அனைவரும் ஷைகு சொன்னதை ஞாபகத்தில் வைத்துக் கொள்கிறார்கள். தள்ளப்பட்டார்கள்.

மலை உச்சியிலிருந்து தள்ளினாலும் அனைவரையும் ஒரு படியிலிருந்து தள்ளப்பட்டது போல் தான் அனைவரும் உணர்கிறார்கள். காப்பற்றப்படுகிறார்கள், அந்த முதிர்ந்தவரும் காப்பாற்றப்படுகிறார், ஆனால் அவர் கண் பார்வை போய் விடுகிறது.மற்றவர்களுக்கெல்லாம் ஒரே குழப்பம். அவருக்கு பயங்கரமான ஒரு அதிர்ச்சி. அவர் அழுது புலம்பி தன் ஷைகிடம் மன்றாடிக் கொண்டே ஊருக்குச் செல்லப் புறப்படுகிறார். அப்போது அவருடைய ஷைகு அவர்களிடம் உதயம் ஆகிறார். அந்த விலாயத்தின் தன்மையை விளக்குகிறார். நீங்கள் என்னை இப்போது தான் பூரணமாக ஏற்றுக்கொள்கிறீர்கள். இது நாள் வரை நீங்கள் தௌஹீத் என்றால் என்ன என்று படித்தாலும். உங்களுடைய குருவாகிய என்னை நீங்கள் முழுமையாகப் பார்க்கவில்லை. உங்கள் நண்பராகிய என் தந்தையின் மகனாக, நீங்கள் தூக்கி வளர்த்த பிள்ளையாக, உங்கள் வயதைக் காட்டிலும்

இளமையாக இருக்கும் உங்கள் அன்பு உறவினரைப் போலவே என்னைக் கண்டீர்கள். இப்படி இருக்கும் போது எப்படி உங்கள் தௌஹீத் பூரணப்படும். என்று கூறி தன்னுடைய கருணையால் அவருக்கு ஞானத்தைப் பூரணப்படுத்தினார்கள். ஆனால் இன்னும் அவருடைய பார்வை அவருக்குக் கிடைக்கவில்ல, அவருடைய நண்பர் அவரிடம் இது குறித்துக் கேட்டார், உங்களுடைய பார்வைக்கு என்ன ஆனது என்று, அவர் கூறினார். தெரியவில்லை என்றும் நடந்த அனைத்தையும் கூறினார். அப்போது அவர் கேட்டார், உங்களை மலை உச்சியிலிருந்து தள்ளும் போது என்ன நினைத்துக் கொண்டீர் என்று, அவர் கூறினார். என்னுடைய குரு கூறியது உண்மையென்றால் நான் பிழைத்துக் கொள்வேன் என்று நம்பினேன் என்று. அப்போது தான் அந்த நண்பர் கூறினார், நீங்கள் உங்கள் குரு அருளிய வார்த்தையில் மட்டுமே உறுதியாக இருக்க வேண்டுமே, அல்லாமல் அந்த வார்த்தையை எடை போட்டுப் பார்க்கக் கூடாது..... உங்கள் ஷைகை நம்பினீர்கள் என்றால் முழுமையாக சரணடைய வேண்டும். ஒரு சிறு கரும்புள்ளி ஏற்பட்டாலும் நாம் வாழ்வில் பெரும் துயரமாக அமைந்து விடும்.

இதனை நாம் அனைவரும் உணர்ந்திருப்போம். அது வாப்பா நாயகம் நம்மிடம் சொன்ன விஷயங்களாக இருக்கட்டும். அதில் மட்டுமே நம்முடையே கவனம் இருக்க வேண்டும். அது எப்படி நடக்கும், ஏன் நடக்காது, எப்படி நடக்கப் போகுது போன்ற ஊசலாட்டங்கள் வராமல், இது போன்ற எண்ணங்களை முறியடித்து ஒரு பூரண முரீதாக ஆகுவதற்கு நாம் தான் முயற்சி செய்ய வேண்டும். அதற்கு ஒரே வழி அவர்கள் மேல் நமக்கு உள்ள அன்பும் உறுதியான, தெளிவான நம்பிக்கையும் தான். அவர்களுடைய அருளை வேண்ட வேண்டும். நம்முடைய சோதனைகள் நம்மிடத்திலிருந்து தான் ஆரம்பம் ஆகிறது. அமைதியாக இருக்கும் வரை, நம்மிடம் எந்த ஒரு சலனமும் இல்லை, சோதனை இல்லை. நம்மிடம் ஷைகு இருக்கும் வரை நமக்கு எந்தவித ஆபத்தும் இல்லை. அது எப்போது நீங்கி வேறு ஆசாபாசங்களுக்கு உட்படும் போது தான் சலனங்கள் சோதனைகள் தொடங்க ஆரம்பிக்குது. நம் ஷைகிடம் பாதம் பணிந்தவனாக, என்றுமே கதியாக இருக்க வேண்டும்.

குத்புமார்களை நம்மால் முழுவதுமாகப் புரிந்துகொள்ளவோ அவர்களுடைய வல்லமையை அளவிடவோ முடியாது. ஆனால் நாம் நம் அறியாமையில் அவர்களை மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்க முயல்வது நம் அறியாமையே.

நம் இளைய வாப்பா நாயகம் அவர்களிடம் கதைக்கும் போதும், அவர்களிடம் அறிவுரைகள் கேட்கும்போதும், அந்த குறுநகையாக இருக்கட்டும், ஞானம் தொடர்பாக நுணுக்கமான விளக்கங்கள் கூறும் போதும், ஆயிரமாயிரம் அர்த்தங்கள் உள்ளன. இளைய வாப்பா நாயகம் நம்முடன் இருக்கும் காலகட்டம்

மிகப் பெரியபொக்கிஷம். அதை நாம் மிகப் பூரணமாக, முழுமையாகப் பயன்படுத்தி, நாம் வெற்றிக்கண்டு, அவர்களின் திருப்பொருத்தத்திற்கு ஆளானவர்களாக, அவர்களின் நாட்டப்படி அவர்களின் எண்ணங்களை செயலாக்குபவர்களாக வீரர்களாக நம்மை ஆக்க அவர்களின் அருளாசியை வேண்டியவனாக என் சிற்றுரையை நிறைவு செய்கிறேன்.

## காலத்தின் நாயகர், சங்கைமிகு நாயகத்தின் 89 ஆம் ஆண்டு புனித பிறந்த தின விழா ஈரோடு.

இந்த நூற்றாண்டுக்கும் இனி வரும் நூற்றாண்டுக்கும் அதிபதியாகிய நமது செய்கு நாயகத்தின் புனித உதய தினவிழா ஈரோட்டில் கலீபா ஹாஜி. அப்துல் ஜப்பார் நினைவு அரங்கில் 5.5.24 ஞாயிறு காலை 8.30 மணிமுதல் 1 மணிவரை நடைபெற்றது.

திருச்சி. சையது இப்றாஹீம் யாஸீனிய் கிராஅத் ஓத, ஈரோடு முஸ்தபா, கலீல் யாஸீனிய் தலைமையில் கஸீதத்துல் அஹ்மதிய்யா கஸீதத்துல் அவ்னிய்யா ஓதப்பட்டது. யாஸீனிய் பேரவையினர் வஹ்தத்துல் உஜூது – அதன் தமிழாக்கம் வழங்க, தொடர்ந்து கலீல் யாஸீனிய் நெறியாளராக செயலாற்றினார். கலீபா. டாக்டர். அஷ்ரப் அலி எம்.டி.டி.எம். அவர்கள் தலைமை தாங்கி **வாப்பா நாயகம் ஆரம்பம் முதல் இன்று வரை** என்ற தலைப்பில் சிறப்புப் பேருரை நிகழ்த்தினார். உரை கேட்டு அனைவரும் வியந்து மகிழ்ந்தார்கள். முன்னதாக ஜனாப். ச.ஆரிப் பி.இ.ஹக்கிய்யுல் காதிரிய் வரவேற்புரை நிகழ்த்தினார். நி. அப்துல் நாசர் (தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம்) நன்றியுரை நல்கினார். விழாவில் சகோதர சமுதாயத்தினர் திரளாகக் கலந்து சிறப்பித்தனர். துஆ ஸலவாத்துக்குப் பின் அனைவருக்கும் தப்ரூக் உணவு வழங்கப்பட்டது. ஈரோடு ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை உறுப்பினர்கள் கோவை முஸ்தாக், ஈரோடு சண்முகம், எஸ். காதர், சரீப் அகமது,ஏ. மிப்தாஹ், ஏ. அகமது அப்ழல், மதீஹ், செய்திருந்தனர். ஏ. ராஜா முஹம்மது யாஸீனிய் (மதுரை) ஒளிபரப்புப் பொறுப்பை சிறப்பாகச் செய்தார்.

**தகவல்: ஜனாப். கொச்சின் பஷீர் அஹ்மது ஹக்கிய்யுல் காதிரிய்**

## 2024 குர்பானி – முக்கிய அறிவிப்பு

மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரியில் வழமைபோல் இவ்வாண்டும் கூட்டுக் குர்பானி கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏகத்துவ மெய்ஞ்ஞானசபை நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், யாஸீனிய் ஆலிம்கள், ஜமாஅத்தார்கள், மஹல்லா மக்களை அணுகி குர்பானி பங்குகளைச் சேர்த்து, அதற்குரிய தொகைகளைப் பெற்று ஏகத்துவ மெய்ஞ்ஞானசபைப் பொருளாளர் திருச்சி பக்ருதீன் ஹக்கிய்யுல் காதிரி அவர்களிடம் (செல் நம்பர் 9385343910) கொடுக்கலாம். வங்கியில் செலுத்துவோர் கீழே கொடுத்துள்ள வங்கிக் கணக்கில் செலுத்தி, அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை செயலாளர் சென்னை. எஸ்.ஐ. தவ்லத் ஹக்கிய்யுல் காதிரி (செல் நம்பர் 9941057785) அவர்களிடம் தெரிவிக்கவும்.



# மதுரஸா நன்கொடை



**திண்டுக்கல்**

மதுரை புதூர் எஸ். சாகுல் ஹமீது துஆ செய்ய மாதாந்திர சதக்கா ஏப்ரல் – மே 2 மாதத்திற்கு ரூ. 2000/–ம்,

காரைக்கால் அப்துல் பாருக் பாத்திமா கடன்கள் விரைவில் அற்று குடும்பத்தார் அனைவரும் நலமுடன் வாழ மாதாந்திர நன்கொடை ஏப்ரல் – மே 2 மாத நன்கொடை ரூ. 1000/–ம்,

எம். நதீர் ஜே. முஹம்மது சதக்கத்துல்லா நிய்யத்படி மாதாந்திர நன்கொடை ரூ. 1000/–ம்,

சென்னை – கலீபா எம். சக்கரை முஹம்மது அவர்களின் அக்காவும் – திண்டுக்கல் டி.கே. ஹபீப் முஹம்மது மனைவியுமான மர்ஹூமா எச். தங்கம்மாள் அவர்களின் மறுமை நல்வாழ்விற்க்கு துஆ செய்ய ரூ. 500/–ம்,

சோழிங்கநல்லூர் என். ஹைருன் னிஸா நிய்யத்து துஆ செய்ய ரூ. 500/– மற்றும் ரூ. 500/–ம்,

சென்னை எஸ். சர்மிளா உசேன் துஆ செய்ய சதக்கா ரூ. 2000/–ம் பிள்ளைகளுக்கு சிறப்பாக திருமணம் நடைபெற தொழில் வளர்ச்சிக்காக ரூ. 500/–ம்,

உண்டியல் காணிக்கை ரூ. 2000/ – மற்றும் ஹாஜத்துக்கள் நிறைவேற ரூ. 1000/– கணவர் என். ராஜா ஹுஸைன் வெளிநாடு நல்லபடியாக செல்ல நிய்யத் செய்து சதக்கா ரூ. 1000/–ம்,

கீழக்கரை ஆய்ஷத் மாபிதா அவர்கள் மகளுக்கு சாலிஹான மண மகன் அமையவும் – மகளுக்கு நல்லவிதமாக திருமணம் நடைபெறவும் வேலைக்கு நல்லபடியாக பயணம் செல்லவும் துஆ செய்ய ரூ. 500/–ம்,

பாக்கம் கோட்டூர் எம். அப்துல் ஹமீது அவர்கள் நிய்யத் நிறைவேறி யதை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 1000/ –ம் மற்றும் +ரூ. 1000/

திண்டுக்கல் பாத்திமா நலிஹா துஆ செய்ய ரூ. 1000/–ம்,

கிளியனூர் முஹம்மது ஃபஹிம் சம்பளம் முழுமையாக விரைவில் கிடைக்க வேண்டி நிய்யத் செய்து துஆ செய்ய ரூ. 500/–ம்,

திண்டுக்கல் ஆரிபா மர்ஹூம் (பி.கே.எஸ். குத்புதீன்) நிய்யத்து துஆ செய்ய ரூ. 500/-ம்,

திருவிடச்சேரி எஸ். ஹாஜா மைதீன் அவர்கள் தனது மகன் ரிஜ்வானுக்கு சாலிஹான மணப்பெண் அமைந்து விரைவில் திருமணம நடைபெற துஆ செய்ய ரூ. 2000/-ம்,

மன்னார்குடி மர்ஹூமா சல்மா பீவீ வருட பாத்திஹாவை முன்னிட்டு துஆ செய்ய காலை சிறப்பு உணவுக்கு ரூ. 5500/-ம்,

வழுத்தூர் அப்துர் ரஜாக் துஆ செய்ய ரூ. 1000/-ம்,

வழுத்தூர் ஹாஜா மைதீன் துஆ செய்ய ரூ. 1000/-ம்,

மன்னார்குடி பர்வீன் பானு அப்துல் கபூர் துஆ செய்ய ரூ. 2000/-ம்,

பேராவூரணி ரோஜா பானு நிய்யத் நிறைவேற துஆ செய்ய ரூ. 1000/-ம் ,

நீடுர் சுலைமான் துஆ செய்ய ரூ. 500/-ம்,

சென்னை யாஸ்மின் ரியாஜ் உடல் நலம் பரிபூரண சுகத்திற்கு துஆ செய்ய சதக்கா ரூ. 500/-ம்,

நாகூர் எ. ஹஸன் முஹம்மது துஆ செய்ய தப்ரூக்வாங்க ஹதியா ரூ. 1500/

குன்னூர் எஸ்.ஏ.பி. உமர் அவர்கள் துஆ செய்ய ரூ. 5000/-ம்,

சென்னை -ஹ. புரோஸ்கான் மகன் நூருல்லாகான் வேலையில் மேன் மேலும் உயர்ந்து உடல் நலத்துடன் நீண்ட ஆயுளுடன் சிறப்புடன் வாழ நிய்யத் செய்து துஆ செய்ய ரூ. 1000/-ம்,

காந்திகிராமம் பத்தூல் குடும்பத் தினர் சதக்கா ரூ. 500/-ம்,

ஒட்டன்சத்திரம் பி. ஜாஹிர் ஹுஸைன் நிய்யத் நிறைவேறியதை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 500/-ம்,

திண்டுக்கல் நாகல் நகர் எம். அன்வர்தீன் அவர்கள் மர்ஹூம் எஸ்.எ. முஹம்மதலி மர்ஹூமா ஜெய்னம்பீவி மஃபிரத்திற்காகவும் மனைவி ஆபிதாபேகம் உடல் நலம் சுகத்திற்க்கும் ஹஜ் சென்று அல்லாஹ் கிருபையால் ஏற்றுகொண்ட ஹஜ்ஜாக நிறைவேற துஆ செய்ய ரூ. 10000/-ம்,

பாக்கம் கோட்டூர் இம்தியாஸ் அஹமது உடல் நலம் பரிபூரண சுகத்திற்கும் வேலை சுலபமாக இருக்க வேண்டி நிய்யத் செய்து துஆ செய்ய ரூ. 500/-ம்,

மதுரை சபியாம்மா ஏர்வாடி செய்யிது இப்றாஹிம் வலியுல்லாஹ் அவர்கள் பெயரில் மவ்லிது ஷரீப் ஓதி துஆ செய்ய ரூ. 1000/-ம்,

மடத்துக்குளம் எஸ்.பி. சேக் அப்துல்லா மற்றும் சாலிஹா பீவி துஆ செய்ய மாதாந்திர நன்கொடை ரூ. 700/

ஈரோடு எஸ். முஹம்மது தௌபீக் துஆ செய்ய ரூ. 1000/-ம்,

சென்னை சனோபர் நிஷா ஹாஜத் நிறைவேற ஸலாத்துன் நாரியா ஓதி துஆ செய்ய ரூ. 1000/- மற்றும் உணவுக்காக ரூ. 1000/-ம்,

கேம்ப் துபை மௌலவி சத்தார்கான் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் மதுரஸா கட்டிட நிதி ரூ. 25000/-ம்,

மடத்துக்குளம் ஜுபைர் அஹமது அக்கா ரமீஜா பேகம் மகன் முஹம்மது ஆலா நபீஸ் பிறந்த தினத்தை முன்னிட்டு குடும்பத்தினர் அனைவரும் நோயற்ற நீண்ட ஆயுளுடன் நிறைந்த செல்வமும் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ நிய்யத் செய்து துஆ செய்ய (திண்டுக்கல் பி.எம்.ஏ. அஷ்ரப் அலி மூலம்) விஷேச உணவுக்கு ரூ. 10000/

' **வழங்கினர். வழங்கிய வள்ளல்களுக்கு அல்லாஹ் அவர்களின் நாட்ட தேட்டங்களை நிறைவேற்றியருள்வானாக! ஆமீன்!**

## குர்பானி கொடுக்கத் தயாரானதும் ஓதும் துஆ

إِنِّي وَجَّهْتُ وَجْهِيَ لِلَّذِي فَطَرَ السَّمٰوَاتِ وَالْأَرْضَ
حَنِيفًا وَّمَا أَنَا مِنَ الْمُشْرِكِينَ * إِنَّ صَلٰوتِي وَنُسُكِي
وَمَحْيَايَ وَمَمَاتِي لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ * لَا شَرِيكَ لَهُ
وَبِذٰلِكَ أُمِرْتُ وَأَنَا مِنَ الْمُسْلِمِينَ * اَللّٰهُمَّ تَقَبَّلْ
مِنِّي هٰذَا النُّسُكَ وَاجْعَلْهُ قُرْبَانًا لِوَجْهِكَ وَعَظِّمْ
أَجْرِي عَلَيْهَا

இன்னீ வஜ்ஜஹ்த்து, வஜ்ஹிய லில்லதீ Fபதரஸ் ஸமாவா(த்)தி, வல் அர்ழ ஹனீFப(ன்) வ், வமா அன மினல் முஷ்ரிகீன். இன்ன ஸலா(த்)தீ, வநுஸு(க்)கீ, வமஹ்யாய, வமமா(த்) தீ லில்லாஹி ரப்பில் ஆலமீன். லா ஷரீக்க லஹு, வபிதாலி(க்)க உமிர்த்து வஅன மினல் முஸ்லிமீன். அல்லாஹும்ம தகBப்Bபல் மின்னீ, ஹாதன் நுஸு(க்)க. வஜ்அல் ஹு, குர்பான(ன்)ல், லி வஜ்ஹி(க்)க, வ அழ்ழிம் அஜ்ரீ அலய்ஹா.

## குர்பானி கொடுக்கும் போது ஓதும் துஆ.

بِسْمِ اللّٰهِ اَللّٰهُ أَكْبَرُ اَللّٰهُمَّ هٰذَا مِنْكَ وَلَكَ

**பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்.அல்லாஹும்ம ஹாதா மின்க, வலக.**

# யா ஸய்யிதீ யாஸீன் அலீ !

யா ஸய்யிதீ யாஸீன் அலீ!
யா ஸய்யிதீ யாஸீன் அலீ!

திருநாள் இதோ... பெருநாள் இதோ...
குரு நாதரே யாஸீன் அலீ!

கலீல் நாதரின் கனிவாய் மொழி...
வெளியானதே யாஸீன் அலீ!

திருநபியின் திருப்பேரரே!
வலிகள் கோமான் வழித்தோன்றலே!

குதுபுல் ஃபரீது குலக்கொழுந்தே!
அவ்ன் நாதரின் அருவுருவே!

வருங்காலமே வரவேற்குமே!
எதிர்காலமே எதிர்நோக்குமே!

உள்ளம் எல்லாம் உங்கள் மணம்!
இல்லம் எல்லாம் குதூகலம்!

எமை ஆசிப்பீர் உமைப் போற்றவே...
புகழ்பாடவே அருள்வீர்களே!

தங்கள் தடம் பின்பற்றியே...
வாழும் வரம் தருவீர்களே!

யா ஸய்யிதீ யாஸீன் அலீ!
யா ஸய்யிதீ யாஸீன் அலீ!

பாடல் : மௌலவி.எஸ். பீர் முஹம்மது ஆலிம் யாஸீனிய்
ஹக்கிய்யுல் காதிரிய், ய.ய.பு., திருச்சி.






Registered with R.N.I. No. TNTAM / 2009 / 27865
Postal Registration No. DDL / 08 / 2024 - 2026
Date of Publication on 7th, Posted on 10th, of Every Month at H.P.O. Dindigul


## தர்ஜுமத்துல் குர்ஆன் – மஅத் தஃப்ஸீரி – வத்தப்ஸீர்

குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் தெளிவான தமிழ் மொழி பெயர்ப்பு - விளக்க உரை - தெளிவுரை - ஆன்மீக விளக்கக் குறிப்பு களுடன் கூடியது. தமிழில் இதுவரை வெளி வராத அற்புத படைப்பு. விலை ரூ.100 - (கொரியர் செலவு தனி)



## அரபு – தமிழ் (காமூஸ்) அகராதி

குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (ரலி) அவர்களின் கை வண்ணத்தில் உருவாகி, குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் அவர்கள் புதிய சொற்கள் இணைத்துப் பதிப்பித்த அருமையான கலைக் கருவூலம். அரபுக் கல்லூரி ஆசிரியர்கள் - மாணவர்கள் - ஆலிம் பெருமக்கள் அனைவரது கைகளிலும் தவழ வேண்டிய அற்புதமான அகராதி. இரண்டு பாகங்கள் விலை ரூ.500 (கொரியர் செலவு தனி)



தொடர்புக்கு : 98940 94490
99445 76165

Owned by Awniyya World Peace Trust Published by
J. Mohamed Rahmathulla B.A.B.Com.,Fakira Complex, 74, Palani Road,
Dindigul - 624001.Printer : R.VijayalakshmiPrinted at
Sri Agni Amman Printers,52, Palani Road, Near Sakthi Theatre, Dindigul - 624001.
Editor S. Hussain Muhammad Manbayee